South Harrow Food & Wine
தமிழ்க் கடை
Tel: 0181-4236321
234 Northolt Road, South Harrow, Middleser Ha2 8 du
தரமான இலங்கை Groceries
கடலுணவு வகைகள் மரக்கறி வகைகள்
CD Audio's அத்துடன் புதிய தமிழ்
திரைப்படங்கள் வாடகைக்கு
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.
(மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றிட)
We Aecept All Credit cards & Cheques

Euro 1.55 France: 10FFrs. Germany: 2.50DM Swiss: 2.50SFrs. GB: 90P

# ஈழமுரசு
பிரித்தானியா
Eelamurasu Weekly

முரசு: 4 06 – 12 ஒகஸ்ட் 1998 முழக்கம்: 186

Sakthy Video
Video Filming for Wedding's B'day's & any other Occasion's
By 3 CCD CAMERA'S
Please Cont:- 0181 -6956822
Mob: 0961313436
K.R.S.
33 Lee High Road, Lewisham Se -13
Tel: 0181-2979432

# மூன்றுமுறிப்பு இராணுவ வலயம் வீழ்ந்தது

## * கிலோ மீற்றர் பிரதேசம் புலிகள் வசம்
## * இராணுவம் மீது புலிகள் மற்றுமொரு பாரிய தாக்குதல்


(03.08.98)

மூன்றுமுறிப்பு பகுதியில் ஒரு கி.மீ நீளமுள்ள சிறீலங்கா இராணுவ வலயத்தை புலிகளின் சிறப்புப் படைப் பிரிவுகள் இன்று கைப்பற்றியுள்ளன.

நேற்று நள்ளிரவு 11.30 மணியளவில் விடுதலைப் புலிகளின் சிறப்பு படைப்பிரிவுகள் மூன்று முறிவுப் பகுதியில் நிலைகொண்டிருந்த சிறீலங்கா இராணுவத்தின் முன்னரங்கங்கங்கள் மீது தாக்குதலை ஆரம்பித்தனர். சிறீலங்கா இராணுவத்தின் அதி உச்ச பாதுகாப்பு வலையங்களில் ஒன்றாகக் கருதப்படும் இந் நிலைகள் மீது புலிகள் நடாத்திய தாக்குதல்களினால் நேற்றிரவு பூராவும் அப்பிரதேசத்தில் பாரிய குண்டுவெடிப்பு சத்தங்கள் கேட்டவண்ணம் இருந்தன. இன்று காலை 10.30 மணி வரை இப் பகுதிகளில் எறிகணை வீச்சு அதிர்வுகளும், வெடியோசைகளும் தொடர்ந்ததாக வன்னிச் செய்திகள் விபரம் தருகின்றன.

இன்று மாலை அங்கிருந்த கிடைத்த தகவல்களின்படி ஒரு

(☞ 2ம் பக்கம்)




## 14 விடுதலைப் புலிகள் சாவு
### புலிகளின் குரல்

(3.08.98)

சிறீலங்கா இராணுவ நிலைகள் மீது தாக்குதலை நடாத்திய புலிகளின் சிறப்பு அணிகளைச் சேர்ந்த 14 போராளிகள் இச் சமரில் வீரச்சாவை அடைந்துள்ளதாக புலிகள் உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளனர்.

கொல்லப்பட்ட போராளிக

(☞ 2ம் பக்கம்)

## 30 படையினர் பலி
### பலநூறு படையினர் படுகாயம்

03.08.98

நேற்றிரவு மூன்று முறிப்பு இராணுவ வலயம் மீது புலிகள் நடாத்திய அதிரடித்தாக்குதலில் 30 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். பலநூறு இராணுவத்தினர் படு காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

புலிகளின் தாக்குதல்கள் அதிகரிக்க ஆரம்பித்தவேளையில் தம் நிலைகளைவிட்டு இராணுவத்தினர் பின்வாங்கி ஓடியதனால் இராணுவ தரப்பில்

(☞ 2ம் பக்கம்)

## மூன்று முறிப்பு வெற்றிகரத் தாக்குதலில் கேணல் கிட்டு பீரங்கிப் படையணி

(பண்ணையார்)

விடுதலைப் புலிகளின் விசேட படையணிகளால் மூன்று முறிப்பு பகுதியில் அமைந்திருந்த இராணுவ வலயம் தாக்கியழிக்கப்பட்டுள்ளது.

கடந்த மே 29ம் திகதி மீண்டும் ஆரம்பித்த ஜெயசிக்குறுய் இராணுவ நடவடிக்கை சிறிதளவு முனனேற முடிந்த நிலையில் கடந்த இரண்டு மாதங்களாக மாங்குளத்தின் புறநகர்ப் பகுதியில் தடுத்துவைக்கப்பட்டுள்ளது. பலமுறை நகர முயன்றும் முடியாத நிலையில் தமது நிலைகளைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளிலேயே ஜெயசிக்குறுய் இராணுவம் ஈடுபட்டுள்ளது. இந்த வகையில் மூன்று முறிப்பில் இராணுவ வலயம் மேலும் பல பாதுகாப்பு அரண்களாலும், பதுங்கு குழி வரிசையாலும் பலப்படுத்தப்பட்டது. இவ்வாறு பலப்படுத்தப்பட்ட இராணுவ வலயமே கடந்த இரண்டாம் திகதி விடுதலைப் புலிகளால் தாக்கியழிக்கப்பட்டுள்ளது. இத் தாக்கு

(☞ 2ம் பக்கம்)

# எம்முடன் பேச புலிகள் முன்வரமாட்டார்கள்
## புலிகளைத் தோற்கடிப்பது பாதை திறப்பில் தங்கியுள்ளது

03.08.98

விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியாகத் தோற்கடிக்கப் பட்டாலும் எம்முடன் பேச்சு வார்த்தைகளை நடாத்துவதற்கு முன்வரமாட்டார்கள் என சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா இன்று ராய்டர் செய்தி நிறுவனத்திற்கு வழங்கிய பேட்டியில் கூறியுள்ளார்.



தமது ஜெயசிக்குறுய் படைகள் வவுனியா யாழ் நெடுஞ் சாலையில் 2/3 பகுதியைக் கைப் பற்றிவிட்டதாக கூறியுள்ள சந்திரிகா பாதையை முழுமையாகக் கைப்பற்றுவதன் மூலம் இராணுவ ரீதியாக புலிகளை தோற்கடிக்கலாம் எனத் தெரிவித்துள்ளார். ஆனால் பாதை திறப்பிற்கான கால் எல்லையை குறிப்பிட மறுத்த அவர் ஜெயசிக்குறுய் போன்ற பாரிய போர் நடவடிக்கைகள் ஓரிரு மாதங்களில் முடிவடையாது எனக் கூறியுள்ளார்.

தற்போது போரில் மிகக் கடினமான காலகட்டம் நிலவுவதாகவும் புலிகள் தம் முழுப் பலத்தையும் இப்போரில் பாவிப்பதாகவும் கூறியுள்ள அவர் செய்தித்தணிக்கை தொடரும் எனவும் பத்திரிகைகள் ஊடாக புலிகள் இராணுவ இரகசியங்களைத் தெரிந்துகொள்வதைத் தவிர்ப்பதற்கு இது அமுல்படுத்தப்படுவதாகவும் தெரிவித்தள்ளார்.

## இந்தியாவுக்கு இடமில்லை
### - சந்திரிகா -

சிங்களத் தமிழ் பிரச்சினை தமது உள்நாட்டு விடயம் எனவும் இதில் இந்தியா தலையிடாது என தாம் நம்புவதாகவும் இன்று ராய்டர் செய்தி நிறுவனத்திற்கு ஜனாதிபதி சந்திரிகா கூறியுள்ளார். நாங்கள் இந்தியாவின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதில்லை. அதேபோல் இந்தியாவும் எமது உள் விவ

(☞ 2ம் பக்கம்)

## கைதடி–நல்லூர் வீதி மூடப்பட்டது ஏன்?
### –மக்கள் சக்தி அமைப்பு

புதைகுழிகள் இருப்பதாக கூறப்படும் செம்மணி பகுதியூடாகச் செல்லும் கைதடி - நல்லூர் வீதிகளை இராணுவம் மூடியுள்ளமை இராணுவத்தின் மீதான சந்தேகத்தை வலுப் படுத்துவதாக யாழ் மக்கள் சக்தி அமைப்பின் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் யாழ். மாநகர ஆணையாளர் கே. சிவஞானம் தலைமையில் கடந்த 2-ம் திகதி இவ் அமைப்பு யாழ்ப்பாணத்தில் கூடியபோதே இவ்வாறு அக் கூட்டத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கிருசாந்தி குமாரசாமி

(☞ 2ம் பக்கம்)

லண்டனில் நம்பிக்கை = நாணயம் = உத்தரவாதம் = குறைந்த விலை
மங்கையர் நெஞ்சங்களில் குறுகிய காலத்தில் இடம்பிடித்தவர்கள்
RATHY JEWELLERS
தாலிக்கொடி தயாரிப்பில் கைதேர்ந்தவர்களின் கைவண்ணத்தில்
சகல நகைகளையும் செய்தும், இறக்குமதி செய்து வழங்குபவர்கள்



28 Ealing Road, Wembley, Middx. HA0 4TL
Tel: 0181-903 3063
Fax: 0181-903 9711
Mon.-Sat. 10.00 A.M. - 6.30 P.M.
Sunday 12.00 Noon - 6.30 P.M.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழமுரசு
Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris.

**RCS PARIS**
B 399 673 110 (95B01491)

**Directeur de la publication:**
P. Velupillai

**Redacteur:**
P. Sivaguru

**Impression:**
IMPRIMERIE MEAULLE

நிர்வாகி:
ப. வேலுப்பிள்ளை

நிறுவக ஆசிரியர்:
அமரர் க. கஜேந்திரன்

ஆசிரியர்:
பி.சிவகுரு

தபால் தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris,
France
E.Mail-eelamurasu@aol.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:

பாரிஸ்:
TeL: 01 40 37 63 03
Fax: 01 40 37 64 64

ஜேர்மனி:
யோ. சிறீஸ்கந்தராஜா
Tel: 03 04 35 29 23
அருந்தவராஜா:
Tel / Fax: 02 151 39 73 83

டென்மார்க்:
G.R. திருச்செல்வம்
Stadion Alee - 30, 1th
7430 Ikast, Denmark.
Tel + Fax: 75310546

சுவிஸ்: மக்கள் கடை
Verlag: People Shop
Henrich Str-85; 8005 Zürich.
Druckerci: Frankreich.
Tel: 01-271 7374

லண்டன்:
ஜெயந்தன்: - Tel: 0956908145
குணம்: - Tel: 0956277718

இத்தாலி:
மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD -
Tel: 22425527

நெதர்லாந்து:
த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804

## யாழ். நகர் மோதல் சில படையினர் உயிருடன் புலிகளிடம்?

'நாங்கள் கழுகுகள் கொண்டு வாறம். மூன்று.. மூன்று' என புலிகள் குருநகர்-சின்னக்கடை தாக்குதல்களின் பின் தம் தொலைத்தொடர்புச் சாதனம் ஊடாக செய்தி அனுப்பியதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று இராணுவ வட்டாரங்களை ஆதாரம் காட்டி வெளியிட்ட செய்தியில் தெரிவித்துள்ளனது.

இச் செய்தியானது, புலிகளால் சில இராணுவத்தினர் கைது செய்யப்பட்டு உயிருடன் கொண்டு செல்லப்பட்டதை குறிக்கிறது என இராணுவ வட்டாரங்கள் கருதுவதாகத் தெரிவித்துள்ள அப் பத்திரிகை, செய்தித் தணிக்கையினால் புலிகளின் யாழ். நகர் மீதான பாரிய தாக்குதல் மறைக்கப்பட்டுவிட்டது எனக் கூறியுள்ளது.

## குஞ்சுக்குளத்தில் தொடர்ந்தும் கடுஞ்சமர்

மாங்குளம் குஞ்சுக் குளப் பகுதியில் 'ஜெயசிக்குறு' படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே கடுமையான சமர் இடம்பெற்று வருகிறது. படைத்தரப்பு முன்னேறுவதற்கு கடும் பிரயத்தனம் செய்கின்ற போதிலும் தொடர்ச்சியான எதிர்த்தாக்குதல் நடாத்தும் புலிகள் அம் முயற்சிகளை முறியடித்து வருகின்றனர்.

இச் சமரின் போது கொல்லப்பட்ட படையினரின் உறுதிப்படுத்தப்பட்ட செய்திகள் வெளிவராத போதிலும் பத்திற்கு மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டதாக வவுனியா செய்திகள் தெரிவிக்கின்றன.

விடுதலைப் புலிகள் கடுமையான மோட்டார் வீச்சுக்களையும் தன்னியக்க ஆயுத தாக்குதல்களையும் மேற்கொள்வதாக சிறீலங்காவின் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ள போதிலும் இராணுவ தரப்பு பற்றிய இழப்புகளை வெளிவிடவில்லை.

## பிரான்சில் மாவீரர் நினைவு மெய்வல்லுனர் போட்டிகள்

கடந்த 02.08.98 ஞாயிறன்று பிரான்சில் மாவீரர் ஞாபகார்த்த மெய்வல்லுனர் போட்டிகள் இடம்பெற்றன. இதில் ஈழவர் விளையாட்டுக் கழகம் முதலாம் இடத்தை தொடர்ச்சியாக இரண்டாவது தடவையாகக் கைப்பற்றியுள்ளது. பாரிஸ் தமிழர் கல்வி நிலைய விளையாட்டுக் கழகம் இரண்டாம் இடத்தையும், தமிழர் விளையாட்டுக் கழகம் மூன்றாம் இடத்தையும் கைப்பற்றியுள்ளன.

மாவீரர் ஞாபகார்த்த சுற்றுக் கிண்ணத்தை குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழகம் இரண்டாவது தடவையாக பெற்றுக்கொண்டது.

கடந்த மூன்று மாதங்களாக பல்வேறு தரங்களில் இடம்பெற்றுவந்த மாவீரர் ஞாபகார்த்தப் போட்டிகளில் 500இற்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் பங்கேற்றமை இங்கு குறிப்பிடத் தக்கது.

இவ் விளையாட்டுப் போட்டிகளைப் பார்வையிடுவதற்காக பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
### மூன்றுமுறிப்பு...

கி.மீ இராணுவ வலையம் புலிகளின் கட்டுப்பாட்டிற்கள் கொண்டுவரப்பட்டது. அங்கிருந்து ஏராளமான ஆயுதங்களையும் பிற தளவாடங்களையும் புலிகள் அப்புறப்படுத்தியுள்ளனர். புலிகளின் விசேட படைப் பிரிவொன்று இப்பகுதியில் இப்போது நிலைகொண்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
### கேணல் கிட்டு...

தல்களின்போது இராணுவத் தரப்பில் முப்பது வரையிலான இராணுவத்தினரே இறந்தும், பல நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் படுகாயம் அடைந்தும் உள்ளனர். இவ் இராணுவ வலயம் மிகவும் திட்டமிடப்பட்டு அமைக்கப்பட்டிருந்ததால் இங்கு விசேட கொமாண்டோக்களும் அனுபவம் மிக்க இராணுவ அணிகளுமே இருந்துள்ளன. இவ்வளவு தொகையான இராணுவத்தை இவ் வலயம் கொண்டிருந்த போதிலும் இராணுவப் படைப் பிரிவான கேணல் கிட்டு பீரங்கிப் படையணியின் தாக்குதல்களே இவ் வலயத்தின் மீது பாரிய பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது.

## மரண அறிவித்தல்

மலர்வு:
04.07.1961

உதிர்வு:
03.08.1998



**கந்தையா சின்னத்தம்பி பாலேந்திரா**
(K.C. Balendra)

Rainbow இசைக் குழுவின் ஸ்தாபகர்

03.08.98 திங்கட்கிழமை காலை லண்டனில் இவர் அமரத்துவம் அடைந்துள்ளார்.

இவர் பாலசாந்தியின் அன்புக் கணவரும், திவ்யமாருதியின் அன்புத் தந்தையுமான இவர், திரு. திருமதி கந்தையா சின்னத் தம்பியின் அன்பு மகனும், இலங்கேஸ்வரன் (லண்டன்), திருமதி. நித்தியகலா மகிந்தகுமார் (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி கமலாதேவி பாக்கியநாதனின் (திருமலை) அன்பு மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் தொடர்பான மேலதிக விபரங்களுக்கு பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**Tel: 0181-548 9637**
**18, Becket Ave.,**
**Eastham, London E6 6AF.**

*தகவல்: நண்பர்கள்*

Pub

## விற்பனைக்கு

பாரிஸ் நகரில் நல்ல நிலையில் இயங்கிக்கொண்டிருக்கும் 'இந்தியன் ரெஸ்ரோரண்ட்' விற்பனைக்கு உள்ளது

விபரங்களுக்கு
Tel : 01 45 79 21 21
38, Rue Fondary, 75015 Paris.
(Mo: Avenue Émil Zola / La Motte Picquet Grenelle)

(1ம் பக்கத் தொடர்ச்சி)
### இந்தியாவுக்கு...

காரங்களில் தலையிடுவதில்லை இக்கொள்கையை இந்திய தொடர்ந்து கடைப்பிடித்தால் எமக்கு இந்தியாவுடன் பிரச்சினைகள் ஏற்படாது எனத் தெரிவித்துள்ள அவர் இந்தியா தமிழர் விடயத்தில் தலையிடவேண்டும் என்ற கொழும்பு தமிழ் குழுக்களின் வேண்டுகோள்களை நிராகரித்துள்ளார்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
### 14 விடுதலைப்...

ளின் பெயர் விபரங்கள் இது வரை வெளியிடப்படவில்லை. மேலும் தாக்குதலில் ஈடுபட்ட சிறப்பு படையணி பற்றிய விபரங்களும் புலிகளினால் வெளியிடப்படவில்லை.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
### கைதடி-நல்லூர்...

மீதானபாலியல் வல்லுறவு படுகொலை வழக்கின் தீர்ப்பில் குற்றவாளியான சிப்பாய் ஒருவர் தெரிவித்த செம்மணி புதைகுழிகள் தொடர்பான விபரங்களால் செம்மணி பகுதி முக்கியத்துவம் பெற்றுள்ள நிலையில் அதனூடாக செல்லும் வீதியை தொடர்ந்தும் படையினர் மூடி மக்கள் நடமாட்டத்தை தடை செய்தமை படையினர் மீது சந்தேகத்தை வலுப்படுத்துகிறது எனவும் அக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
### 30 படையினர்...

பாரிய உயிரிழப்புக்கள் ஏற்படவில்லை. எனினும் புலிகளின் நீண்டதூர எறிகணைகள் இராணுவ பதுங்குகுழிகளை இலக்கு வைத்து பலமணி நேரம் தாக்குதல்களை நடாத்தியதால் பல நூறு இராணுவத்தின்ர் காயப் படுத்தப்பட்டுள்ளனர்.

புதிய வரவு IATA உடனுக்குடன் பிரயாண ரிக்கெற் பெற்றுக்கொள்ளலாம்

ERRANCES TRAVELS
Tel: 01 42 09 70 00
Fax: 01 42 09 53 39
55, Rue Louis Blanc, 75010 Paris.
M°: La Chapelle ou Louis Blanc

*à partir de*

| | | |
|---|---|---|
| Bombay | - | 3,900 Frs. |
| Delhi | - | 3,900 Frs. |
| Bangkok | - | 3,400 Frs. |
| Colombo | - | 3,800 Frs. |
| Singapour | - | 3,670 Frs. |
| Madras | - | 4,300 Frs. |
| Londres | - | 790 Frs. |
| New york | - | 2,300 Frs. |
| Montreal | - | 2,800 Frs. |
| Oslo | - | 2,010 Frs. |
| Toronto | - | 2,800 Frs. |
| Nepal | - | 4,820 Frs. |

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது
Li: 075 95 01 37
(ADV)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழீழச் செய்தித் தொகுப்பு

# குமாரபுரம் படுகொலைகள் வெளிவரும் உண்மைகள்

1996-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11-ம் திகதி திருமலை மாவட்ட மக்களை அதிர்ச்சி அடைய வைத்த குமாரபுரம் படுகொலைகள் மீதான விசாரணை கடந்தவாரம் மூதூர் நீதி மன்றத்தில் ஆரம்பமாகி உள்ளது. சிறீலங்காப் படையினரால் ஈவிரக்கமின்றி 24 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதே குமாரபுரம் சம்பவமாகும்.

விசாரணையின் ஆரம்பத்தில் அக் கொடூரச் சம்பவத்திற்கு சாட்சிகளாக பலர் தோன்றியிருந்தனர். அதில் ஒரு சாட்சியான வீரசாமி காளிமுத்து என்ற கடை உரிமையாளர் சம்பவம் பற்றி விபரிக்கையில்,

'கடந்த 96-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11-ம் திகதி மாலை 5 மணியளவில் நான் கடையில் பணிபுரிந்து கொண்டு இருந்த போது அருகாமையில் சில துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன. நான் பீதி காரணமாக கடையின் முன் கதவை மூடி விட்டு உள்ளேயே இருந்தேன். அப்போது எனது கடைக்குப் பொருட்கள் வாங்க வந்தவர்களான ஆறுபேரும் எனது கடையினுள்ளேயே இருந்தனர். சிறிது நேரத்தில் எனது கடையின் முன்னால் சிங்களத்தில் உரையாடும் சத்தம் கேட்டது. உரையாடியவர்கள் கதவினைத் தட்டி உள்ளே யார் என வினாவினர். நாம் பயம் காரணமாக எதுவுவே பதிலளிக்கவில்லை. அவ்வேளை கதவு இடுக்கு வழியாக துப்பாக்கிக் குழாய் ஒன்று உள்ளே நீட்டப்பட்டு சரமாரியான வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. இவ்வேட்டுக்கு இலக்காகி எனது கடையில் இருந்த ஒருவர் துடிதுடித்துப் பலியாகி விட்டார்.

நான் பீதி காரணமாக மற்றவர்களையும் இழுத்துக்கொண்டு கடையின் பின்பக்கமாக ஓடினேன். துப்பாக்கி வேட்டுக்கள் தொடர்ந்தும் தீர்க்கப்பட்டுக் கொண்டே இருந்தன. சிறிது நேரத்தின் பின் எனது கடைக்கு வெளியே நான் வந்தபோது அங்கு நின்ற சிப்பாய்கள் கடையினுள்ளே யார் என என்னிடம் வினாவினர். நான் பெண்களும் குழந்தைகளுமே உள்ளே இருப்பதாகப் பதிலளித்தேன். அதைக் கேட்டுவிட்டு அவர்கள் சென்று விட்டார்கள்.

மாலை 7 மணி அளவில் மீண்டும் இராணுவத்தினர் எனது கடைக்கு முன்னால் வந்து பெண்கள் எல்லோரையும் வெளியே வருமாறு உத்தரவிட்டனர். அப்பொழுது அங்கு நின்று லக்ஷ்மி என்ற இளம் பெண்ணின் கைகளை பிடித்து ஒரு சிப்பாய் இழுக்கவே நான் அதைத் தடுக்க முற்பட்டேன். அப்போது அச் சிப்பாய் வெறி கொண்டவர் போல் எல்லோரையும் சுட்டுக் கொல்லப் போவதாக மிரட்டியதுடன், எல்லோரையும் முன்னே ஓடுமாறும் உத்தரவிட்டார். அவ்வாறு நடைபெற்றபோது லக்ஷ்மி சுட்டுக்கொல்லப்பட்டார். மேலும் ஒருவர் படுகாயப்படுத்தப்பட்டார். பின்னர் நாம் அறிந்த சம்பவத்தின்படி குமாரபுரம் பகுதியில் அன்றையதினம் பலர் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் அறிந்தேன்.

இவ்வாறு அவர் தனது சாட்சியத்தின்போது தெரிவித்தார். விசாரணைகள் மீண்டும் இம் மாதம் ஆரம்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## படகு கவிழ்ந்து இரு பெண்கள் பலி

இராமேஸ்வரம் கடற் பரப்பில் நடந்த படகு விபத்தால் அதிர்ச்சி அடைந்த தமிழீழ மக்களுக்கு மேலும் ஒரு படகு விபத்து அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. வன்னியில் இருந்து யாழ். குருநகரை நோக்கிச் சென்ற மற்றுமொரு பயணிகள். படகொன்று கவிழ்ந்ததன் காரணமாக இரு பெண்கள் பலியாகியுள்ளனர்.

கடந்த 28-ம் திகதி நடைபெற்ற இச் சம்பவத்தில் பலியான ஒருவருடைய சடலம் மீட்கப்பட்டு அடையாளம் காணப்பட்டுள்ளது. மேற்படி விபத்தில் இந்துமதி (30), கிருபானந்தன் சிவசங்கரி ஆகிய இருவரும் பலியானவர்களாவர். ஏனைய பயணிகள் நீந்திக் கரைசேர்ந்துள்ளனர்.

கடற் கொந்தளிப்பே இவ் விபத்திற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதே வேளை இராமேஸ்வரம் கடற் பகுதியில் நடந்த படகு விபத்தில் பலியான சிலரது சடலங்கள் நெடுந்தீவு, வேலணை ஆகிய பகுதிகளில் கரையொதுங்கியுள்ளன.

## சிப்பாய்களின் சடலங்கள் ஒப்படைக்கப்பட்டன

கடந்த 26-ம் திகதி மாங்குளம் சந்தியை நோக்கி முன்னேற முயன்ற சிறீலங்காப் படையினரை இடை மறித்துத் தாக்கிய விடுதலைப் புலிகள், இராணுவத் தரப்புக்கு பலத்த இழப்பினை ஏற்படுத்தியது தெரிந்ததே. இச் சமரின்போது பலியான சிப்பாய்களில் ஐந்து பேரது சடலங்கள் விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட இச் சடலங்கள் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக இராணுவத் தரப்பிடம் கையளிக்கப்பட்டுள்ளது. சடலங்கள் கையளிப்புத் தொடர்பான நிகழ்வு துணுக்காயிலுள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் செயலகத்தில் நடைபெற்றது.

## தானியங்கி இழுவைச் சாரதிகளுக்கு புதிய உத்தரவு

மட்டக்களப்பில் சேவையில் ஈடுபடுத்தப்படும் தானியங்கி இழுவை வண்டிகளுக்கு (ஓட்டோ றிக்சோ) சிறீலங்காப் பொலிசார் புதிய கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர். புதிய உத்தரவின்படி அறிமுகமற்ற எவரையும் தானியங்கி இழுவையில் ஏற்றிச் செல்ல வேண்டாமெனவும், அவ்வாறு செய்தால் அது தண்டனைக்குரிய குற்றம் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அறிமுகமற்றவர்களை ஏற்றிச் செல்ல வேண்டி நேரிட்டால் அவர்களின் அடையாளங்களையும், விபரங்களையும் அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கோ அல்லது இராணுவ முகாம்களிற்கோ உடனடியாக அறிவிக்க வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இப்புதிய உத்தரவு காரணமாக தானியங்கி இழுவை உரிமையாளர்களும், சாரதிகளும் அதிருப்தி கொண்டுள்ளனர்.

## சர்வதேச தொண்டு நிறுவனங்கள் முன் பாரிய மறியல் போராட்டம்

சிறீலங்கா அரசினால் புதிதாக நடைமுறைப்படுத்தப்பட்ட நிவாரண வெட்டினைக் கண்டித்தும் சர்வதேச தொண்டு நிறுவனங்கள் இந்த நடவடிக்கை குறித்து மௌனம் சாதிப்பதைச் சுட்டிக்காட்டியும் வன்னிப் பிரதேச மக்களால் பாரிய மறியல் போராட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

கடந்த 30-ம் திகதியன்று மல்லாவிப் பிரதேசத்தில் அமைந்துள்ள சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம், ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயம் ஆகியவற்றின் பணிமனைகள் முன் ஆயிரக்கணக்காகத் திரண்ட மக்கள் மறியல் போராட்டங்களை நடாத்தி, தமக்கு நீதி வழங்குமாறு கோரியிருந்தனர்.

முன்னதாக ஐ.நா. செயலாளர் நாயகத்திற்கு விடுக்கப்பட்ட முறையீட்டு மனுவிற்கு இது வரை எவ்வித பதிலும் அளிக்கப்படாததைச் சுட்டிக் காட்டிய போராட்டக்காரர்கள் இவ் விடயத்தில் தமக்கு உடனடியாக நிவாரணம் பெற்றுத் தர வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளனர்.

குழந்தைகள், தாய்மார், முதியோர் எனத் திரண்ட மக்கள் சிறீலங்கா அரசின் நிவாரண வெட்டுக்கெதிராக பலத்த கோஷங்களைக் எழுப்பினர்.

இதேவேளை துணுக்காய், பாண்டியன்குளம் ஆகிய பகுதிகளில் உள்ள உதவி அரசாங்க அதிபர் பணிமனைகள் முன்னாலும் இவ்வாறான போராட்டங்கள் நடக்கப்பட்டுள்ளன. மறியல் போராட்டம் செய்தவர்களை சந்தித்த உதவி அரசாங்க அதிபர்கள், 'அரச நிர்வாகம் என்பது இங்கு பெயரளவில்தான் இயங்குகிறது' எனக்கூறி தமது இயலாமை நிலையை சுட்டிக் காட்டினர்.

ஆயினும் இவ்விடயத்தில் உயரதிகாரிகளுடன் மீண்டும் ஒருமுறை தொடர்புகொள்வதாகவும் உறுதி தெரிவித்திருந்தனர்.

இதேபோன்றதொரு மறியல் போராட்டம் முல்லை மாவட்ட அரச செயலகத்தின் முன்னாலும் நடாத்தப்பட்டுள்ளது.

## அம்பாறையில் இரு பொலிசார் பலி

அம்பாறை கல்முனை வீதியில் கடந்த 30-ம் திகதி நடாத்தப்பட்ட தாக்குதலொன்றில் இரு சிறீலங்காப் பொலீசார் பலியாகியுள்ளனர்.

நண்பகல் 12.15 மணியளவில் தானியங்கி இழுவையொன்றில் (ஓட்டோ றிக்சா) பயணித்த பொலிசார் மீதே விடுதலைப் புலிகள் தாக்குதலைத் தொடுத்துள்ளனர். ஸ்தலத்திலேயே இரு பொலிசார் கொல்லப்பட்டதுடன், மேலும் ஒருவர் படுகாயப் படுத்தப்பட்டுள்ளார்.

விடுதலைப் புலிகள் அங்கிருந்து சென்றபின் அப்பகுதிக்கு வந்த பிறிதொரு பொலிஸ் குழு, காயமடைந்தவரை அம்பாறை வைத்தியசாலைக்கு அனுப்பியதுடன், அப் பகுதியை சுற்றிவளைத்து கடும் தேடுதல்களையும் நடாத்தியது.

## எறிகணை வீச்சால் நால்வர் காயம்

வாழைச்சேனை கல்குடா இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட எறிகணையொன்று வீழ்ந்து வெடித்ததால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் படுகாயமடைந்துள்ளனர். பேய்த்தாளைப் பகுதியில் வசிக்கும் இவர்களின் வீட்டின்மேல் கடந்த 28-ம் திகதியன்று இரவு இவ் எறிகணை வீழ்ந்து வெடித்துள்ளது. அப்போது தூக்கத்தில் ஆழ்ந்திருந்த குடும்பஸ்தரான கதிர்காமத்தம்பி, அவரது மனைவி அரசம்மா பிள்ளைகளான சுரேந்திரன் இவாயுதன் ஆகியோர் படுகாயமடைந்துள்ளார்கள். இவர்களின் வீடும் பலத்த சேதத்திற்குள்ளாக்கப்பட்டுள்ளது.

## தலை துண்டிக்கப்பட்ட நிலையில் இரு சடலங்கள்

வவுனியா மாவட்டத்தில் உள்ள வீரகுளம் காட்டுப்பகுதியில் தலை துண்டிக்கப்பட்ட நிலையில் இரு சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இச் சடலங்கள் அடையாளம் காணப்பட்டபோது மாணிக்கம், குணராசா (23), லக்ஷ்மன் யோகராசா (21) ஆகியோரெனத் தெரிய வந்துள்ளது. சிறீலங்காப் படையினரால் மிகவும் கொடூரமான முறையில் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்ட இவர்களின் தலைகளையும் படையினர் வெட்டிக் கொண்டுசென்றுள்ளனர்.

மேற்படி இரு இளைஞர்களும் விறகு வெட்டச் சென்ற பொழுதே இக் கொடூரம் நிகழ்ந்துள்ளது.

## கூட்டுறவு தினத்தில் மரம் நடுகை இயக்கம்

வன்னியில் கொண்டாடப்பட்ட சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி திருவையாறு பகுதியில் மரம் நடுகை இயக்கம் ஒன்று நடாத்தப்பட்டுள்ளது. விவசாயக் கூட்டுறவாளர் சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இத் திட்டத்தில் கணிசமானளவு தொண்டர்கள் இணைந்து மரம் நடுகை இயக்கத்தை நடாத்தி வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் அதிகரிக்கும் திருட்டுக்கள்

யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் நாளுக்குநாள் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருவதால் மக்கள் பெரும் பீதியடைந்து வருகின்றனர். கடந்த சில நாட்களுக்கு முன்னர் கொக்குவில் பிரம்படி வீதியில் உள்ள ஒரு வீடொன்றிலிருந்து பல்லாயிரக் கணக்கான ரூபா பெறுமதியான பொருட்கள் இரவு வேளையில் திருடப்பட்டுள்ளன. இதே போன்ற திருட்டுச் சம்பவங்கள் உரும்பிராயிலும் நெல்லியடியிலும் நடைபெற்றுள்ளன. நெல்லியடியில் நடைபெற்ற திருட்டுச் சம்பவத்தில் கோழிக்கூட்டிலிருந்த சுமார் 50 கோழிகளைக் கூட திருடர்கள் விட்டுவைக்கவில்லை. உரும்பிராய் பகுதியில் நடைபெற்ற சம்பவத்தில் விவசாய உபகரணப் பொருட்கள் பலவும் திருடப்பட்டுள்ளது. இத் திருட்டுச் சம்பவங்கள் ஒருபுறமிருக்க குடியில்லாத வீடுகளில் இருந்து கூரைகளைக் கழற்றுதல், சுவர்களை இடித்துக் கற்களை எடுத்துச் செல்லுதல், மரங்களைத் தறித்துச் செல்லுதல் போன்ற சம்பவங்களும் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

# யாழ்.மாவட்ட நீதிபதிகளை கொழும்பிற்கு வரப் பணிப்பு

யாழ். மாவட்ட நீதிபதிகள் அனைவரையும் கொழும்புக்கு வருமாறு சிறீலங்கா நீதியமைச்சு அவசர உத்தரவினைப் பிறப்பித்துள்ளது. கொழும்பில் நடைபெறவுள்ள நீதியமைச்சின் முக்கிய கூட்டமொன்றில் சமூகமளிக்கவே இந் நீதிபதிகள் அழைக்கப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் யாழ்ப்பாணம், மல்லாகம், பருத்தித்துறை, சாவகச்சேரி ஆகிய மாவட்ட நீதிமன்றங்களும் ஊர்காவற்துறையில் அமர்வு நீதிமன்றமும் அரசின் பணிப்பின் பேரில் இயங்கிவந்தபோதிலும் கடந்த இரு மாதங்களாக இந் நீதிமன்றங்கள் செயற்படவில்லை. மீண்டும் இந் நீதிமன்றங்கள் இயங்க வைப்பது தொடர்பாக ஆராயவே மேற்படி கூட்டம் நடாத்தப்பட்டுள்ளது. கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் நீதி மன்றங்களுக்கு அனுப்பப்பட்ட எச்சரிக்கைக் கடிதங்களையடுத்தே அவற்றின் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# அகதிகள் படகு விபத்தில் பலியானோர் விபரங்கள்

இராமேஸ்வரம் கடற் பரப்பில் கடந்த 25-ம் திகதி இடம்பெற்ற படகு விபத்தில் மரணமடைந்த 44 பேரின் விபரங்கள் பின்வருமாறு:

த. தங்கேஸ்வரி (கோண்டாவில்), த. பிறிடேவிற் சந்திரன் (கோண்டாவில்), ச. புனிதராணி (மாதகல்), எவ்.ஜெனா (புதுக்குடியிருப்பு), த. வேலாயும், வே. தயாநிதி, வே.பானுமலர் (இம்மூவரும் மன்னார்), கி. மரியான் (யாழ்ப்பாணம்), க.வி.மணதாஸ் (மாதகல்), அ. சுவாமிநாத ஐயர் (உரும்பிராய்), து. அன்ரனி பாஸ்கரன், து. திஸ்ரிலா, து. ஞானேஸ்வரி, து. சதீஸ்குமார் (இந் நால்வரும் மானிப்பாய்), ச. மோகனராஜா, ந. நனாஜினி, ந. சனற்றர் (இம்மூவரும் இணுவில்), க.பரமேஸ்வரி (வல்வெட்டித்துறை), த. மகேஸ்வரன், ந. ஜானகியம்மா (பொலிகண்டி), இ. பூரணகெங்கேஸ்வரி. இ. பங்கீர்த்தனா (ஆனந்த புளியங்குளம்), பு. சிவபாதசுந்தரம் (அல்வாய்), பொ. இராஜேஸ்வரி, பொ. விஜயகுமார், க. கந்தசாமி, நாகேஸ்வரி, க. அற்புதராஜா (சுன்னாகம்), க. ஆனந்தராணி, மு.ஜெயதீபன் (இராமநாதபுரம்), வே. சரஸ்வதி (திருவள்ளுவர் நகர்), வே. விஜயராணி (யோகபுரம்), தெ. நதீபன் (மாங்குளம்), செபமாலை, செ. லூர்தம்மா, செ. டெல்சியா, செ. பிலிப் யேசுரட்னம், புஸ்பராணி (பலாலி), ப. ரமணியம்மாள், பா. லவன்மீனா (அக்கராயன் குளம்), க. கதிர்காமத்தம்பி (கரவெட்டி), ந. புஸ்பராசா (கிளிநொச்சி), த. சண்முகவடிவேல் (முள்ளியவளை), கா.செல்வராஜா (மாங்குளம்), ஜே. கிருஷ்ணகுமார், கோ. பிரதாஸ்குமார் (யோகபுரம்), வே. சச்சிதானந்தன், வே.காண்டீபன் (கண்டாவளை)

மேற்படி விபரங்கள் யாவும் இலுப்பைக் கடவை கடற்தொழிலாளர் சங்கத்தால் அறிவிக்கப்பட்டவையாகும்.

# மட்டுநகரிலிருந்து கொழும்பு செல்வோர் வீழ்ச்சி

சிறீலங்காப் படையினரின் கெடுபிடிகள் காரணமாக மட்டக்களப்பிலிருந்து கொழும்பு செல்லும் பயணிகளின் எண்ணிக்கையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. மட்டக்களப்பிலிருந்து கொழும்பு செல்வதற்கிடையில் பயணிகள் பலமுறை இராணுவ சோதனைக்குள்ளாவதாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது. இதேவேளை சார்க் மாநாட்டையொட்டி எடுக்கப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளில் கிழக்குப் பிரதேச இளைஞர்கள், யுவதிகள் பலர் கொழும்பில் கைதானதாலும் மட்டு கொழும்பு பயணிகளின் தொகையில் சரிவு கண்டுள்ளது.

தற்பொழுது' அவசர அலுவல்கள் நிமித்தம்கூட கொழும்பு செல்வதற்கு மட்டக்களப்பு மக்கள் பெரும் தயக்கம் காட்டி வருகின்றனர்.

# முருங்கன் பகுதியில் தம்பதிகள் மீது தாக்குதல்

முருங்கன் பகுதியில் தூக்கத்தில் ஆழ்ந்திருந்த தம்பதிகள் மீது இனந் தெரியாதோர் மேற்கொண்ட தாக்குதலில் கணவன் மரணமடைந்தார். மனைவி படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கடந்தவாரம் நானாட்டான் பகுதியில் உள்ள இராசமடு என்னும் கிராமத்தில் இச் சம்பவம் நடைபெற்றுள்ளது. இத் தாக்குதலுக்கான நோக்கம் என்ன? தாக்கியவர்கள் யார் என்பது பற்றி இதுவரை எதுவும் தெரியவரவில்லை. மேற்படி தாக்குதல் சம்பவம் குறித்து பூரண விசாரணை அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு மன்னார் மாவட்ட நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

# அளவெட்டியில் இளைஞரைக் காணவில்லை

அளவெட்டிப் பகுதியில் கடந்த 30-ம் திகதி காலை முதல் இளைஞர் ஒருவரைக் காணவில்லையென அறிவிக்கப்படுகிறது. அளவெட்டி தெற்கு பாடசாலை வீதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் சாந்தகுமார் (30) என்ற இளைஞரே மேற்படி காணாமல் போனவராவார். மேற்படி சம்பவம் பற்றி கருத்துத் தெரிவித்த இவ் இளைஞனின் பெற்றோர் தமது காணாமல் போனதற்கு சிறீலங்காப் படையினரே பொறுப்பு எனக் குறிப்பிட்டுள்ளதுடன், த்மது மகனின் நிலையை அறிய உதவிசெய்யுமாறு தொண்டர் நிறுவனங்களிடம் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

# புல்மோட்டையில் மூழ்கிய கப்பலை மீட்க இரண்டுகோடி ரூபா

விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி புல்மோட்டைக் கடலில் மூழ்கிய இல்மனைட் கப்பலை மீட்பதற்கென சிறீலங்கா அரசாங்கம் இரண்டு கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது. மூழ்கியுள்ள இக் கப்பலிலிருந்து எண்ணெய் கசிவு ஏற்பட ஆரம்பித்திருப்பதால் இக் கப்பலை உடனடியாக மீட்டெடுக்க அரசு முடிவெடுத்துள்ளது. கப்பல் மூழ்கியபோது அதில் முப்பத்தையாயிரம் தொன் இல்மனைட்டும், 700 தொன் எண்ணெயும் இருந்தமை குறிப்பிடத்தக்கது. மேற்படி கப்பலின் மீட்புப் பணிகளை சிறீலங்காவின் புனர்வாழ்வு, புனரமைப்பு, துறைமுக அபிவிருத்தி அமைச்சு மேற்கொள்ளவுள்ளது.

# நானாட்டான் சுற்றிவளைப்பில் ஒருவர் பலி

மன்னார் நானாட்டான் பகுதியில் கடந்த 29-ம் திகதி சிறீலங்கா இராணுவத்தினர் நடாத்திய சுற்றிவளைப்புத் தேடுதலின்போது இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

காலை 6.30 மணியளவில் இப்பகுதியைச் சுற்றி வளைத்த படையினர் கண்மூடித்தனமாக மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தின்போதே இவ் இளைஞர் கொல்லப்பட்டுள்ளார். இராணுவத்தினரின் சுற்றிவளைப்பினை அடுத்து நானாட்டான் பகுதியில் பதற்றம் நிலவியது. காலை வேளையில் கூலி வேலைக்குச் சென்றோரும் படையினரால் தடுத்து வைக்கப்பட்டு கடுமையான விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். மேற்படி சம்பவத்தில் பலியானவரின் சடலம் மன்னார் வைத்தியசாலையில் தற்பொழுது வைக்கப்பட்டுள்ளது.

# மகன் பிரிவால் தாயும் தற்கொலை

வவுனியாவில் சிறீலங்கா இராணுவத்தினரால் அமைக்கப்பட்டுள்ள தடுப்பு முகாம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தனது மகன் கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்து கொண்ட சம்பவத்தால் கவலை அடைந்த அவரது தாயார் தானும் கிணற்றில் வீழ்ந்து தற்கொலை செய்துகொண்டுள்ளார். இப் பரிதாபகரமான சம்பவம் கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தில் நடைபெற்றுள்ளது. மகனின் பிரிவை தாங்கமுடியாது மனநிலை குழம்பியிருந்த இராசேந்திரம் மகேஸ்வரி என்பவரே இவ்வாறு தற்கொலை செய்துகொண்டவராவார்.

## குசும்புச் சித்தர் செப்பல்கள்

செக்கோசிலாவாக்கியா எண்ட நாடு இரண்டு நாடுகளாக பிரிஞ்சு போய் வருடம் சில ஆச்சு.

ஆனா சிங்கக் கொடியாரின் மேமாத புலனாய்வு அறிக்கை கூறுவது என்னவென்றால்; செக்கோசிலாவாக்கியா நாட்டிலை மறவர் படை நடவடிக்கையள் இருக்கிறதாம்! வளர்க அவர்கள் புலனாய்வுத்துறை.

• • •

வவுனியாவிலை முட்டை உற்பத்திக்கும் வியாபாரத்துக்கும் ஏகபோக உரிமையைக் கொண்டிருக்கிற கழகத்தார், இப்ப தேங்காய் வியாபாரத்திலும் கண்போட்டிட்டினமாம். முன்னம் தம்மைத் தவிர்ந்த எவரும் கோழிப் பண்ணை வைக்கக்கூடாதெண்டு சட்டம்போட்டவையெண்டாலை இனி முத்தத்திலை தென்னம்பிள்ளைகூட நடேலாமலும் வந்திடுமோ எண்டு சனம் சஞ்சலப்படுகுதாம். கேட்டது விடுதலை! கிடைச்சதோ முட்டை!! போராட்டத்திலை சொட்டை!!!

• • •

பண்டார வன்னியன் நிலம் அதிர்ந்து பலியான தங்கடை பிரமுகருடைய சாவில றெலோக்காரருக்கும் சம்பந்தம் இருக்குதெண்டு கழகத்தார் சிலர் சீருடைத்தரப்பாரிட்டை ஊதிவிட்டிருக்கினம். புதிய நிலவரப்படி அறியப்படுவது யாதெனில்; றெலோக்காரரின் வன்னி முகாம்களிற்குள்ளே சீருடையினரின் திடீர் தேடுதல் நடக்கிறதாம். ஆயுதங்களின் பதிவிலக்கங்களும் துருவப்படுகின்றனவாம்.

• • •

மாநாட்டுக்கு வந்த அக்கரைப் பிரதமரை தனித்தனியாக சந்திக்க தமிழ்க்குழுவினரிடையே போட்டியோ பெரும்போட்டி. ஆனால் யாரும் சரியான இலக்கினை அடையவில்லை. குழப்பணிகாரக் கட்சியின் விசேட மனுக்கூட புஸ்வாணம். கும்பல்லை கோவிந்தாவாக மாத்திரம் சந்திக்க ஐந்து நிமிச அனுமதி கிடைச்சிருக்கு. இப்ப என்னடாவெண்டா, 'அக்கரைச் சீமை அரசியலில் மனம் வாடக்கண்டோமே' எண்டு கூட்டாக கோரஸ் பாடி வருகினமாம்.

• • •

படகு கவிண்ட சம்பவத்தில அக்கரைத்தரப்பார் கொஞ்சம் சுழண்டடிச்சு கடமை பாத்திருக்கினம். முன்னமெண்டா மூண்டுநாளைக்குப் பிறகு தான் விசயம் பாக்கிறவைக்கு இப்ப என்ன திடீர் வேகம் எண்டு ஆராஞ்சவைக்கு விசயம் கிடைச்சிருக்காம். எல்லாம் பாதுகாப்புக்குப் பொறுப்பானவரின்ரை விசேட உத்தரவுதானாம். டெல்லி மாநாடு கூட்டேக்க இருந்த ஆதரவு அப்பழுக்கில்லாமல் அப்படியே இருக்குதெண்டும் சில நல்ல மனங்கள் சொல்லுது.

• • •

மே மாதம் தலைநகரில் பிடிபட்ட மறவர் படையின்டை கருமையான ஓராளிட்டையிருந்து கறந்த விசயத்தில 'அங்கிகள்' சிலதை மீட்க முடிஞ்சுதெண்டு புலனாஞ்சவை சொல்லியிருக்கினம். அந்த அங்கி விசயத்தோட சம்பந்தமிருக்கிறதாலதானாம் எழுத்தாணி பிடிக்கிற இரண்டு பேரும் பிடிவட்டவையெண்டும் அளந்திருக்கினம். பிடிச்சது மேமாதம், எடுத்தது ஜூலை மாதம். எப்படியிருக்குது இடைவெளி பாத்தியளே?

• • •

சுயபொருளாதாரக் கொள்கையிலே நம்பிக்கையுள்ள அக்கரை தலைவர் தன்ரை சுயபாதுகாப்பிலும் உசார்தான். மாநாட்டுக்கு வந்தவருக்கு இக்கரை போக்குவரத்தில நம்பிக்கையில்லை. தங்கடை தும்பி இரண்டோட தான் வந்தவர். கரையோரம் களையாறப்போனதும் அந்தத் தும்பியிலைதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக அரசியலில் புயலை கிளப்பியுள்ள ஜெயின் அறிக்கை

# கருணாநிதி அரசு கலைக்கப்படுமா ?

(தமிழகத்திலிருந்து ரவிக்குமார்)

(சென்னை ஒகஸ்ட் 2)

ஜெயின் கமிசனின் இறுதி அறிக்கையும் அது தொடர்பாக மத்திய அரசு எடுத்த நடவடிக்கைகள் பற்றிய அறிக்கையும் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருப்பது இந்திய அரசியலில் மீண்டும் ஒரு புயலை எழுப்பியுள்ளது.

ஜெயின் கமிசனின் இடைக்கால அறிக்கை குறித்த விபரங்கள் பத்திரிகை ஒன்றில் திட்டமிட்டு வெளிவந்ததைத் தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் கொந்தளிப்பை தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று திட்டமிட்ட காங்கிரஸ் கட்சி அப்போது ஆட்சியில் இருந்த ஐக்கிய முன்னணி அரசுக்கு கொடுத்து வந்த ஆதரவை விலக்கிக்கொண்டு இந்திய நாட்டின் மீது ஒரு தேர்தலைத் திணித்தது. ஆனால் மக்கள் அளித்த தீர்ப்பு மீண்டும் ஒரு 'தொங்கு பாராளுமன்றம்' இங்கே உருவாக வழி செய்து விட்டது.

பாராளுமன்ற தேர்தலில் தனக்குக் கிடைத்த வெற்றியில் உற்சாகமடைந்த அ.தி.மு.க. தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து தமிழ்நாட்டில் நடைபெறும் தி.மு.க. ஆட்சியை கலைக்க வேண்டுமென வற்புறுத்த ஆரம்பித்துவிட்டது. அரசியல் சட்டப் பிரிவு 356 ஐ பயன்படுத்தி தமிழக அரசைக் கலைப்பதில் பல்வேறு சட்ட அரசியல் சிக்கல்கள் இருப்பதை உணர்ந்த பாரதீய ஜனதா கூட்டணி அரசு அ.தி.மு.க. கூட்டணிக் கட்சிகளின் கோரிக்கையை ஏற்கவில்லை.

அ.தி.மு.க. கூட்டணிக் கட்சிகள் பி.ஜே.பி கூட்டணி அரசிலிருந்து விலகிவிடக்கூடும் என்று அனைவரும் நம்புமளவுக்கு அதைத் தொடர்ந்து நிலைமைகள் சீர்கெட்டன. ஆனால் பி.ஜே.பி கூட்டணி அரசில் அங்கம் வகிக்கும் வேறு சில கட்சிகளின் அமைச்சர்கள் தூதர்களாக வந்து செல்வி ஜெயலலிதாவைச் சந்தித்த பின்பு திடீரென ஒரு அமைதி அ.தி.மு.க முகாமில் நிலவியது.

தற்போது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கைகள் அ.தி.மு.க. முகாமில் நிலவிய தற்காலிக அமைதி குறித்து சில சந்தேகங்களை எழுப்பியுள்ளன.

ஜெயின் கமிசனின் இறுதி அறிக்கை மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய அறிக்கையில் குறிப்பிட்டிருந்தபடி அடுத்த கட்ட நடவடிக்கையை மத்திய அரசு மேற்கொண்டுள்ளது. பல்துறைக் கண்காணிப்புக் குழு ஒன்றை ஏற்படுத்தியுள்ள மத்திய அரசு ஜெயினின் இறுதி அறிக்கையில் குறிப்பிட்டிருந்தபடி கருணாநிதி உள்ளிட்ட சிலரை மீண்டும் விசாரணைக்கு உட்படுத்தும் நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளது.

***மத்திய அரசு ஜெயினின் இறுதி அறிக்கையில் குறிப்பிட்டிருந்தபடி கருணாநிதி உள்ளிட்ட சிலரை மீண்டும் விசாரணைக்கு உட்படுத்தும் நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளது. இது தனக்கு எதிரான திட்டமிட்ட அரசியல் சதி என்று கருணாநிதி வர்ணித்துள்ளார்.***

இது தனக்கு எதிரான திட்டமிட்ட அரசியல் சதி என்று கருணாநிதி வர்ணித்துள்ளார். ஜெயின் கமிஷன் அறிக்கையில் தனது பெயர் ஒரே ஒருமுறை மட்டுமே குறிப்பிடப்படுகிறது. என சுட்டிக்காட்டும் கருணாநிதி 'மத்திய அரசின் நடவடிக்கைகள் பற்றிய அறிக்கையில் தனது பெயர் உள்நோக்கத்தோடு சேர்க்கப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டியுள்ளார்.

தமது அரசைக் கலைத்தால், அது தேன்கூட்டை கலைத்தது போலாகும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

இது தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் நீங்கள் வழக்கு ஏதும் தொடுக்கப் போகின்றீர்களா' என்று அவரிடம் கேட்டபோது திரு. கருணாநிதிக்குப் பதிலாக பதிலழித்த முரசொலி மாறன் அவர்கள் இது தொடர்பாக தாங்கள் சட்டரீதியான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்போவதில்லை என்றும் இதை அரசியல் ரீதியாக எதிர்கொள்ளப் போவதாகவும் கூறியிருக்கிறார்.

பல்துறைக் கண்காணிப்புக் குழுவின் அதிகார வரம்புகள். பொறுப்பான அதிகாரிகள் உள்ளிட்ட விபரங்களை மத்திய அரசு தற்போது அறிவித்துள்ள

## சிறப்புக் கட்டுரை

நிலையில் தி.மு.க. அரசைக் கலைக்க வேண்டும் என்ற தனது பழைய கோரிக்கையை மீண்டும் பலமாக ஜெயலலிதா எழுப்பியுள்ளார். அ.தி.மு.க. கூட்டணிக் கட்சிகளிடையே சமீப காலமாக இருந்து வந்த கருத்து வேறுபாடுகளை அகற்றிவிட்டே அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

சமீபகாலமாக அ.தி.மு.க. கட்சிகளில் ஒன்றாக இருந்த ம.தி.மு.கக்குவும் செல்வி ஜெயலலிதாவுக்குமிடையில் ஏற்பட்டிருந்த மனக்கசப்பு வெளிப்படையாகவே தெரிந்து வந்தது. சமீப காலத்தில் நடந்த சில கூட்டங்களுக்கு ம.தி.மு.க. அழைக்கப்படவில்லை. குறிப்பாக காவிரிப் பிரச்சினை பற்றியும் அதற்கு முன்பாக வேறு விடயங்களிலும் மனுக் கொடுக்கப்பட்ட சந்தர்ப்பங்களிலும் கூட ம.தி.மு.க.வுக்கு அழைப்பு அனுப்பப்படவில்லை. ஆனால் இவற்றையெல்லாம் ஒரு புறம்தள்ளி விட்டு, கடந்த சில நாட்களாக ஏற்பட்டுள்ள அரசியல் சூழ்நிலை காரணமாக நேற்று (சனி) செல்வி. ஜெயலலிதா வை. கே. அவர்களை அழைத்துப் பேசியிருக்கிறார். ஆக இந்த விடயத்திலிருந்து அ.தி.மு.க. கூட்டணியிலிருந்து எந்தவொரு கட்சியையும் விலக்கிவிட ஜெயலலிதா விரும்பவில்லை என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் சூழ்நிலைகளை தமக்குச் சாதகமாக ஆக்கிக்கொள்ள வேண்டும் என்று ஜெயலலிதா மிகவும் மும்முரமாக முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்.

தி.மு.க அரசைக் கலைக்க வேண்டும் என்ற தமது கோரிக்கைக்கு சமீபகாலமாக சாதகமான சூழ்நிலை நிலவாததைக் கண்ட ஜெயலலிதா அவர்கள் இப்போது அந்த சூழ்நிலை கனிந்து வந்திருப்பதாக கருதுகிறார். அவரது கோரிக்கை பற்றி வர்ணித்த கருணாநிதி 'இது அவருடைய வெகு நாளைய ஆசை, இதை நாம் கணக்கில் கொள்ளாது புறக்கணித்து விட வேண்டும்' என்று கூறியிருக்கிறார். இவ்வாறு தமிழக அரசியல் சூழல் இயங்கிக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையில் பாரதீய ஜனதா கட்சியின் தலைவர் குஜபாவ் தாக்கரே அவர்கள் ஜெயின் கமிசன் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு தி.மு.க. அரசைக் கலைக்கும் எண்ணம் பி.ஜே.பி அரசுக்கு இல்லை' என்பதை தெளிவு படுத்தியிருக்கின்றார். இது இந்திய அரசியல் சூழ்நிலையை மேலும் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது. அவர் இவ்வாறு சொல்லிய அதே நேரத்தில் பி. ஜே. பியைச் சேர்ந்த தமிழக தலைவர் இல. கணேசன் அவர்கள் வேறு விதமாக தனது கருத்தை வெளியிட்டிருக்கின்றார்.

கருணாநிதி தன்மீது தவறு எதுவும் இல்லை என்று நினைப்பாரேயானால் மத்திய அரசின் நடவடிக்கைகள் குறித்து அவர் ஏன் பதட்டம் கொள்ளவேண்டும்? என்று அவர் கேட்டிருக்கின்றார்.

இதனிடையில் அரசியல் வானில் சூழ்நிலைகள் வெகு வேகமாக மாறத் தொடங்கியுள்ளன.

இந்த அறிக்கைகள் தொடர்பாக தனது நிலையை வெளிப்படுத்த வேண்டும் என்பதற்காக காங்கிரஸ் கட்சி, பிரத்தியோகமாக தனது செயற்குழுவைக் கூட்டியுள்ளது. அதன் முடிவுகள் இன்று இரவு (ஞாயிறு) அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

காங்கிரஸ் மேற்கொள்ளும் அடுத்த கட்ட நடவடிக்கைகளை வைத்தே இந்திய அரசியலில் ஜெயின் கமிசன் அறிக்கையும் அது தொடர்பாக மத்திய அரசின் நடவடிக்கை அறிக்கையும் ஏற்படுத்தப்போகின்ற தாக்கங்கள் என்ன என்பதை ஊகிக்க முடியும். ஏனென்றால் இந்தியாவில் மாற்று அரசு ஒன்றை அமைப்பதற்குரிய முன் முயற்சியை காங்கிரஸ் எடுக்காத வரையில் வேறு விதமான அரசியல் கூட்டணிகள், அணி சேரல்கள் நடைபெறுவதற்கு வாய்ப்பில்லை என்றே கருதப்படுகிறது.

ஆனால் தி.மு.க. அரசைக் கலைக்க வேண்டும் என்ற தனது கோரிக்கையை வலியுறுத்தவும் அதில் வெற்றி பெறவும் இந்த வாய்ப்பை நழுவவிட்டால் வேறு இதுமாதிரி தனக்குச் சாதகமான வாய்ப்பு எதுவும் கிடைக்காது என்று ஜெயலலிதா நினைக்கின்ற காரணத்தினால் இதை அவ்வளது சுலபத்தில் நழுவவிட்டு விடமாட்டார்கள் என்பது உறுதியாகத் தெரிகிறது. அதன் காரணமாகவே அவர் சுப்பிரமணிய சுவாமியைக்கூட கைகளுவும் அளவுக்கு போயிருக்கிறார். ஏனென்றால் ஜெயின் அறிக்கையில் சுப்பிரமணிய சுவாமி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் பற்றி குறிப்பிடும்போது 'அவர் அதிலிருந்து வெளியேறுவதற்கு சுயமாகவே முயற்சி செய்யவேண்டும் என்றும் அவர் பதவியிலிருந்து விலகவேண்டும் என்று தான் கோரிக்கை விடுக்காததன் காரணம். அவர் எந்தப் பொறுப்பிலும் தற்போது இல்லை என்றும் செல்வி ஜெயலலிதா அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆனால் ஜெயின் கமிசன் அறிக்கையில் மேலும் 21 பேரிடம் விரிவான முறையில் விசாரணை நடத்தப்பட்டிருக்க வேண்டும் என்ற குறிப்புக் காணப்படுகிறது. அந்தப் பட்டியலில் ஜெயலலிதாவின் பெய

(தொடர்ச்சி 8ம் பக்கம்)


# மரியன்னையின் வருடாந்த திருவிழா 1998

*'மரியன்னை மாந்தரின் துயர் துடைக்கும் தூயவள்'*

**பாசல் மரியஸ்ரைன் ஆலயம்**

08.08.1998 சனிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு Fluh Station இல் இருந்து ஆலயத்திற்கு பஸ் புறப்படும் நேரங்கள். 9.12, 10.20, 11.12, 12.00.

தாயகத்தில் மடுத்திருப்பதியில் நடைபெறுவது போன்று திருநாட் திருப்பலியும் மடுத்திருப்பதியிலிருந்து விஷேச விதமாக தருவிக்கப்பட்ட மருத மடுமாதாவின் திருச்சுருப பவனியும் மடுமாதாவின் ஆசீரும் இலங்கை நாட்டு சமாதானத்திற்காக வேண்டிய வழிபாடுகளும் திருயாத்திரை விழாவாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இத்தினத்தில் சேகரிக்கப்படும் காணிக்கை பணம் யாவும் எம்மண்ணில் துயர் துடைக்க அனுப்பி வைக்கப்படும்.



OUR LADY OF MADHU
உலகில் பெரிய அகதி முகாம்களில் ஒன்றாக மாறியுள்ள மடுத்திருப்பதி

*நேர்த்திக்கான தொடர்புகளுக்கு:*
திரு.த.ஜெயபாலன் - 031-922-23-17
திரு.எல்.ராஜன் - 031-971 35 01
திரு.எஸ்.கபிரியேல் - 056-462-24-85.

அன்னையின் ஆசீர்பெற அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.
அருள் நிறை மரியே வாழ்க.

# திருயாத்திரை

**சுவிஸ் கத்தோலிக்க ஆன்மீக பணியக மத்திய குழு.**
**அருட்பணி சவரி விக்ரர் அவிதப்பர்**
**077-48 00 09. 01-454 81 15.**

*தொடரும் பேரழிவால் துயருறும் தாயக மக்களுக்காக செபிக்க தளராத நம்பிக்கையோடும் உறுதியான விசுவாசத்தோடும் அன்பின் ஒருமைப்பாட்டில் ஒன்று கூடுவோம்.*

அருள் உரை வழங்குபவர் அருட்திரு சேர்வாரியூஸ் அடிகளார். (இந்தியா)



# சித்திரக் கண்காட்சி

*(நிறங்களற்றது)*

**காலம்: 16.08.1998 ஞாயிறு**
**நேரம்: காலை 10 மணி தொடக்கம் மாலை 8 மணி வரை**
**இடம்: தமிழ்ச் சோலை மண்டபம்**
26, Rue du Departement, 75018 Paris
M°: Marx Dormoy / La Chapelle ou Gare du Nord

**அனுமதி: இலவசம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சார்க்' மாநாட்டு ஆசனச் சண்டைகள்

கடந்தவாரம் சிறீலங்காவைப் பிடித்து உலுக்கிய 'சார்க்' காய்ச்சல் தற்பொழுது முடிவிற்கு வந்த போதிலும் சார்க் மாநாட்டிற்காக எடுக்கப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் இன்னும் முடிவிற்கு வரவில்லை. வகை தொகையின்றி தமிழ் மக்கள் கைது செய்யப்படுவது இன்னமும் தொடர்ந்தவண்ணமே உள்ளது. சர்வதேச மனிதாபிமான அமைப்புக்கள்கூட இந்த விடயத்தில் குருட்டுத்தனமாக நடந்து கொள்வதையும் அவதானிக்க முடிகிறது. சிறீலங்காவின் தலைநகரில் 10-வது சார்க் உச்சி மாநாடு நடந்தபோது ஏறுக்கு மாறான பல விடயங்கள் நடைபெற்றமை, சிறீலங்கா அரசு எவ்வளவுதூரம் குழம்பியுள்ளது என்பதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாக அமைகிறது.


வன்னிக் களத்திலே பெரியதொரு போர் நடைபெற்றாலும் அதன் அதிர்வலைகள் கொழும்பைத் தாக்கும் என்ற பீதியில் அரசு எடுத்த பல நடவடிக்கைகள் அது எதிர்பார்த்ததற்கு மாறான விளைவுகளையே கொடுத்துள்ளது. திட்டமிட்டு நடாத்தப்பட்ட மாநாடு கூட, பல குழப்பங்கள் நிறைந்ததாகக் காணப்பட்டது. பாதுகாப்பு ஏற்பாடுகள் என்ற பெயரில் வெளிநாட்டுச் செய்தியாளர்கள் மீது நடாத்தப்பட்ட சோதனைகள் அவர்களை அதிர்ச்சியடையச் செய்து 'இது ஒரு நாடா' என்ற ரீதியில்கூட கருத்துக்களை வெளிப்பட வைத்துள்ளது. மாநாட்டின் தொடக்கமே குழப்பத்துடன்தான் ஆரம்பமானது. சந்திரிகா உரையாற்ற வந்ததும் ஒலிவாங்கிகள் வேலைசெய்ய மறுத்துவிட்டன. சந்திரிகாவின் வெறும் வாயசைவுகள் மாத்திரமே சுமார் மூன்று நிமிடங்களுக்கு தெற்காசிய நாடுகளில் கூட காண்பிக்கப்பட்டது. 'இது திட்டமிடப்பட்ட ஒரு சதி நடவடிக்கையா?' என்று புலனாய்வுத் துறையினர் விசாரணைகளை ஆரம்பித்தனர். ஒலி அமைப்பிற்குப் பொறுப்பான தொழில் நுட்பவியலாளர்கள் துருவி விசாரிக்கப்பட்டனர்.

இதேவேளை ஆளும் கட்சிக்குள்கூட மாநாடு தொடர்பான ஒழுங்குகள் அதிருப்தியைக் கிளப்பியுள்ளன. குறிப்பாக சிறீலங்காவின் கல்வி அமைச்சர் ரிச்சட்பத்திரன மண்டபத்திலே மிகவும் குழப்பமடைந்ததானது சிறிது சலசலப்பை ஏற்படுத்தியது. அரசிலே மிகவும் முக்கியமானவராக கணிக்கப்படும் இவருக்குரிய ஆசனம் மூன்றாவது வரிசையிலே கொடுக்கப்பட்டதால் அமைச்சர் சீற்றமடைந்தார். இவரைவிடக் குறைந்த தகுதியுள்ள

## பேம்பி

இணையமைச்சர்களான நமித்திர ஏக்கநாயக்க, அலவிமௌலானா, எஸ்.பி. திசாநாயக்க போன்றோர்க்கு முதலாவது இரண்டாவது வரிசையில் ஆசனங்கள் ஒதுக்கப்பட்டு, ரிச்சட் பத்திரனவிற்கு மூன்றாவது வரிசையிலே இடம் கொடுக்கப்பட்டதே இதற்குக் காரணம். மாநாட்டு மண்டபத்திலேயே கோபத்தை வெளிப்படுத்திய ரிச்சட்பத்திரன மாநாட்டு ஒழுங்குகளுக்குப் பொறுப்பான வெளிநாட்டு அமைச்சு அதிகாரிகளை உடனடியாக அழைத்து அதற்கு விளக்கம் கோரினார். அதிகாரிகளும் விளக்கமளிக்க முற்பட்டனர். அமைச்சரின் கோபம் மேலும் ஏறியது. பத்திரனவின் கோபத்தை அவதானித்த நீதி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் உடனடியாக அவ்விடத்திற்கு வந்து பத்தினவை தனது முன்வரிசை ஆசனத்தில் அமரும்படி கோரி அவரது சீற்றத்தைத் தணிக்க முற்பட்டார். ஆனாலும் பத்திரன அதற்கு இணங்காமல் இவ்விடயத்தைப் அமைச்சரவையில் பிரஸ்தாபிக்கப்போவதாகக்கூறிவிட்டு தனது மூன்றாவது வரிசை ஆசனத்தில் அமர்ந்துகொண்டார்.

இதேவேளை ஐக்கியதேசியக் கட்சியைச் சேர்ந்த அனுரா பண்டாரநாயக்காவிற்கு வழக்கத்திற்கு மாறான முறையில் முன்வரிசை ஆசனத்தில் இடம் கொடுக்கப்பட்டிருந்தது பல கேள்விகளை எழுப்பியது. சாதாரண அழைப்பு மூலம் மாநாட்டிற்கு அழைக்கப்பட்ட அனுராவிற்கு எவ்வாறு முன்வரிசையில் இடம் கொடுக்கப்பட்டதெனக் கோரியவர்களுக்கு, அது அநுராவின் தாயாரான சிறீமாவின் பணிப்பின் பேரில் கொடுக்கப்பட்டதெனத் தெரிந்ததும் சலசலக்காமல் அடங்கிக்கொண்டனர். ஆனால் அனுராவிற்கு கௌரவம் கொடுக்கப்பட்ட போதிலும், எதிர்க் கட்சித் தலைவரான ரணில் ஆறாவது வரிசையிலேயே உட்கார வைக்கப்



சார்க்: நிழற்படத்தில் நெருக்கம்: செயலில் பிளவு

பட்டார். என்னதான் ஐ.தே.க. காரரானாலும் எதிர்க்கட்சித் தலைவரான ரணிலை ஆறாவது வரிசையில் உட்கார வைத்ததற்கு அரசின் உள்ளேயே எதிர்ப்புக் கிளம்பியது. இவ்விடயத்தினை பெர்னாண்டோபுள்ளே போன்ற அமைச்சர்கள் சுட்டிக்காட்டி ரணிலுக்கு முன்வரிசையில் ஆசனம் ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும் எனவும் கருத்தினை வெளியிட்டனர். ஆக மொத்தம் சார்க் மாநாட்டின் முதல் நாள் நிகழ்வுகள் இந்த ஆசனச் சண்டைகளிலேயே பெரும்பாலும் கழிந்தன. ஆயினும் இவ் விடயங்கள் வெளிநாட்டுத் தலைவர்களுக்கோ, பிரதிநிதிகளுக்கோ தெரிந்திருக்க நியாயம் இல்லை என்பது அரசின் கணிப்பு. முதல் நாள் நிகழ்வுகள் முடிவுறும் தறுவாயில் சிறீலங்காவின் தேசியக் கீதம் இசைக்கப்பட்டிருக்க வேண்டும். ஒழுங்குகளும் அவ்வாறுதான் இருந்தன. ஆனால் இதுபற்றி எதுவும் பிரதிநிதிகளுக்கு அறிவுறுத்தப்படாததால் பிரதிநிதிகள் எழுந்து சென்றுவிட்டனர். அரசின் ஒருசில பிரதிநிதிகள் மாத்திரம் தேசிய கீதத்திற்காகக் காத்திருந்தபோதிலும் அவர்களுக்கு தங்கள் நாட்டுத் தேசிய கீதத்தைகேட்கச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

மாநாட்டின் இறுதியில் உத்தியோக பூர்வமாக மாநாட்டு முடிவுகளை வெளியிட்ட சந்திரிகா, சார்க் மாநாடு வெற்றியளித்துள்ளதாக அறிவித்துள்ள போதிலும் உண்மையிலேயே மாநாடு தோல்வியில்தான் முடி[illegible] முடிவுகள் எடுக்கப்படவில்லை. மேலெழுந்தவாரியான சில திட்டங்களே தீட்டப்பட்டன. சார்க் அமைப்பு என்பது தெற்காசியாவில் ஒரு பலமான ஒரு அமைப்பு அல்ல என்பதனை இப்பத்தாவது மாநாடு மீண்டுமொரு முறை நிரூபித்துவிட்டது.

கடந்தவாரம் நடைபெற்ற ஏனைய அரசியல் நிகழ்வுகளில் ஐ.தே.க.வின் சிறிசேனகுரேயின் விடயம் மீண்டும் துளிர்விட்டுள்ளது. ஒரு காலத்தில் பிரேமதாசாவின் தளபதியாக இருந்த சிறிசேனகுரேயை மீண்டும் ஐ.தே.க.விற்குள் பலமான ஒரு நிலைக்குக் கொண்டுவர வேண்டும் என்பதில் ஐ.தே.க. வின் ஒரு சாரார் குறியாக உள்ளனர். இதற்காக கடந்தவாரம் இவர்களால் கொழும்பில் ஒரு போராட்டமே நடாத்தப்பட்டுள்ளது. சிறிசேனகுரேயிற்கு ஆதரவான கையெழுத்து வேட்டையிலும் இவர்கள் இறங்கியுள்ளது நிச்சயமாக ரணிலுக்கு ஒரு நல்ல செய்தியல்ல. ஏற்கனவே அனுரா, மெண்டிஸ் போன்றோர்களால் தலையிடியைச் சந்தித்துள்ள ரணிலின் தலைமைத்துவத்திற்கு சிறிசேனகுரே இன்னொரு சோதனைக் களமாக உருவெடுத்துள்ளார். இவ்விடயங்கள் ஒருபுறமிருக்க, மாகாண சபைத் தேர்தல்களை நடாத்துவதற்கான இறுதி அறிகுறிகள் ஒன்றும் இதுவரை வெளியாகவில்லை. பெரும்பாலும் தேர்தல் ஒத்திவைக்கப்படலாம் என்ற கருத்தே நிலவுகிறது. ஆனால் இதனை எதிர்க் கட்சிகள் ஏற்றுக்கொள்ளத் தயாராகவில்லை. அவசரகால விதிகளின்படி தேர்தல் ஒத்திவைக்கப்பட்டால் அவ்விடயத்தை நீதி மன்றம் வரை கொண்டு செல்லப்போவதாக ஜே.வி.பி. கடந்தவாரம் அறிவித்துள்ளதுடன், தேர்தல் நடாத்தப்படுவதை தவிர்ப்பதற்காக அரசு குண்டர் கலாச்சாரத்தை நாட்டின் பல பகுதிகளிலும் முடுக்கிவிட்டதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளது. ஏற்கனவே அம்பாந்தோட்டைப் பகுதியில் நூற்றுக்கும் மேற்பட்ட படுகொலைகள் மற்றும் வன்செயல்களில் அரசு ஈடுபட்டதாகவும் அக்கட்சி குறிப்பிட்டுள்ளது. எது எப்படியோ அரசின் அடுத்தகட்ட நகர்விற்காக இவர்கள் அனைவரும் இப்போது காத்திருக்கிறார்கள்.

## சமகாலக் காட்சி

**தமிழ் குழுக்கள் இந்திய தூதரக வாசலில்:**

*ஐயன்மீர்... ஐயன்மீர் தங்கள் திருவாசல் தேடி வந்திருக்கிறோம். இங்கு எழுந்தருளும் பரம்பொருளின் தரிசனம் பெற தாங்கள் கொஞ்சம் கருணை புரிய வேண்டும்.*

**தூதரக அதிகாரி:**

*நல்லது... நல்லது ஆனால் உருப்படியற்றவர்களை சந்திக்க பரம்பொருள் பிரியப் படவில்லையே. நாம் என்ன செய்ய?*

**த.குழுக்கள்:**

*அப்படி சொல்லி எங்கள் மனங்களை நோகடிக்க வேண்டாம் ஐயன்மீர்! பரம் பொருளிடம் எங்கள் குறை கூற ஒரு சந்தர்ப்பம் ஏற்படுத்தித்தர வேண்டும். அனுபவமற்றவர்கள் என எமை எண்ண வேண்டாம். இப்படி பலரின் காலைப் பிடித்த முன்னனுபவங்கள், முன்னர் ஆயுதங்களைத் தூக்கினாலும் இப்போ ஜனநாயக நீரோட்டத்தில் கலந்து கொண்ட எமக்குஉண்டு. வேண்டுமானால் அமெரிக்க பிரதிநிதி... ஐ.நா. பிரதிநிதியிடம் கேட்டுப்பாருங்கள். உள்ளூர் சிபார்சுகள் வேண்டுமானால் கூட ஏராளம் உண்டு.*

**தூதரக அதிகாரி:**

*ஆங்... உங்களைப் பார்த்தால் எனக்கு பாவமாக இருக்கிறதே. வேண்டுமானால் ஒன்று செய்யலாம். நீங்கள் எல்லோரும் பரம்பொருளை சந்திக்க ஐந்தே ஐந்து நிமிடங்கள் தரலாம்.*

**த.குழுக்கள்:**

*ஆ..... என்னது ஆக ஐந்தே நிமிடங்கள் தானா?*

**தூதரக அதிகாரி:**

*உங்கள் செயற்திறனுக்கு ஐந்து நிமிடம் கூட அதிகமே.*

**கூட்டணி பெரியவர்:**

*அடியேனின் சிறிய விண்ணப்பம், இந்த சிறியோருடன் கூடி பரம்பொருளை சந்திக்க எம் மனம் ஒப்பவில்லை. ஆகவே எமக்கு தனியான சந்தர்ப்பம் ஏற்படுத்தித்தர வேண்டும். எமது அரசியல் தகுதிக்கும் அதுவே பெருமை தரும்.*

**தூதரக அதிகாரி:**

*இல்லை! இல்லை!! எல்லோருமே ஒன்றாக சந்தியுங்கள். சிறியோரின் ஆயுதங்கள் குறித்து அஞ்சவேண்டாம். எல்லாம் களைந்தெடுத்த பின்னர்தான் அவர்களையும் அனுமதிப்போம்.*

(காட்சி மாற்றம்)

**(பரம் பொருள் முன்னால் த.குழுக்கள்)**

*பரம் பொருளே... எம் ஊழ்வினைப் பலன் அறுக்க உதித்த உதயமே... காங்கிரசின் சதி தாண்டி அரியணை ஏறிய அருமருந்தே...*

**பரம்பொருளின் செயலர்:**

*பரம் பொருளின் புகழ் பாடியதில் இரு நிமிடங்கள் கழிந்து விட்டன. மிகுதி மூன்று நிமிடங்கள் உண்டு. உங்கள் பிரச்சினைகளை இப்போது கூறலாம்.*

**த.குழுக்கள் (கூட்டாக):**

*இனப்பிரச்சனைக்கு தீர்வு காண தாங்கள் சித்தப்பட வேண்டும் பரம்பொருளே!*

**செயலர்:**

*நேரம் முடிந்துவிட்டது. நீவிர் அனைவரும் தேநீர் அருந்திவிட்டு செல்லலாம். உங்கள் வேண்டுதல்கள் பரம்பொருளின் செவிகளுக்குள் புகுந்திருக்கும் என நினைக்கிறேன்.*

**த.குழுக்கள்:**

*தேநீர் அருந்த இப்போது நேரமில்லை. பரம் பொருளுடனான சந்திப்புபற்றி விரிவான அறிக்கைகள் விளாசி எழுதும் நேரமிது. நாம் வருகிறோம்.*

**Radio Asia Canada**

24 மணிநேர தமிழ் ஒலிபரப்பு

**ஐரோப்பிய நாடுகளில்:**
Astra Satellite Video Channel 7 இல்
Audio Frequencey : 7.38 mh2
Video Carrier: 11.303 Gh2

**சிற்றலை வரிசை ஒலிபரப்பு:**
Gmt 20:00 -22:00 -15,245 Mh2
GMT 22:00 -24:00-11.960 Mh2
GMT 24:00 -02:00 -9.560 Mh2
GMT 02:00 -04:00 -9:855 Mh2

**அவுஸ்திரேலியா:** 24 மணிநேரம் - Stereo -173.6 Mh2

**தலைமையகத் தொடர்புகளுக்கு:**

**Radio Asia Canada**
680 Progress Avenue. Unit 1
Scarborough, Ontario, M 1H 3A5, Canada.
Tel: 416-289-1522 / Fax: 416-289-1840

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயசிக்குறுயின் முதுகெலும்பை முறித்த கேணல் கிட்டு பீரங்கிப் படையணி

## போரியலைப் புதிதாகப் புகட்டும் தமிழீழ போர்க்களம் V




எமது இராணுவம் இன்று விடுதலைப் புலிகளின் பலப் பிராந்தியத்திற்குள் சிக்கிக் கொண்டுள்ளது. ஆனால் அரசாங்கமோ பாதை திறப்பின் மூன்றில் இரண்டு பகுதிகளை நிறைவேற்றிவிட்டதாக கூறுகிறது. ஆனால் உண்மை அதுவல்ல. மக்களுக்கு உண்மையைக் கூற அரசு தயங்குகிறது. எமது இராணுவம் இன்று பிராந்திய பரீட்சயம் கொண்ட அதி உயர் தன்னம்பிக்கையையும், வளங்களையும் கொண்ட ஒரு கெரில்லா இராணுவத்திடம் சிக்கிக்கொண்டுள்ளது என்பதனை மறுக்க முடியாது.

இன்று எமது இராணுவம் தொடர்ந்து பின்னடைவுகளை சந்திக்கின்றது என்றால் அதற்குக் காரணம் ஆரம்பத்தில் சிறுரக ஆயுதங்களைக்கொண்டு யுத்தம் செய்த கெரில்லாக்கள் கனரக ஆயுத மயமாக்கப்பட்டதுதான் என்பது மறுக்கமுடியாத உண்மை. அப்படி அவர்கள் மரபுரீதியான இராணுவமாக மாற்றப்படுவதற்கான பிரதான காரணியாக எமது அரசே இருந்துள்ளது என்பதுதான் உண்மை நிலை. தாங்கிகளையும் கவச வாகனங்களையும் துணையாகக் கொண்டு போர் தொடுக்கும் எமது இராணுவத்தை, துரித நகர்வுகளை மேற்கொள்ளக்கூடிய, போர்த்திட்டங்களை அடிக்கடி மாற்றக்கூடிய புலிகளின் கெரில்லா அணிகள் மிக இலகுவாகத் தாக்குகின்றன. தொடரும் ஜெயசிக்குறுய் வழியில் விடுதலைப் புலிகளுக்கு தாக்குதல் களங்களையும் அதற்கான வசதிகளையும் எமது இராணுவத்தினர்தான் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்கள். அவர்களது நீண்டதூர எறிகணைகளும், மோட்டார்களும் எமது படையினர் மேல் சரமாரியாக வீழ்ந்து பாரிய இழப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. சரியாகச் சொல்வதானால் ஜெயசிக்குறுய் இராணுவத்திற்கு பிரதான எதிரி விடுதலைப் புலிகளின் நீண்டதூர எறிகணைகள்தான். விடுதலைப் புலிகளின் எறிகணைத் தாக்குதல்கள் எமது இராணுவத்தின் நிலைகள் மீது குறி தப்பாது வீழ்ந்து வெடிக்கின்றன. இதற்கு அவர்கள் தற்போது பெற்றுள்ள போர் அனுபவமே சான்று.



பெருந்தொகை ஆயுதங்களை வாங்க ஆயுத வியாபாரிகளிடம் நாட்டை அரசு அடகு வைத்தது. இன்று அப்படி வாங்கிய ஆயுத தளவாடங்களை விடுதலைப் புலிகளிடமிழந்து அதன் மூலமாகவே பேரிழப்புக்களைச் சந்திக்கின்றது.

சிறீலங்காவின் முன்னாள் இராணுவ முக்கியஸ்தரொருவர் கொழும்பு பத்திரிகையொன்றிற்கு எழுதிய இராணுவ ஆய்வொன்றின் ஒரு பகுதிதான் இது. இதிலிருந்து சிறீலங்கா இராணுவத்தின்மேல் விடுதலைப் புலிகள் தொடர்ந்து நடாத்திவரும் தாக்குதல்களினால் தென்பகுதியில் தோன்றியுள்ள ஒருவித நிலைப்பாட்டினை அறிந்து கொள்ளக்கூடியதாய் உள்ளது.

சிறீலங்கா இராணுவம் தனது படைநகர்வின் அடுத்த அங்கமாக புளியங்குளத்தினைக் கைப்பற்றி தென் பகுதிக்கு வெற்றியை அறிவிக்க பெருமெடுப்பில் முயற்சிகளை மேற்கொண்டது. புளியங்குளத்தில் முதல்நாள் தனது படைநகர்விற்கு கனரக படைப்பிரிவின் உதவியையே நாடியது. சுமார் 6 தாங்கிகள் விடுதலைப் புலிகளின் காவல் நிலைகளுக்கூடாக தாக்குதல்களை ஆரம்பித்தனர். ஆனால் விடுதலைப் புலிகளின் உக்கிரமான தந்திரமான தாக்குதல்களை எதிர்த்து முன்னேற அவைகளால் முடியவில்லை. இந்நிலையில் தாக்குதல்களை இடைநிறுத்திக்கொண்டு அவைகள் பின்வாங்கிக்கொண்டன. மறுநாள் மீண்டும் ஓர் நகர்வு முயற்சியினை தாங்கிகள் மேற்கொண்டபோது மாலதி படையணியினால் ஓர் தாங்கி முற்றாக அழிக்கப்பட்டது. அத்துடன் அன்றைய நகர்வு முடிவுக்கு வந்தது. எவ்வகையிலேனும் புளியங்குளத்தைக் கைப்பற்றியாக வேண்டும் என்ற பிடிவாதத்தில் ஓகஸ்ட் 26-ம் திகதி புளியங்குளத்தை தென்பகுதியினூடாக தாக்கிக் கைப்பற்ற இராணுவம் முனைந்தபோது மீண்டும் ஓர் தாங்கியை இழந்து பின்வாங்கிக் கொண்டது.

புளியங்குளத்தைக் கைப்பற்ற சிறீலங்கா நீண்டகால முயற்சிகளை மேற்கொண்டும் முடியாத நிலையில் புளியங்குளத்தில் நிலை கொண்டிருந்த விடுதலைப் புலிகளின் அணிகளுக்கான விநியோக பாதையை கொமாண்டோ தாக்குதல் ஒன்றின் மூலம் கைப்பற்றி அவர்களை தனிமைப்படுத்துவதன் மூலம் விடுதலைப் புலிகளை புளியங்குளத்திலிருந்து பின்வாங்கச் செய்ய இராணுவம் திட்டம் தீட்டியது. புளியங்குளத்திற்கு வடக்கே புதூர்ச் சந்தியை இரவோடிரவாகக் கைப்பற்ற அது முனைந்தது. அதேபோல் செப்டெம்பர் மாதம் 10-ம் திகதி இராணுவத்தின் விசேட கொமாண்டோ அணியொன்று இரவோடிரவாக புதூர்ச் சந்தியை கைப்பற்றிக் கொண்டது. அதேபோல் மற்றுமோர் படையணி மேற்காகவும், புதூர்ச் சந்தியை நோக்கி முன்னேறியபோது விடுதலைப் புலிகளின் கண்காணிப்பு அணியினால் அவதானிக்கப்பட்ட நிலையில் அவ் இராணுவ அணி விடுதலைப் புலிகளால் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டது. இப்போது விடுதலைப் புலிகளுக்கு புளியங்குளத்தைவிட்டு வெளியேறுவதா அல்லது புதூர்ச் சந்தியில் இருந்து இராணுவத்தை துரத்தியடிப்பதா என்கின்ற நிலை. இறுதியாக புதூர்ச் சந்தியைக் கைப்பற்றும் ஓர் முறியடிப்பு தாக்குதலை நடாத்துவதென முடிவெடுக்கப்பட்டது. சிறீலங்காவின் விசேட கொமாண்டோக்களால் கைப்பற்றப்பட்டிருந்த புதூர்ச் சந்தி அன்றிரவே விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாகியது. சந்தியைக் கைப்பற்றி அப்பகுதியை பலப்படுத்தமுன்பாகவே விடுதலைப் புலிகளிடமிருந்து எதிர்ப்பு வரும் என இராணுவம் எதிர்பார்த்திருக்கவில்லை. இத் தாக்குதலில்



ஜெயந்தன் படையணி, கடற்புலிப் படையணி போன்றவைகள் நேரடியாக போரிட . கேணல் கிட்டு பீரங்கிப் படையணி கொமாண்டோப் படையணியின் மீது சரமாரியான எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டது. தாம் கைப்பற்றியிருந்த புதூர் சந்தியிலிருந்து பெரும் இழப்புக்களுடன் ஜெயசிக்குறுய் இராணுவம் பின்வாங்கிக்கொண்டது. இத்தாக்குதல்களில் 200 இராணுவத்தினர் இறந்து 500 இற்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர். மீண்டுமொருமுறை கனகராயன் குளப் பகுதியால் முன்னேறி புளியங்குளத்தைக் கைப்பற்ற முயன்ற இராணுவம் மீண்டும் தோல்வியுடன் பின்வாங்கியது. இத்துடன் புளியங்குளச் சமர்கள் முடிவுக்கு வந்தன. புளியங்குளத்தை கைப்பற்றுவது அவசியமில்லை என்கின்ற நிலையில் வேறு பாதைகளினூடாக நகர்வினை மேற்கொள்ள ஜெயசிக்குறுய் படையணி முயற்சிகளை மேற்கொண்டது.

**புளியங்குளத்தைக் கைப்பற்ற சிறீலங்கா நீண்டகால முயற்சிகளை மேற்கொண்டும் முடியாத நிலையில் புளியங்குளத்தில் நிலை கொண்டிருந்த விடுதலைப் புலிகளின் அணிகளுக்கான விநியோக பாதையை கொமாண்டோ தாக்குதல் ஒன்றின் மூலம் கைப்பற்றி அவர்களை தனிமைப்படுத்துவதன் மூலம் விடுதலைப் புலிகளை புளியங்குளத்திலிருந்து பின்வாங்கச் செய்ய இராணுவம் திட்டம் தீட்டியது.**

*(இன்னும் வரும்)*


## தீபாவளி - கந்தர்சஷ்டி கொண்டாட தென்னிந்தியத் திருத்தலச் சுற்றுலா

இவ்வாண்டு தீபாவளி மற்றும் கந்தர் சஷ்டியைத் தமிழகத்தில் கொண்டாடும் வகையில் ஒரு திருத்தலச் சுற்றுலா ஏற்பாடு செய்யப்படுகிறது. தமிழ்நாடு, கேரளா, மைசூர், ஆந்திரா ஆகிய தென் மாநிலங்களில் உள்ள முக்கியக் கோவில்கள், தேவாலயங்கள், பள்ளிவாசல்கள் திருத்தலங்களைத் தரிசித்து, புண்ணிய தீர்த்தங்களில் நீராடி, சாயிபாபா, மேல் மருவத்தூர் அம்மா, பங்காரு அடிகளார் ஆகியவர்களின் அருளாசி பெற்று வருவோம்.

**இந்திய விசாவுக்கான ஏற்பாடுகள் செய்து தருகிறோம்.**

பாரிஸ் - சென்னை- பாரிஸ் விமானக் கட்டணம், இந்தியாவில் 15 நாட்களுக்கு சொகுசுப் பேருந்து வண்டியில் பயணம், உணவு, தங்கும் வசதிகள், ஆலயங்களில் விசேட தரிசனக் கட்டணங்கள், தீபாவளிக் கொண்டாட்டம் ஆகிய அனைத்தும் எமது செலவிலேயே ஏற்பாடு செய்கிறோம்.

இதனைத் தொடர்ந்து நீங்கள் இந்தியாவில் தங்கியிருந்து திருமணம், வீடு வாங்குதல், உற்றார் உறவினர்களுடன் தங்கியிருத்தல் ஆகிய அலுவல்களையும் பார்க்கலாம்.

**இத்தனைக்கும் சேர்த்து மொத்தக்கட்டணம் 7980 பிராங்குகள் மட்டுமே!**

**புறப்படும் நாள்: 17.10.98**

**திரும்பி வரும் நாள்: 17.11.98**

மிகக் குறைந்த இடங்களே ஏற்பாடு செய்வதால் இந்த அரிய வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொள்ள உடனே உங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு: **ECIAC** (Eurpean Centre for Indian Arts and Culture)
36, Rue Ludovic Piette. 95300 Pontoise
6, Rue Demarauay. Paris - 10. Metro: Gare du Nord.
தொலைபேசி: 01 42 05 48 11/06 60 97 57 33


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயின் கமிஷனின் இறுதி அறிக்கை ஆறரை ஆண்டுகள் நடந்த விசாரணை !

இந்தியாவின் பிரதமர் ராஜீவ் காந்தி கொலைச்சதி பற்றி ஆறரை ஆண்டுகள் விசாரித்த நீதிபதி எம்.சி. ஜெயினின் இறுதி அறிக்கையை மத்திய அரசு நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது. அத்தோடு நடவடிக்கை அறிக்கையையும் அளித்துள்ளது. இதையடுத்து இன்னொரு விசாரணை நடக்க இருக்கிறது. ஜெயின் இறுதி அறிக்கை கடந்த மார்ச் 7-ம் திகதி அரசிடம் கொடுக்கப்பட முதலே அறிக்கையின் பல்வேறு பகுதிகள் வெளிவரத் தொடங்கின.

ஆதலால் கமிஷனின் இடைக்கால அறிக்கை கடந்த ஆண்டு ஆகஸ்ட் 28-ம் திகதி தாக்கல் செய்த போது பெரும் அரசியல் புயலைக் கிளப்பியது. மத்தியில் இருந்த ஐக்கிய முன்னணி ஆட்சியைக் கவிழ்த்தது.

இந்த அறிக்கையில் ராஜீவ் காந்தி கொலைச் சதியில் தி.மு.க.வுக்கு, தொடர்பிருப்பதாக எதுவும் கூறப்படவில்லை. ஆனால் கருணாநிதி தொடர்பாக இடைக்கால அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட கடுமையான கருத்துக்



கள் மற்றும் இறுதி அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட கடுமையான கருத்துக்கள் மற்றும் இறுதி அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட ஐயங்களின் அடிப்படையில் மேற்கொண்டு என்ன செய்வது என்பது பற்றி முடிவு செய்யும் பொறுப்பு சி.பி.ஐ.யின் பல்துறை கண்காணிப்பு அமைப்பிடம் விடப்பட்டுள்ளது. ராஜீவ் காந்தி கொலையில் சந்திர சுவாமிக்கு தொடர்பிருக்க கூடும் என்றும் கமிஷன் தீவிர சந்தேகம் கிளப்பியுள்ளது. இது தொடர்பாக அவர் மீது மேற்கொண்டு விசாரணை நடாத்த அது பரிந்துரைத்துள்ளது. சந்திரசுவாமிக்கும் ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமிக்கும் உள்ள தொடர்பு குறித்து கேள்விகளை எழுப்பியுள்ள கமிஷன் விசாரணையின்போது சுப்பிரமணிய சுவாமி சரியான முறையில் ஒத்துழைக்கவில்லை என்று புகார் கூறியுள்ளது.

## பத்திரிகை நிருபர் மரணம் விபத்தா? சதியா?


சென்னையில் உள்ள வாரப் பத்திரிகை ஒன்றில் நிருபராக பணிபுரிபவர் வேல்பாண்டியன். இவர் தன்பணிமுடித்து இரவு 11 மணியளவில் வீடு திரும்பிக் கொண்டிருந்த போது மணல் லாரி இவர் மீது மோதியதில் பரிதாபகரமாக மரணம் அடைந்தார்.

இவர் தமிழ்நாட்டை உலுக்கிய விவகாரங்களை வெளிக் கொணர்ந்தவர். போலிச்சாமியாரான பிரேமானந்தா சாமியின் பாலியல் கொலைகள் பற்றியும், தமிழ்நாடு பெண்காவலர் துறையின் முறைகேடான பாலியல் நடத்தைகள் பற்றியும் வெளிச்சத்திற்கு கொண்டு வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பயணிகள் விமானம் தீப்பிடித்து விழுந்தது எண்மர் பலி !

இந்தியன் ஏர்லைன்சின் துணை நிறுவனமான 'அலையன்ஸ் ஏர்' க்கு சொந்தமான பயணிகள் விமானம் 18 பேர் அமர்ந்து பயணிக்க கூடியது. கடந்த வியாழக்கிழமை லட்சத்தீவின் அகத்தி விமான நிலையத்தில் இருந்து கொச்சிக்கு வந்த விமானம் எட்டுப்பேருடன் நிருவனந்தபுரம் புறப்பட்டது. புறப்பட்ட சிறிது நேரத்திலேயே விபத்து ஏற்பட்டது.

இடிமுழக்கம் போன்ற ஓசை கேட்டது. வானத்தைப் பார்த்த போது பெரிய தீப்பந்து தெரிந்தது. அது மெல்ல கீழே இறங்கியது. என்று நேரில் பார்த்த சிலர் கூறினர். விபத்துக்கான காரணம் தெரியவில்லை. விசாரணை நடைபெறுகின்றது.




(14ம் பக்கத் தொடர்ச்சி)

## தமிழக அரசியலில் புயலை...

ரும் இடம் பெற்றிருக்கிறது. ஆனால் தனது பெயர் அதில் இடம் பெற்றிருப்பதை இருட்டடிப்புச் செய்து வருகிறார் என்று சில தகவல் தொடர்பு சாதனங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

இந்த நிலையில் அடுத்து வரும் சில நாட்களில் குறிப்பாக ஜெயின் கமிசன் அறிக்கை ஏற்படுத்தப்போகிற அரசியல் தாக்கம் என்னவாக இருக்கும் என்பதை துல்லியமாக உணரக் கூடியதாக இருக்கும்.

எந்தவிதமாக இருந்தாலும் இன்றைய ஜெயின் கமிசன் அறிக்கையும் சரி தொடர்பான மத்திய அரசின் நடவடிக்கை அறிக்கையும் சரி அது இவை தொடர்பாக தற்போது மத்திய அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளும் மீண்டும் ஈழப் பிரச்சினையை இந்திய அரசியலில் மையத்துக்குக் கொண்டு வந்திருக்கிறது.

கடந்தவாரம் தமிழ் நாட்டுக்கு வந்த ஈழத் தமிழ் அகதிகள் படகு கவிழ்ந்து 44 பேர்கள் பரிதாபமாகச் செத்தபோதும் கூட எழுந்திராத அதிர்வு அலை தாக்கம், தற்போது ஜெயின் கமிசன் அறிக்கையைத் தொடர்ந்து இங்கே (தமிழ்நாட்டில்) ஏற்பட்டிருக்கிறது.

இதுவரை தமிழக மக்கள் மத்தியில் நீறுபூத்த நெருப்பாக இருந்த ஈழத் தமிழ் மக்களுக்கான ஆதரவு என்கின்ற தமிழ் மக்களின் உணர்வு இப்போது மிகவும் வெளிப்படையாகக் கொண்டு வந்திருக்கிறது. குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால் தி.மு.க. அரசு ஒரு வேளை கலைக்கப்படுமேயானால் எந்த வித குற்றமும் செய்யாமல் அதிலும் குறிப்பாக ஈழத் தமிழர்களுக்கு ஆதரவு கூடக் கொடுக்காத நிலையில் தங்கள் அரசு கலைக்கப்படுகின்ற நிலை ஏற்படும்போது ஏன் அவர்களை நேரடியாக ஆதரித்து இந்த நிலையை எதிர் கொள்ளலாமே என்கின்ற ஒரு எண்ணம் தி.மு.க.வின் அடிமட்டத் தொண்டர்களிடையே தோன்றத் தொடங்கியுள்ளது. இதை அதனுடைய இரண்டாங் கட்டத் தலைவர்களும் கூட பல்வேறு கூட்டங்களில் தெரிவித்துள்ளனர். அந்த விதத்தில் பார்த்தால் இந்த அறிக்கை தொடர்பாக எடுக்கப்படும் எந்தவொரு நடவடிக்கையும் ஈழத் தமிழர்களுடைய போராட்டத்திற்கு சாதகமான ஆதரவான ஒன்றாகவே அமையும் என்று நாம் சொல்லலாம்.

KING Telecom

அதிகரித்த நேரத்துடன் அறிமுகமாகின்றது புதிய "கிங் ரெலிகொம்" காட்

மொத்தக் கொள்வனவிற்கு அதிக லாபம்!







இந்தியா 40 நிமிடம்
N° Vert 25 நிமிடம்

இலங்கை 45 நிமிடம்
N° Vert 23 நிமிடம்

92, Rue de Bellville
75020 Paris (M°: Pyrénees)
Tél.: 01 44 62 93 96 Fax: 01 44 62 94 96

33, Place de Général de Gaulle
60100 Creil (Place de la Gare)
Tél.: 03 44 55 41 59 Fax: 03 44 55 42 51

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கோவா மாநிலத்தின் காங்கிரஸ் அரசு கலைப்பு!

## பா.ஜ. கூட்டணி அரசின் முதல் கலைப்பு நடவடிக்கை

## அரசியல் வட்டாரங்களில் அதிர்ச்சி

இந்தியாவின் மேற்கு கடற்கரையில் அமைந்துள்ள சிறு மாநிலம் கோவா. சட்டசபை, 40 உறுப்பினர்களை கொண்டது. காங்கிரஸ் ஆட்சி அமைந்திருந்தது. காங்கிரஸ் கட்சிக்குள் ஏற்பட்ட பதவிப் போட்டியினால் துணை முதல்வராக இருந்த வில்பிரட்டி செளசா ஆட்சியில் பிளவை ஏற்படுத்தினர். பத்து உறுப்பினர்களுடன் வெளியேறிய அவர், கோவா ராஜீவ் காங்கிரஸ் என்ற பெயரில் செயல்படுகின்றார். இதனால் முதல்வர் பெரும்பான்மையை இழந்துவிட்டார் என்ற காரணத்தைக் காட்டி ஆளுநர் ஆட்சியைக் கலைத்துவிட்டார். மத்தியில் பா.ஜ.க. கூட்டணி அரசு பதவி



யேற்ற பின் முதன் முதலாக ஒரு மாநில அரசு கலைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சர்ச்சைக்குரிய 356-வது சட்டப் பிரிவு பயன்படுத்தப்படாமல் அரசியல் சாசனத்தின் 174 - வது பிரிவின் கீழ் ஆளுநருக்குரிய அதிகாரத்தைப் பயன்படுத்தி இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

முதல்வர் பெரும்பான்மை இழந்தார் என்பதை சட்டமன்றத்தில் தான் பலப் பரீட்சை நடத்த வேண்டும் என்ற உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புக்குப் பிறகும் இப்படி நடந்துள்ளது. முதல்வர் சட்டசபையில் தம் பெரும்பான்மையை நிரூபித்தபோதும், ஆளுநர் மேற்கொண்ட நடவடிக்கை மிகுந்த சர்ச்சையை தோற்றுவித்துள்ளது. தற்போது ஆட்சியேற்றிருக்கும் புதிய அமைச்சரவைக்கு நான்கு உறுப்பினர்களைக் கொண்ட பாரதிய ஜனதா ஆதரவு தருகின்றது.

கோவாவின் ஆட்சிக் கலைப்பு இந்திய மக்களவையிலும், மாநிலங்களவையிலும் எதிரொலித்தது. சபையில் காங்கிரசார் கூச்சல் போட்டனர். கோஷம் எழுப்பினர். அவையின் மத்திய பகுதிக்கு வந்து மறியல் செய்தனர். கோவா ஆட்சி கலைக்கப்பட்டது பற்றி காங்கிரஸ் பொதுச் செயலாளர் மாதவராவ் சிந்தியா பத்திரிகையாளரிடம் தெரிவிக்கையில் 'இது ஜனநாயகத்தை கற்பழித்ததற்கு சமமாகும்' என்றார்.

# பெண்களைக் கேலி செய்தால்... தமிழக அரசின் அவசரச் சட்டம்!

பெண்களைக் கேலி செய்பவர்களுக்கு ஓராண்டு சிறை அல்லது ரூ. 10 ஆயிரம் அபராதம் விதிக்கப்படும். அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படும். தமிழ்நாடு அரசு இந்த அவசர சட்டத்தைப் பிறப்பித்துள்ளது. இது உடனடியாக அமுலுக்கு வருகிறது. அண்மையில் சென்னை எத்திராஜ் கல்லூரி மாணவி சரிகா, தெருவில் வைத்து ஆட்டோ கும்பலால் கேலி செய்யப்பட்ட போது கீழே விழுந்து தலையில் அடிபட்டு இறந்தார். இதையடுத்து பெண்கள் கேலிசெய்வதைத் தடுக்க தமிழக அரசு சட்டம் கொண்டு வரும் என்று முதல்வர் கருணாநிதி தெரிவித்திருந்தார். அதன்படி இச் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின் மூலம் எல்லா இடங்களிலும் பெண்களைக் கேலி செய்வது தடை செய்யப்படுகிறது. கல்வி நிலையங்கள், கோயில்கள், வழிபாட்டுத்தலங்கள், பேரூந்து நிலையங்கள், ரயில் நிலையங்கள், சினிமா தியேட்டர்கள், பூங்காக்கள், கடற்கரை போன்ற இடங்களில் பெண்களைக் கேலி செய்பவர்கள் தண்டிக்கப்படுவார்கள்.

# அமைச்சர் முகத்தில் அறைந்த மக்கள்

கடந்த வியாழக்கிழமை மைசூரில் மாவட்ட விவசாயிகள் மாநாடு நடந்தது. இதில் கர்நாடக மாநில அரசின் தோட்டக் கலைத் துறை அமைச்சர் டி.டி ஜெயக்குமாரின் பெயரைக் கூறியவுடனேயே பிரச்சினை தொடங்கியது. அமைச்சர் ஜெயக்குமார் தலித் மக்களுக்கு எதிராக செயல்படுவத்தாகக் கூறி அம்பேத்கார் மக்கள் விழிப்புணர்வு மகா சபை போன்ற அமைப்புகளின் உறுப்பினர்கள் எதிர்ப்பு சுலோகங்களை எழுப்பினர். சிறிது நேரத்தில் மேடையை நோக்கி செருப்புக்களை வீசினர். இதையடுத்து கூட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது. மேடையில் ஏறிய மக்கள் கூட்டம் அமைச்சரைச் சூழ்ந்து அவரின் முகத்தில் அறைந்தனர்.

கூட்ட நிகழ்ச்சி பாதிக்கப்பட்டது. கூடுதல் பொலிசார் விரைந்து அமைதியை ஏற்படுத்தினர். சட்டத்தை மக்கள் தம் கைகளில் எடுத்துக்கொள்ளக் கூடாது என்று துணை முதல்வர் அறிவுரை கூறினார்.

# இந்திய சுதந்திரதினக் கொண்டாட்டங்கள் நாசகார திட்டத்தில் பாகிஸ்தான்!

இந்தியாவின் சுதந்திரதினம் ஒவ்வொரு ஆண்டிலும் ஓகஸ்ட் 15—ம் திகதி வருகின்றதல்லவா? இவ்வாண்டு சுதந்திர தினக் கொண்டாட்டங்களின் போது இந்தியாவை நிலைகுலையச் செய்யும் பாகிஸ்தானின் சதித்திட்டம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. டெல்லியில் கைதான காஷ்மீர் தீவிரவாத பெண்கள் அமைப்பைச் சேர்ந்த ஒரு பெண்ணிடம் இருந்து பல அதிர்ச்சி அளிக்கும் தகவல்கள் கிடைத்துள்ளன. அந்த தகவல்களின்படி மேலும் பல தீவிரவாதிகள் இரயில் மூலம் டெல்லி வர இருப்பது தெரிய வந்தது. அந்த இரயிலை முற்றுகையிட்ட பொலிசார் ஐந்து பாகிஸ்தான் உளவாளிகளை கைது செய்தனர். இவர்களிடமிருந்து ஏராளமான வெடிப்பு பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

அத்துடன் இவர்கள் தாக்குதல் திட்டங்கள் பற்றிய தகவல்களும் கிடைக்கப் பெற்றன. தாங்கள் விழிப்புடன் செயல்படுவதாக இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.


# சுதந்திர தாகம்

## எழுச்சி நிகழ்வு

**08.08.98 சனி மாலை 6.00 மணி**

**Folketshuset** - *Youngs gt. 11, 0028 Oslo*

"வன்னி வாகை சூடும்
- மரியாதை வணக்க நிகழ்வு

"குருத்தி சொல்லும் குறி
- நடனக்கோலம்

"வெற்றி நிச்சயம்
- நாட்டிய நாடகம்

"வணங்கா மண்
-கிராமியக் கதம்பம்

"பள்ளிப் பிள்ளைகளும் பாரதியாரும்
- சிறுவர் நாடகம்

"நினைவழியா நாட்கள்
- கறுப்பு யூலை நினைவு

சுதந்திரதாகத்திற்கென விசேடமாகத் தயாரிக்கப்பட்ட
"அலாஸ்காவின் ஒட்டகங்கள் - திரை நாடகம்




# வாய் மொழிகளும் கொசுறுச் செய்திகளும்

☺ அணுகுண்டினால் வெந்துபோன நாகசாகியில் செடிகள் முளைக்க மறுத்த பொழுது அனைத்து எதிர்ப்புக்களையும் தாங்கி வெற்றிக் கொடி நாட்டி முளைத்த புல் அறுகம்புல் என்றால், நம்நாட்டு ஆதி மூலிகையின் பெருமையை உணர வேறு சான்று தேவையில்லை.

*– டாக்டர் அருணா தேவராஜ் 05.08.98 தேவி இதழில்*

❀ ❀ ❀

☺ எந்த நாட்டுக்காரர்கள் யோக்கியமானவர்கள் என்று ஒரு பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்கிறது. சின்ன சின்ன நாடுகளை விட்டுவிட்டு 52 பெரிய நாடுகளை மட்டுமே இந்த பட்டியலில் சேர்த்திருக்கின்றார்கள். 52 நாடுகளைக் கொண்ட இந்தப் பட்டியலில் இந்தியாவுக்கும் இடம் உண்டு. எத்தனையாவது இடம் தெரியுமா? 45 வது இடம்! 'நமக்கு பிறகு இன்னும் ஏழு நாடு இருக்கிறதே' என்று பலர் சிரிக்கத்தான் செய்வார்கள். நமது யோக்கியதைக்கும் மதிப்பெண்ணும் கொடுத்துள்ளார்கள். மொத்த மதிப்பெண் 100. இந்தியாவுக்கு கிடைத்த மதிப்பெண் - 27

*– 02.08.98 ராணி வாராந்தரியில்*

❀ ❀ ❀

☺ பூந்தமல்லி நீதிமன்ற தீர்ப்புக்கும் ஜெயின் கமிஷன் அறிக்கைக்கும் உள்ள முக்கிய முரண்பாடு என்ன? ஜெயின் கமிஷன் அறிக்கையில் பூந்தமல்லி நீதிமன்றத்தால் குற்றவாளிகள் என மரணதண்டனை விதிக்கப்பட்ட 26 பேர்கள் பற்றி எந்தவிதமான குற்றச்சாட்டும் இல்லை. பூந்தமல்லி நீதிமன்ற தீர்ப்பை ஜெயின் கமிஷன் முழுமையாக நிராகரித்துவிட்டது.

*– நக்கீரன் இதழின் கேள்விக்கு சட்டத்தரணி துரைச்சாமியின் பதில்.*

❀ ❀ ❀

☺ 'உலக வரலாற்றில் பேச்சினால் சீரழிந்த இனமாக இரண்டு இனங்களைக் கூறலாம். முதலாவது ரோமானிய இனம், அது பேசிப் பேசியே அழிந்து போனது. இரண்டாவதாக தமிழினம் பேசிப் பேசியே நாளுக்கு நாள் சீர்கெட்டுப் போய்க் கொண்டிருக்கிறது. அதற்குக் காரணம் தமிழில் உணர்வுபூர்வமாக பேசுபவர்கள் மிக அதிகமாகவும், அறிவு பூர்வமாகச் சிந்தித்துப் பேசுபவர்கள் குறைவாகவும் இருப்பதுதான்.

மொழிக்கும் இனத்திற்கும் செய்யக் கூடிய மிகப்பெரிய தொண்டாக நம்மவர் நினைப்பது, மொழியை புகழ்ந்து பேசவேண்டும் என்பதை மட்டும்தான். மொழிக்கு முக்கியத்துவம் கொடுப்பதை விட பொருளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதே அறிவியல் தமிழ்.

பொருள்களை உணர்ந்து கொள்வதற்கு மொழியை தெய்வீக நிலைக்குக் கொண்டு சென்று விட்டோம். அதன் விளைவாக மொழியின் புனிதம் கெடக்கூடாது என்று நினைக்கிறோம்.

புதிய சொற்களை உருவாக்க வேண்டியது மிகவும் இன்றியமையாதது. சொல்லாக்கம் செய்யும் போது தூய தமிழில் மட்டுமே சொல்ல வேண்டும் என்று முரண்பாடு பிடிப்பது மொழியின் வளர்ச்சிக்கு உதவாது. எந்தச் செய்தியையும் தமிழ் மொழியில் சொல்லக் கூடிய திறன் தமிழுக்கு உண்டு.

இதுவரை ஏறக்குறைய எட்டு லட்சம் புதிய சொல்லாக்கங்களை தமிழில் செய்துள்ளேன். இச்சொல்லாக்கங்களில் எவையெவை நிற்கும் என்பதை காலம் தான் முடிவு செய்யும். 'என் கடன் சொல்லாக்கிக் கிடப்பதே'

*– 'யுனெஸ்கோ கூரியர்' இதழின் ஆசிரியர் மணவை முஸ்தபா பேசியதாக ஜூலை 98 புதிய பார்வை இதழில்.*

❀ ❀ ❀

☺ கொலைகளில் இத்தனை வகைகளா? என அதிர்ச்சி மேலிட்டது- சிசுக்கொலைகள் செய்யப்படுகின்ற வழிமுறைகளை அறிந்தபோது மனம் பதைப்பதைக்கச் செய்யும் அந்த கொடூரங்களுக்கு இந்த வழிமுறைகளில் ஒன்றைத்தான் சம்பந்தப்பட்டவர்கள் பின்பற்றுகின்றனர்.

கள்ளிப்பால் அல்லது எருக்கம்பாலை குழந்தைகளுக்கு வலுக்கட்டாயமாக தருவது.

நெல், உமி, தவிடு வகையறாக்களை தண்ணீர்க் கலவையுடன் வாய்க்குள் திணிப்பது.

விஷச் செடிகளின் இலை விதைகளை அரைத்து பாலுடன் கலந்து தருவது.

ஈரத்துணியால் உடலை இறுக மூடி மணிக்கணக்கில் போட்டு விடுவது.

கொடுமைகளுக்கெல்லாம் சிகரமாக, பிறந்த குழந்தைக்கு நாள் கணக்கில் தாய்ப்பால் மட்டுமன்றி பிற திரவ உணவு வகைகளையும் தராமல் நாக்கு உலர போட்டுவிடுவது.

*– 'உயிர்விடும் பெண் சிசுக்கள்' என்னும் கட்டுரை 28.07.98 நக்கீரனில்.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




### ஈரான்

## தடை செய்யப்பட்ட பத்திரிகை புதிய பெயரில் மீண்டும் ஆரம்பம்

இஸ்லாமிய கொள்கைகளை கொச்சைப்படுத்துவதாக ஈரானிய நீதியமைச்சால் குற்றம் சுமத்தப்பட்டு தடை செய்யப்பட்ட சுயாதீனப் பத்திரிகை மீண்டும் புதிய பெயரில் ஆரம்பமாகியுள்ளது. ஈரானின் புதிய தாரா்ள போக்குடைய ஜனாதிபதி கட்டாமியின் ஆதரவு கொண்டிருந்த 'தூஸ்' எனப்படும் இப்பத்திரிகை கடந்த சனியன்று ஈரானிய அதிகாரிகளால் தடைசெய்யப்பட்டது. ஆனால் ஈரானிய கலாச்சார அமைச்சு இப்பத்திரிகை தடைசெய்யப்பட்டது செல்லாது என அறிவித்ததைத் தொடர்ந்து புதிய பெயருடன் மறுநாளே வெளியாகியது.

ஈரானிய நிதியமைச்சினால் கடந்த ஜூன் மாதம் 'ஜமேயாஹ்' எனும் பெயர்கொண்ட பத்திரிகை தடைசெய்யப்பட்டது. ஆனால் அதனை அன்று வெளியிட்டவர்கள் 'தூஸ்' எனும் பெயரில் கடந்த ஜூன் மாத இறுதியில் மீண்டும் ஒரு பத்திரிகையை வெளியிட்டார்கள். ஈரானின் வலதுசாரி நீதித்துறை வன்மையாகக் கண்டிக்கும் ஆக்கங்களை தொடர்ந்து தூஸ் இதழ் வெளியிட்ட நிலையில் இப்பத்திரிகையும் தடைசெய்யப்பட்டது. ஆனால் ஈரானிய கலாச்சார அமைச்சின் முழுமை



யான ஆதரவை அது கொண்டிருந்த காரணத்தால் புதிய பெயரில் சில மாற்றங்களுடன் அப்பத்திரிகை மீண்டும் வெளிவரத் தொடங்கியுள்ளது.

இதேவேளை ஈரானின் நீதித்துறைத் தலைவர் அயதுல்லா யாஸ்தி இஸ்லாமிய எதிர்ப்பு பத்திரிகைகள் யாவும் உன்னிப்பாக கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் கடந்த வெள்ளியன்று எச்சரித்துள்ளார்.

ஈரானின் பத்திரிகைகளைச் சுற்றி ஏற்பட்டு வரும் நிகழ்வுகள் அந்நாட்டின் வலதுசாரி நிதித்துறையினருக்கும் தாராள கொள்கைகளைக் கொண்ட கலாச்சார அமைச்சினருக்கும் இடையே நடந்துவரும் பனிப்போரின் அங்கங்கள் எனக்கூறும் மத்திய கிழக்கின் அரசியல் அவதானியொருவர் ஈரானின்



இவ்வகையான வலதுசாரிகளை வெற்றிகொண்டு புதிய ஜனாதிபதி கட்டாமி எவ்வாறு தனது பதவியை ஸ்திரப்படுத்திக்கொள்வார் என்பதுதான் கேள்விக் குறி என்றார்.

### பாகிஸ்தான்

## உடனடியாக போர்மூளும் சாத்தியக்கூறு

### - பாக். வெளியுறவு அமைச்சர்

பாகிஸ்தானின் வெளியுறவு அமைச்சர் கோஹர் அயூப்கான், இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்குமிடையில் முழு அளவிலான போர் மூளக்கூடிய சாத்தியக் கூறுகள் ஏற்பட்டிருப்பதாகவும் பாகிஸ்தானின் பாதுகாப்பிற்கு பங்கம் விளைவிக்கும் நடவடிக்கைகளில் இந்தியா இறங்குமானால் அது முழுப் பலத்துடன் முறியடிக்கப்படும் என எச்சரிக்கைவிடுத்துள்ளார்.

சிறீலங்காவின் தலைநகர் கொழும்பில் நடந்துமுடிந்த தென்னாசியப் பிராந்தியக் கூட்டமைப்பு நாடுகளின் உச்சி மாநாட்டிலிருந்து திரும்பி பாகிஸ்தானின் லாகூர் விமான நிலையத்தை வந்தடைந்த அயூப்கான் பத்திரிகையாளர்களிடம் பேசும்போதே இவ்வாறான எச்சரிக்கையை விடுத்தார். அங்கு அவர் மேலும் கூறுகையில் காஷ்மீர் பிரச்சினை கடந்த 50 வருடங்களாகத் தீர்க்கப்படாத ஒரு விடயமாக உள்ளது கவலைக்குரியது தான். பாகிஸ்தானின் கௌரவத்திற்கும், ஒருமைப்பாட்டுக்கும் எதிரான எதிரி ஏதாவது மேற்கொள்ள முனைந்தால் அது முழுப்பலத்துடன் ஒடுக்கப்படும்



என்றார்.

கடந்த சில தினங்களாக பாக் - இந்திய எல்லைப் பகுதியில் ஏற்பட்டுள்ள பதட்டத்தினை மையமாக வைத்தே பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சரின் கூற்று அமைந்திருந்தது. அப்பகுதியில் இரு பகுதியினரும் எறிகணைத் தாக்குதல்களைத் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றனர். கடந்த ஞாயிறன்று பாகிஸ்தான் அரசு இந்திய தாக்குதல்களால் காஷ்மீர் ஆசாத் பகுதியில் 56 பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளது.

### ஆப்கானிஸ்தான்

## உதவி நிறுவனங்கள் தொடர்பான பேச்சில் ஏமாற்றம் - ஐ.நா. கவலை

ஆப்கானிஸ்தானில் நிலைகொண்டிருந்த உதவி நிறுவனங்கள் அங்கிருந்த தலிபான் ஆட்சியாளர்களின் கெடுபிடிகளை எதிர்த்து அங்கிருந்து வெளியேறியுள்ளன. தற்போது அங்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் ஐ. நா.வின் உதவி நிறுவனமும் மாத்திரமே இயங்குகின்றன.

ஆப்கானிஸ்தானின் ஆட்சியாளர்களான தலிபான் அமைப்பினர் தலைநகர் காபூலின் பல பகுதிகளிலும் அலுவலகங்களை அமைத்துச் செயற்பட்ட முப்பதிற்கும் மேற்பட்ட சமூகநல அமைப்புக்களை தம்மால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு கட்டடத்திற்கு இடம் பெயருமாறும் அதனைத் திருத்த ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்களை செலுத்த வேண்டும் என உத்தரவிட்டிருந்தது. இந்த ஆப்கான் அரசின் உத்தரவு தமது நடவடிக்கைகளை கண்காணிக்கும் ஒரு முயற்சிக்கான ஏற்பாடு என்று குற்றம்சாட்டிய இவ் அமைப்புக்கள் ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேறிக் கொண்டன.

நீண்டகாலமாக யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள ஆப்கானிஸ்தானின் குடிமக்கள் பெரும்பாலும் உதவி நிறுவனங்களின் உதவியுடனேயே வாழ்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. தலிபான் ஆட்சியாளர்களின் நடவடிக்கைகளால் பல்லாயிரம் விதவைப் பெண்களும் குழந்தைகளும், வயோதிபர்களும் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறும் ஐ.நா சபை, மீண்டும் இவ் அமைப்புக்களை ஹாபூருக்கு கொண்டுவரும் முயற்சியிலான பேச்சுக்களை தலிபான் ஆட்சியாளர்களுடன் ஐநா ஆரம்பித்தது. ஆனால் சில மணி நேரத்திற்குள்ளாகவே அப் பேச்சுக்கள் எந்தவித முடிவுகளும் எடுக்கப்படாமல் முடிவடைந்தன.

இதுபற்றி கூறிய தலிபான் அதிகாரிகள் இவ் உதவி நிறுவனங்கள் எப்போது வேண்டுமானாலும் திரும்பலாம். ஆனால் எம்மால் ஒழுங்கு செய்யப்பட்ட கட்டடத்திலேயே இயங்க வேண்டும். எமது நாட்டிற்குள் வரும் வெளிநாட்டவர் எமது ஒழுங்குமுறைகளைப் பின்பற்ற வேண்டியது அவசியமானதாகும் எனக் குறிப்பிட்டார்.


காபூல் நகரப் பகுதியில் ஐ.நா பல திட்டங்களை செயற்படுத்தி வருகின்றது. தற்போதைய சிக்கல்களைத் தொடர்ந்து ஐரோப்பிய சமூகம் ஆப்கானுக்கான உதவித் தொகையை நிறுத்திக்கொண்டுள்ளதால் இந்த அரச சார்பற்ற உதவி நிறுவனங்களின் உதவியுடன் தான் ஐ.நா வால் சமூக நலத் திட்டங்களைத் தொடரமுடியும். இந்நிறுவனங்கள் மீண்டும் காபூலுக்கு திரும்பாவிடில் காபூலின் சனத்தொகையில் அரைவாசிப்பேர்கள் கஷ்டங்களை எதிர்நோக்குவார்கள் என ஐ.நாவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

## வட பகுதி நோக்கி தலிபான்கள் முன்னேற்றம்

ஆப்கானிஸ்தான் பெரும்பான்மை ஆட்சியாளர்கள் விடுத்துள்ள அறிக்கையில முன்னாள் ஆட்சியாளர்களின் பிரதான படைத்தளமொன்றினை தாம் கைப்பற்றியுள்ளதாகவும் நாட்டின் வடபகுதியில் தமது படைகள் முன்னேறி வருவதாகவும் குறிப்பிட்டுள்ளது.

தலிபான் அரசின் பேச்சாளர் ஒருவர் சர்வதேச வானொலி ஒன்றுக்கு கடந்த ஞாயிறன்று விடுத்த அறிக்கையில் ஆப்கானிஸ்தானின் வட பகுதியில் முன்னாள் இராணுவத் தளபதியான அப்துல் ரஷித் தொஸ்மின் கட்டுப்பாட்டில் இருந்த 'ஷெபெர்கான்' நகரத்தையும் அதைச் சுற்றியுள்ள பிராந்தியங்களையும் தமது படையினர் பலத்த மோதலின்பின் கைப்பற்றியுள்ளதாகவும் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் ஷெபெர்கான் நகரமும். விமானத்தளமும், தற்போது தலிபான் வீரர்களின் பூரண கட்டுப்பாட்டிற்குள் வந்துள்ளதாயும், பின்வாங்கிய எதிரிப்படையின் பெருந்தொகையான ஆயுத தளவாடங்களை தாம் கைப்பற்றியுள்ளதாயும் கூறினார். ஆப்கானிஸ்தானின் தென்பகுதி நகரான 'காண்டஹார்' நகரப் பகுதியில் இருந்து அவர் தொலைபேசியில் தொடர்பு கொள்கையில் பின்வாங்கிய எதிர்படையினர் அங்கிருந்த விமானப் படைத்தளத்தில் நின்ற தமது விமானங்களை தீவைத்து அழித்துவிட்டு சென்றுள்ளதாயும் கூறினார்.



தலிபான்களால் மேற்கூறிய நகரப்பகுதி கைப்பற்றப்பட்டிருக்குமேயானால் அவர்களது அடுத்த இலக்கு மசார்.இ.ஷரீப் ஆகத்தான் இருக்கும் என பாகிஸ்தானில் தங்கியிருக்கும் பத்திரிகையாளர் ஒருவர் தெரிவித்திருக்கிறார். ஆப்கானிஸ்தானின் மூன்றில் இரண்டு பகுதியை தற்போது தலிபான்கள் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளார்கள். 'ஷெபெர்கான்' நகருக்கு 120 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்திருக்கும் மசார். இ.ஷரீப் நகரப் பகுதியே தலிபான்களுக்கு எதிரான முன்னாள் ஆட்சியாளர்களான ரபானியின் கூட்டுப் படைகளின் தலைமையகம் அமைந்துள்ள பகுதியாகும். ஏற்கனவே இப் பகுதியிலிருந்து ஏராளமான வெளிநாட்டுப் பிரஜைகள் தலிபான்களின் தாக்குதலை எதிர்பார்த்த நிலையில் வெளியேறியுள்ளனர்.

கடந்த இரண்ட வருடங்களாக ஆப்கானிஸ்தானின் வட பகுதியில் குழப்பத்தை ஏற்படுத்திக்கொண்டிருந்த முன்னாள் ஆட்சியாளர்களுக்கு எதிரான போரை முடிவிற்குக் கொண்டுவர தலிபான் ஆட்சியாளர்கள் மிக உறுதியாக உள்ளனர். இது வரை நமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படாத மசார். இ. ஷரீப் அவர்களால் கைப்பற்றப்படுமேயானால் ஆப்கானிஸ்தானின் முழுமையான அதிகாரத்தை தலிபான்கள் பெற்றுக்கொள்வார்கள் என அரசியல் ஆய்வாளர் ஒருவர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இத்தாலி

# சட்டவிரோதிகள் தடுப்பு முகாமை உடைத்துத் தப்பியோட்டம் சிசிலியில் சம்பவம்

இத்தாலியில் தடுப்பு முகாமில் வைக்கப்பட்டிருந்த நாற்பது சட்ட விரோத குடியேற்ற வாசிகள் காவலுக்கு இருந்த பாதுகாப்பு அதிகாரிகளின் மேலும் பலத்தை பிரயோகித்து அங்கிருந்து தப்பியோடியதாக இத்தாலிய பொலிசார் கடந்த சனியன்று தெரிவித்துள்ளனர். நாம் நாடுகடத்தப்படுவதற்காகவே தடுத்து வைக்கப்பட்டு இருப்பதாக எண்ணிய வட ஆபிரிக்கர்கள் என கருதப்படும் 40 பேரே இவ்வாறு தப்பியோடியவர்களாவார்கள்.

இத்தாலியில் சிசிலியில் தென்கிழக்கு நகரமான சிராகுசாவில் பாடசாலை ஒன்றில் இவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் இவர்கள் திடீரென தமக்கு வயிற்றுவலி ஏற்பட்டுள்ளதாக அலறியதாகவும் பாதுகாப்பு அதிகாரிகள் உடனடியாக அவ்விடத்திற்கு விரைந்து அவர்களை அப்பகுதியிலிருந்து மருத்துவ நிலையகட்டிடத்திற்கு கொண்டு சென்றவேளையிலேயே பாதுகாப்பு அதிகாரிகளுடன் மோதி இவர்கள் தப்பியோடியுள்ளனர். உடனடியாக இத்தாலியப் பாதுகாப்புப் பிரிவினர் உலங்கு வானூர்திகள் சகிதம் அப்பகுதியை சுற்றிவளைத்து தப்பியவர்களில் 34 பேர்களை மீண்டும் கைதுசெய்து தடுப்பு முகாமில் ஒப்படைத்துள்ளனர். ஆனால் ஆறுபேர்கள் மட்டும் கண்டுபிடிக்கப்படவில்லையாம்.

இத்தாலிய பாராளுமன்றம் தனது நீண்டநாள் சட்டவிரோத குடியேற்றக்காரர்களின் பிரச்சினையை ஒரு முடிவிற்குக் கொண்டுவரும் சட்டமூலத்தினை அண்மையில் நிறைவேற்றியுள்ளது. இத்தாலியில் உள்ள சட்டவிரோத குடியேற்றக்காரர்களில் 230,000 பேர்களுக்கு வதிவிட உரிமையை வழங்க அது உத்தேசித்துள்ளது. இவர்கள் தவிர்ந்த ஏனையோரை நாடுகடத்தவும் அது முடிவுசெய்துள்ளது.

இத்தாலியில் நிறைவேற்றப்பட்டுள்ள சட்டத்தின்படி வதிவிட அனுமதியில்லாத ஒருவர் கடந்த மார்ச் 26-ம் திகதிக்கு முன் ஒரு வேலையைப் பெற்றுக்கொண்டதை நிரூபித்தாரானால் அவருக்கு இத்தாலியில் வதிவிட அனுமதி வழங்கப்படும். அப்படியில்லாதவர்கள் சுற்றி வளைத்து கைதுசெய்யப்பட்டு திருப்பி அனுப்பப்படுவார்கள். இதற்காக பல தடுப்பு முகாம்களை இத்தாலிய அரசு புதிதாக அமைத்துள்ளது.

ஈராக் துருக்கி போன்ற நாடுகளில் இருந்து குர்திஷ் இன மக்களும் வட ஆபிரிக்க மக்களும் அல்பேனிய மக்களும் இத்தாலியின் தென்பகுதி கடல் வழியாக உள்நுழைந்து வட ஐரோப்பாவுக்குள் சட்டவிரோதமான முறையில் நுழைவது இதுவரை வழக்கமாய் இருந்துள்ளது. இத்தாலிக்குள் வரும் ஒருவர் அரசியல் தஞ்சம் கோரும்வரை சுதந்திரமாக எங்கும் சென்றுவர இத்தாலியின் சட்டத்தில் இடம் இருந்தது. ஆனால் புதிய திட்டத்தின்படி உள்நுழையும் யாரும் கைது செய்யப்பட்டு திருப்பி அனுப்பப்படுவார்கள். இத்தாலிக்குள் வரும் வெளிநாட்டவர்களில் பெரும்பான்மையினர் கைதுகளுக்குத் தப்பி வட ஐரோப்பாவிற்கு நகர்ந்து கொள்வதும் வழக்மாய் இருந்தது. இவ்வகையான செயற்பாடுகளை எதிர்த்து நடவடிக்கை எடுக்குமாறு இத்தாலி, ஜேர்மனி, பிரான்ஸ் உட்பட வட ஐரோப்பிய நாடுகள் வற்புறுத்திவந்தன. இதனைத் தொடர்ந்து சட்டவிரோதமாக உள்வருவோரின் தொகையை கட்டுப்படுத்த இத்தாலி புதிய குடியுரிமைச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்துள்ளது.

கடந்தவார இறுதியில் சிசிலியில் மற்றுமோர் தடுப்பு முகாமில் 300 இற்கும் அதிகமான வட ஆபிரிக்கர்கள் முகாமைத் தகர்க்க முயன்று கலகம் செய்தனர். அதேபோல் மற்றுமோர் பகுதியில் 150 இற்கும் அதிகமானவர்கள் தடுப்பு முகாமில் கலகம் செய்து தமது முகாமைத் தீமூட்டிக்கொண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மத்திய கிழக்கு

# நிலப் பகுதியைவிட்டுக் கொடுக்கும் அமைதி தேவையில்லை - *சிரிய அதிபர்*

# இஸ்ரேலுடன் பேச்சுக்களை முறித்துக்கொள்வோம் - *பாலஸ்தீன அதிகாரி*

### இஸ்ரேல் - பாலஸ்தீன பேச்சுக்கள் மீண்டும் தடைப்படும் அபாயம்

இஸ்ரேலுடனான புதிய திட்டப் பேச்சுக்களை அடுத்த சில நாட்களுடன் முடித்துக் கொள்ளப்போவதாக பாலஸ்தீன அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள். அதேவேளை சிரிய அதிபர் டமாஸ்கசில் இஸ்ரேலுடன் சமாதானம் தேவைதான் ஆனால் எமது நிலத்தினை விட்டுக்கொடுத்து எந்தவித சமாதானத்தையும் நாம் பெற்றுக்கொள்ளமுடியாது என கூறியுள்ளார்.

மிக நீண்டகாலமாக தடைப்பட்டுப் போயிருந்த இஸ்ரேலிய பாலஸ்தீன அமைதிப் பேச்சுக்கள் கீழ்மட்ட ரீதியில் மீண்டும் கடந்தவாரம் ஆரம்பமாகியது அறிந்ததே. இப்பேச்சுக்களை மீண்டும் உயிர்ப்பிக்க அமெரிக்க கிளின்டன் நிர்வாகம் அதிக அக்கறையை எடுத்திருந்தது. மேற்குக் கரைப் பகுதியிலிருந்து இஸ்ரேல் விலக்கிக்கொண்ட நிலப்பகுதியைவிட மேலும் 13 விகித நிலத்தில் இருந்து அது விலகிக்கொள்ளவேண்டும் என்றும் அதற்கீடாக பாலஸ்தீன் நிர்வாகம் அப்பகுதியிலிருந்து இஸ்ரேலுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் ஆயுத தாக்குதல்களை முடிவிற்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அமெரிக்க வெளியுறவுச் செயலர் மெடலின் அல்பிரைட் கூறியிருந்தார். இவ்வகையான அமெரிக்க தீர்வினை பாலஸ்தீன அதிகாரிகள் ஏற்றுக்கொண்டிருந்தனர். ஆனால் இஸ்ரேலிய தரப்பிலிருந்து எந்த விதமான சாதகமான பதிலும் கிடைக்கவில்லை. இந்நிலையில் சில அடிப்படைப் பிரச்சினைகளை மையமாக வைத்து மீண்டும் பேச்சுக்கள் இருதரப்பினராலும் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் கடந்த ஒருவார காலமாக எந்தவொரு முன்னேற்றமும் இல்லாத நிலையில் அடுத்து வரும் நாட்களிற்குள் அமெரிக்காவின் தீர்வுத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளும் பதில் இஸ்ரேலிடம் இருந்து வராவிடில் தாம் பேச்சுவார்த்தைகளை முறித்துக்கொள்ளப் போவதாக பாலஸ்தீனிய பேச்சாளர் கடந்த சனியன்று தெரிவித்துள்ளார். பாலஸ்தீனப் பேச்சாளர் இப்படி தெரிவித்துள்ள அதேவேளை இது வரைகாலமும் மேலதிகமாக 13 விகித நிலத்தினை விட்டுக் கொடுப்பது இஸ்ரேலின் பாதுகாப்பிற்கு ஆபத்தானது எனக் கூறிவந்த இஸ்ரேல் தற்போது பத்துவிகித நிலப்பகுதியை பாலஸ்தீனர்களுக்கு முழுமையாக விட்டுக்கொடுப்பதென்றும் மிகுதி மூன்று விகித நிலப் பகுதியை மட்டுப்படுத்தப்பட்ட பாலஸ்தீனிய கட்டுப்பாட்டில் பசுமை நிலமாக வைத்திருக்கவும் இணங்கியுள்ளதாக அறியப்படுகிறது. ஆனால் இம்முடிவு பாலஸ்தீனிய தரப்பினால் ஏற்றுக்கொள்ளப்படுமா என்பது கேள்விக்குறியே.

இது இப்படியிருக்க சிரியத் தலைநகர் டமாஸ்கஸ்சில் சிரிய இராணுவம் அமைக்கப்பட்ட நினைவுநாள் அணிவகுப்பின் போது அந்நாட்டின் அதிபர் ஹபீஸ் அல் அசாத் 'எமக்கு இன்று சமாதானமே முக்கியமானதாகும். உலகத்திற்கும் எமது பிராந்தியத்திற்கும் அபிவிருத்திக்கான சூழலைத் தோற்றுவிக்க அமைதி தேவையாகத்தான் உள்ளது. ஆனால் அதற்காக எமக்கு சொந்தமான கோலான்மேட்டு நிலப்பகுதியிலுள்ள இஸ்ரேலிய படை முற்றாக வெளியேறினால்தான் நாம் அந்நாட்டுடன் முழுமையான சமாதானத்தைப் பேணமுடியும். நாம் எமக்குச் சொந்தமான நிலப்பகுதியில் இருந்து எதிரியை விரட்ட எமது முழு வளங்களையும் பிரயோகிக்க தயாராக உள்ளோம் என்றார்.

1967-ம் ஆண்டில் சிரியாவின் முக்கியத்துவம் வாய்ந்த கோலான் மேட்டு நிலப்பகுதியை இஸ்ரேல் கைப்பற்றிக்கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## பிரான்ஸ்

# வதிவிட அனுமதியற்றோர் வத்திக்கான் தூதரகத்தில் போராட்டம்

### பாப்பாண்டவரை தலையிடுமாறு கோரிக்கை

வதிவிட அனுமதியற்றவர்களின் குழு ஒன்று கடந்த ஞாயிறன்று பாரிசில் உள்ள வத்திக்கான் தூதரகப் பகுதிக்குள் நுழைந்து தங்கள் பிரச்சினையில் பாப்பாண்டவர் தலையிட்டு தமக்கு நல்லதொரு முடிவினைப் பெற்றுத்தரவேண்டும் என கோஷமெழுப்பினர்.

சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்னர் பாரிசின் வட பகுதியில் சென்பேர்னாட் தேவாலயத்தில் பலநூறு ஆபிரிக்க இன மக்கள் பிரான்ஸ் வதிவிட அனுமதி வேண்டுமெனக் கூறி போராடியது ஞாபகமிருக்கலாம். இவர்களது போராட்டம் பொலிசாரின் தலையீட்டினால் அன்று முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. அதனைத் தொடர்ந்து புதிதாக பதவியேற்ற சோஷலிச கூட்டணி அரசு இவ்வாறு வதிவிட அனுமதியின்றி சட்டவிரோதமாக குடியேறியிருப்பவர்களில் பெரும்பான்மையானோருக்கு நிரந்தரவதிவிட உரிமையை வழங்கியது. அந்த வகையில் விடுபட்டுப்போன பலர் மீண்டும் தமது பிரச்சினையை முன்னிறுத்தி போராட்டங்களை ஆரம்பித்துள்ளார்கள். சரியான ஆவணங்கள் இல்லாத காரணத்தினாலேயே இவர்களுக்கு வதிவிட அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

இந்நிலையில் கடந்த சனியன்று மாலை சுமார் 17 பேர்கள் அடங்கிய குழுஒன்று வத்திக்கான் தூதுவராலய பகுதிக்குள் நுழைந்து தமது கோரிக்கை ஒன்றினை பாப்பாண்டவருக்கு சமர்ப்பித்தது.

வத்திக்கான் தூதுவராலயத்தில் கூடியிருந்தவர்களிடம் பொலிசார் வெளியேறுமாறு கோரியபோது உள்ளிருந்தவர்கள் வெளியேற மறுத்துள்ளனர். அவர்களது சார்பில் பேசிய ஒருவர் 'நாம் மூன்று வருடங்களாகக் காத்திருக்கிறோம். இது வரை எமக்கு சாதகமான பதில் தரப்படவில்லை. இப்போது நாம் எமது கோரிக்கையை பாப்பாண்டவருக்கு அனுப்பியுள்ளோம். எமது போராட்டத்திற்கு ஆதரவாக அவரிடமிருந்து செய்தி வருமென எதிர்பார்த்துள்ளோம் எனக் கூறினார்.

பிரான்சில் ஐந்துமில்லியன் வெளிநாட்டவர் உள்ளனர் என்றும் இவர்களில் ஒரு மில்லியன்பேர்கள் வதிவிட அனுமதியின்றி சட்ட விரோதமாக வாழ்கின்றனர் என்றும் கூறப்படுகின்றது. புதிய சோசலிச கூட்டரசு வெளிநாட்டவர்களை வதிவிட அனுமதிக்காக விண்ணப்பிக்குமாறு கேட்டபோது 150,000 மக்கள் விண்ணப்பித்திருந்தனர். இவர்களில் மூன்றில் இரண்டு பகுதியினருக்கு வதிவிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## ஜப்பான்

# உலகின் இரட்டையர்கள் 106வது பிறந்த நாளை கொண்டாடினார்கள்

உலகின் மூத்த இரட்டையர்களான ஜப்பானிய சகோதரிகள் கடந்த சனியன்று தங்களது 106-வது பிறந்தநாளைக் கொண்டாடினார்கள். ஜப்பானின் மத்திய பகுதியில் விவசாயக் குடும்பமொன்றில் 1892-ம் ஆண்டில் பிறந்த கின்நரிடா, ஜின் கானி ஆகிய இருவரும் டோக்கியோவுக்கு மேற்கு நகோயாவில் தனித்தனியே வாழ்ந்து வருகிறார்கள். கின், ஜின் என்றால் முறையே தங்கம், வெள்ளி எனப் பொருள்படும். இச் சகோதரிகளும் ஊர் மக்களால் இப்படித்தான் அழைக்கப்பட்டார்கள். இருவரதும் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் உறவினர்கள் [illegible] நண்பர்கள் என [illegible] பேர் கலந்துகொண்டனர். இவர்களுக்கு பிறந்தநாள் பரிசாக `Suzumshi' என அழைக்கப்படும் மணியோசை போன்று சத்தமெழுப்பும் ஒருவகை வண்டுகள் கொடுக்கப்பட்டன. இவைகளை ஜப்பானிய மக்கள் சொத்தாகப் பாதுகாத்துவருவது குறிப்பிடத்தக்கது. பிறந்தநாள் கொண்டாட்டத்தின் பின் நண்பர்களிடம் இரட்டையர்கள் நூறு வயதின்பின் தங்களது உடல் மிகச் சுலபமாகவும் ஆரோக்கியமானதாகவும் இருக்கின்றது என்று கூறியுள்ளார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**BERN** மாநகரில்

## மாபெரும் மலிவு விற்பனை

**உங்கள் கனவுகளை நிஜமாக்கும்**
**கோடைகால மாபெரும் மலிவு விற்பனை**

**Basel S.P. JEWELLERY, TEXTILES & PROVISON**
நிறுவனம் நடாத்தும் மாபெரும் மலிவு விற்பனை.

Kolam சாறி 165 Sfr இல் இருந்து.
பஞ்சாபி வகைகள் 9 Sfr இல் இருந்து.
பலதரப்பட்ட சாறிவகைகள் 12 Sfr இல் இருந்து.
ரீ சேட் 8.50 Sfr இல் இருந்து
ரவுசர் வகைகள், ஆண்களின் சேட் 10 Sfr இல் இருந்து.
சிறுமிகளின் பஞ்சாபிவகைகள் 15 Sfr இல் இருந்து.
மைசூர் சில்க், பனாரஸ் பட்டு, கூறைபட்டு வகை சாறிகளும்.

**பட்டுப் புடவைகளும் தங்க நகைகளும்**
**அணியும் நாளெல்லாம் ஆனந்த திருநாளே**

திறம் என்பார்...... முதன் முறையாக
சுவிஸில் அதிக குறைந்த விலை
என்பார்...... கூறுவதோ தரமான பொருட்கள்
நியாயமான விலை அத்துடன்
**தொகையில் நவநாகரீகமான தெரிவு**
**காலம் : யூலை மாதம் 30 தொடக்கம்**
**01 ஒகஸ்ட் மட்டும்**
வியாழன், வெள்ளி, சனி
**நேரம் : காலை 9.00 மணி**
**தொடக்கம் இரவு 20.00 வரை**
பழைய Mc Donald's க்கு அருகாமையில் உள்ளது.

பஞ்சாபி வகைகள்
காதலுக்கு மரியாதை,
ஜீன்ஸ், பொற்காலம்
நேருக்கு நேர் இன்னும்
பலவகைப்பட்ட
பஞ்சாபி வகைகள்

**Ramiy** யின் தரமான **CD**
மாபெரும் மலிவு விற்பனை
**CD 2.50 Sfr** இருந்து.

# S.P. Textiles

தொடர்புகளுக்கு:
பாசல் Ravi கடை

**Nauen unter Fürng-14, 4055 Basel, Swiss.**
**Tél: & Fax: 061-2720990 / Mobel: 079 356 22 78**

Pub

## சூரிச் மாநகரில்

மரக்கறி + பலசரக்கு + மீன் +
றெடிமேற் ஆடைத் தினுசுகள் யாவும்
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
இன்றே விஜயம் செய்யுங்கள்.





# Rajah Asiya Center

**J. Gabrielpillai**
**Stauffacherstrasse 104,**
**8004 Zurich.**
**Tel: 01 242 42 60**

Pub

# வெளிவந்துவிட்டன

# ரமி யின்











RAMIY
RECORDS




Pub

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈழமுரசு
Eelamurasu Weekly
"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

# நமது கடமை என்ன?

'நமது நாட்டில் யுத்தம் நடக்கின்றது. அங்கே எங்கள் உயிருக்கு உத்தரவாதமில்லாத நிலையில் நாங்கள் இங்கே வந்து விட்டோம் என்பது புலம் பெயர்ந்து வந்த நாம் எல்லோரும் எங்களது புலப்பெயர்வுக்கு சொல்லிக்கொள்கின்ற காரணமாகும்.

நமது நாட்டில் யுத்தம் நடக்கின்றது என்பதும், அங்கே வாழ்வது சிரமமான காரியம் என்பதும் மறுப்பதற்கில்லை என்றாலும், எங்களைவிட பல மடங்கு அதிகமான எங்களது மக்கள், எங்களது உறவினர்கள், எங்களது உடன் பிறப்புகள் அங்கே வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். யுத்தத்துக்கு மத்தியிலும் அழிவுகளுக்கு மத்தியிலும், காடுகளிலும் மர நிழல்களிலும் கூட அவர்கள் வாழப் பழகிக் கொண்டிருக்கின்றார்கள்.

எங்களைவிட வயதில் இளைய எங்கள் தொப்புள்கொடி உறவுகள் தங்கள் இரத்தத்தையும் உயிரையும் விலையாகக் கொடுத்து, எங்கள் தேசத்தின் விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

எங்களுடைய தேசம் என்று சொல்கின்றபோது, எங்களுடைய ஊர்கள்– எங்களுடைய தெருக்கள்– எங்களுடைய காணிகள், எங்களுடைய வீடுகள் எல்லாமே அதில் அடங்கும்.

நாங்கள் உயிரைக் காப்பாற்றுவதற்காக எல்லாவற்றையும் துறந்து எல்லாவற்றையும் கைவிட்டுவிட்டு இங்கேவந்து விட்ட நிலையில், எங்கள் உடன்பிறப்புக்கள் நாங்கள் துறந்தவற்றை காப்பாற்றுவதற்கு, நாங்கள் கைவிட்டவற்றை காப்பாற்றுவதற்காக தங்கள் உயிர்களை விலையாகக் கொடுத்துப் போராடிக்கொண்டிருக்கின்றார்கள்.

சிறீலங்காவின் பௌத்த சிங்கள பேரினவாத அரசு எங்கள் எல்லோருக்கும் எதிராகவே அங்கே போரைக் கட்டவிழ்த்து விட்டிருக்கின்றது. 'நாங்கள் புலம் பெயர்ந்து வந்துவிட்டோம். அதனால் இந்தப் போரில் எங்களுக்கு சம்பந்தமில்லை' என்று நாங்கள் யாருமே ஒதுங்கியிருக்க முடியாது.

ஏனென்றால் அங்கே அபகரிக்கப்படுவது எங்களுடைய மண். அழிக்கப்படுவது எங்களுடைய தொப்புள்கொடி உறவுகள். அதனால் சிங்கள பௌத்த பேரினவாத அரச படைகளுக்கு எதிராக – எங்களது உடன்பிறப்புக்கள் ஆயுதமேந்திப் போராடுகின்றபோது நாங்கள் கால்பந்தாட்ட ரசிகர்கள் போல் பார்த்துக்கொண்டிருக்க முடியாது.

எங்களுக்காக எங்கள் மண்ணுக்காக போராடவேண்டிய கடமை எங்களுக்குண்டு. போராடவேண்டும் என்று சொல்கின்றபோது நாங்கள் இங்கே புலம் பெயர்ந்த மண்ணில் சிறீலங்கா அரசுக்கு எதிராக ஆயுதப் போராட்டம் நடத்த முடியாது. ஆனால் சிறீலங்கா அரசின் கொடுமைகளை அம்பலப்படுத்துவதற்கு – புலம் பெயர்ந்த தமிழர்கள் ஒன்று திரண்டு பரப்புரைப்போர் நடத்த முடியும். புலம் பெயர்ந்த நாட்டுச் சட்டங்களுக்கு அமைவாக நாங்கள் சிறீலங்கா அரசின் இனச் சுத்திகரிப்பு – இன அழிப்பு நடவடிக்கைகளை அம்பலப்படுத்தும் விதத்தில் அமைதிப்பேரணி நடத்த முடியும். எமது தொப்புள் கொடி உறவுகளின் துயர் துடைக்க பொருளாதாரப் பங்களிப்புச் செய்யமுடியும்.

எதிர்வரும் 10–ம் திகதி திங்கட்கிழமை ஜெனீவாவில் உள்ள ஐ.நா. வளாகத்தை நோக்கி எமக்கு இழைக்கப்படும் அநீதிகளை ஐ.நா.வின் கவனத்துக்குக்கொண்டு வருவதற்காக ஒரு அமைதிப் பேரணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

உலகிலே தங்களுடைய விடுதலைக்குப் போராடிய பல நாடுகள் ஐ.நா.வின் தலையீட்டால் தங்கள் விடுதலையைப் பெற்றுக்கொண்டிருக்கின்றன. ஐ.நா.வின் கவனத்தை எங்கள் பக்கம் திருப்புவதற்கு நாங்கள் இங்கே போராட வேண்டும். 6000–7000 கிலோமீற்றர் தூரத்திலிருந்துகொண்டு எங்களுக்கு உதவுங்கள் என்று எங்கள் மக்கள், எங்கள் தொப்புள் கொடி உறவுகள் அங்கே அமைதிப் பேரணி நடாத்துவதைவிட, இங்கே நமக்கு சில நூறு கிலோ மீற்றர்கள் தூரத்திலுள்ள ஐ.நா. வளாகத்தின் முன்பாக நாங்கள் பல்லாயிரக் கணக்கில் ஒன்றுதிரண்டு அமைதிப் பேரணி நடாத்தி எங்களுடைய ஒற்றுமையை, பலத்தை காட்டும்போது அதற்கு சக்தி அதிகம். ஐ.நா வை நோக்கி ஊர்வலம் போவதென்பது எங்கள் தேசத்தின் விடுதலைக்காக நாங்கள் அமைதியான வழியில் மேற்கொள்ளும் போராட்டமாகும். இதில் தவறாமல் பங்கெடுப்பது புலம் பெயர்ந்த ஒவ்வொரு தமிழரினதும் கடமையாகும்.

# இந்தியா-தமிழீழ உறவுகள்

# முன்னே ஓரடி

**பார்வை**

இந்திய பிரதமர் திரு. வாஜ்பாய் அவர்கள் முருகேசு சிவசிதம்பரத்தையும் பிற 'தமிழ் தலைவர்களையும்' 5 நிமிட நேரத்தில் சந்தித்துள்ளார். இவ் 5 நிமிடங்களில் தமது 5 குழுக்களின் சுமார் 10 தலைவர்கள்(?) 50 வருடகால இன அடக்கு முறையின் தற் போதைய சூழ்நிலைகள் பற்றி விளக்கமாக கூறியதாகவும் அதனை 5 நிமிடங்களில் அமைதியாக கேட்ட இந்திய பிரதமர் தான் அது, பற்றி சிந்திப்பதாக கூறியதாகவும் சம்பந்தப்பட்ட தமிழ் குழுக்கள் அறிக்கைவிடுத்துள்ளன.

இந்தியா-தமிழீழ-சிறீலங்கா உறவுகளையும் முரண்பாடுகளையும் மீள வரையறைசெய்த இந்திய—இலங்கை உடன்பாட்டின் 11-வது வருடம் பூர்த்தியாகும் வேளையில், இந்தியப் பிரதமர் ஈழத் தமிழர்களுக்காக 5 நிமிடங்கள்தான் ஒதுக்கினார் என நாம் விசனப்படத் தேவையில்லை. கொழும்புத் தமிழ்க் குழுக்களின் உத்தியோகபூர்வ சந்திப்புக்கான விண்ணப்பத்தை நிராகரித்ததும் இராஜதந்திர தேவைகள் காரணமாக 5 நிமிடங்கள் மட்டும் இக் குழுக்களை உத்தியோகபூர்வமற்ற முறையில் சந்தித்ததும் திரு. வாஜ்பாய் அவர்கள் சரியான திசையில் வைத்த ஓரடி என எண்ணத் தோன்றுகின்றது.

உத்தியோகபூர்வமாக முருகேசு சிவசிதம்பரம் போன்ற கொழும்புவாழ் தமிழ் கனவான்களை சந்திக்க மறுத்ததன் மூலம், சிங்கள இனவெறி இயந்திரம் ஒன்றின் அடிவருடிகளை முழுமையாக அங்கீகரிக்க திரு. வாஜ்பாய் மறுத்துவிட்டார். எனினும் நாடுகளுக்கிடையேயான உறவு முறைகளின் நடைமுறை கோட்பாடுகளுக்கு அமைய, தான் விஜயம் செய்யும் நாட்டு பாராளுமன்ற உறுப்பினர்களையும் பிற தரப்பினரையும் சந்திக்க வேண்டிய கட்டாயம் அவருக்கு உண்டு. இதன் பிரதிபலிப்புத்தான் 5 நிமிட உத்தியோகபூர்வமற்ற சந்திப்பு என எண்ணத்தோன்றுகிறது.

இந்திய- தமிழீழ உறவுகளையும் இந்திய -சிறீலங்கா உறவுகளையும் தீர்மானிக்க வேண்டிய பலத்தை தமிழ்மக்கள் கொண்டுள்ளனர். இன்று தென்னாசிய பிராந்திய தமிழ் மக்கள் பலம் மிக்க ஒரு தீர்மானிப்பு சக்தியாக உருவாகி வருகின்றனர். இப் பலத்தின் ஆதாரமாக திகழ்வது தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பாகும். தமிழ்த் தேசியத்தை உலகம் பூராகவும் தட்டி எழுப்பி ஒன்றுதிரட்டிவரும் தமிழீழ விடுதலைப் போராட்டம் தென்னாசிய பிராந்தியத்தின் எதிர் காலத்தை தீர்மானிக்கும் முக்கிய விடயங்களில் ஒரு விடயமாக பலம்பெற்றுள்ளது.

இம் முக்கியத்துவம் வாய்ந்த விடயத்தின் இயக்கப்போக்கினை இன்றைய இந்திய அரசு உணர்ந்துள்ளது. குறிப்பாக, அணுஆயுத நாடாக (Nuclear arms State) தன்னை பிரகடனப்படுத்தியுள்ள இந்தியா, தன் வெளிவிவகார கோட்பாடுகளை மீள வரையறை செய்து வரும் வேளையில் தமிழீழ-இந்திய உறவுகளும் மீள ஆய்வுக்கு உட்படுகின்றன.

இன்றைய இலங்கைத்தீவு தமிழீழம்- சிறீலங்கா என்ற பிளவுபட்ட தேசத்தை கொண்டுள்ளது. இரு தேசிய இராணுவங்கள் இங்குள்ளன. இருவேறு அரச கட்டமைப்புக்கள் இங்கு உருவாகியுள்ளன. இரு முரண்பட்ட தரப்பினரும் தத்தமது அரசியல் - இராணுவ நலன்களை பாதுகாக்கும் கோட்பாடுகளைப் பின்பற்றுகின்றனர். இதனை மூடி மறைத்து இலங்கைத் தீவை ஒரு நாடாக காட்ட சிங்கள அரசு தன் இராணுவ ஆதிக்கத்தையும்- சர்வதேச நட்பு சக்திகளையும் நம்பியுள்ளது.

கொழும்பு தமிழ் குழுக்கள் இச் சிங்கள திட்டத்தின் ஒரு பகுதியாக 'பராமரிக்கப் படுகின்றனர்.'

இந்த நிலையினை இந்தியா கட்டாயம் தெளிவாக ஆய்வுக்கு உட்படுத்தியிருக்கும். இலங்கைத் தீவு தொடர்பான தனது சாத்தியமான அனைத்து கோட்பாடுகளையும் பாதுகாத்து, தேவைக்கும் - இலக்குக்கும் ஏற்ற அணுகு முறைகளை கையாள இந்தியா முயலும். இங்கே இலங்கைத்தீவின் முரண்பாடுகளை பிரதிபலிப்பவர்கள் சந்திரிகா தலைமையிலான சிங்கள அமைப்பும், தேசிய தலைவர் வே.பிரபாகரன் தலைமையிலான தமிழ் அமைப்பும் ஆகும். இங்கே தமிழர் தலைமையை நிராகரிப்பதன் மூலமோ அல்லது பகை நிலைக்குத் தள்ளுவதன் மூலமோ இந்திய நலன்களை பாதுகாக்க முடியாது. இவ்வாறான முரண்பாட்டு நிலைப்பாடு சிறீலங்கா தரப்பினை வலுப்படுத்தி அதன் மூலம் எதிர்கால இந்திய நலன்களுக்காக சிங்கள இனவாத அமைப்பிடம் 'கையேந்தும்' நிலைக்கு இந்தியாவைத் தள்ளும்.

அடிப்படையில் சிங்கள இனவாத இயந்திரம் இந்தியாவை பகைச்சக்தியாகவே கருதுகின்றது. தம்மை சீன சார்பு நாடாகவோ, அமெரிக்கா சார்பு நாடாகவோ இனம் காட்டவே சிங்கள அரசுகள் முயல்கின்றன. இந்திய பகை நாடுகளின் தளம் சிங்கள இனவாத இயந்திரத்திடம் ஆழமாக பதிக்கப்பட்டுள்ளது. இன்று புலிகளையும்- தமிழர்களையும் தோற்கடிக்க வேண்டும் என்ற முன்னுரிமை விடயத்திற்காக, இந்தியாவை அணைத்துப் போக சந்திரிகா -கதிர்காமர் கூட்டணி விரும்புகின்றது. இது ஒரு தந்திரோபாய நிலைப்பாடு.


எனினும் அணுஆயுத பரிசோதனைகளின் பின் இத் 'தந்திரோபாய நிலைப்பாடு மீது பல்வேறு அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன.

இந்தியாவின் அணுஆயுத பலத்தை சீனா-அமெரிக்கா என்பன நிராகரிக்கின்றன. கடந்த வாரம் தென்கிழக்காசிய நாடுகளின் ஆசியான் (Asean) கூட்டமைப்பு இந்தியாவை கடுமையாக சாடியுள்ளது. இந்தியாவுடனான தம் தந்திரோபாய நிலைப்பாட்டை பாதுகாப்பதற்காக அணு ஆயுத பரிசோதனைகள் பற்றி கதிர்காமர் இருவேறு சிறீலங்கா நிலைப்பாடுகளை வெளியிட்டார். அமெரிக்கா இதற்கு உடனடி விளக்கத்தை கதிர்காமரிடம் கேட்டது. சீனாவுக்கும், பாகிஸ்தானுக்கும் பதில் சொல்லுமாறு கதிர்காமர் நிர்ப்பந்திக்கப்பட்டார்.

இந் நிலைப்பாடானது இந்திய சிறீலங்கா உறவுகள் நம்பகத்தன்மையான தரப்புகளுக்கிடையேயான உறவுகளாக அமையாது என்பதை புலப்படுத்துகின்றது. மறுபுறம் தமிழீழ இந்திய உறவுகள், 'தமிழ் தேசியம்' தொடர்பான சில இந்திய உயர் கொள்கை வகுப்பாளர்களின் ஆதாரமற்றபயத்தினால் பாதிக்கப்பட்டுவருகிறது. 'தமிழீழம்' என்ற தேசம், உலகளாவிய தமிழ் தேசியத்தின் ஆதரவைப் பெற்றுள்ளதென்பது உண்மையாயினும் அது, அத் தமிழ்த் தேசியத்தை வெறியூட்டப்பட்ட அழிவு சக்தியாக பாவிக்கும் பிற்போக்குத்தனமற்றது. இந்தியாவின் கூட்டாட்சி அமைப்பு தமிழீழ உருவாக்கத்தினால் சிதறடிக்கப்படும் என்பது ஒருவித பாசிச சிந்தனையாகும்.

இப் 'பயம்' விலக்கப்பட்ட இந்திய - தமிழீழ உறவுகள் நம்பகத்தன்மையானது. இச் சாத்தியத்தை புதிய இந்திய அரசு சரியாகக் கையாண்டால் தம் இயற்கையான நட்பு சக்தியினை தமது தரப்பில் வைத்திருக்க இந்தியாவால் முடியும்.

— ராஜா



நன்றி: வீரகேசரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்களின் கற்பும் எமது சமூகமும்!

எமது சமுதாயத்தில் திருமணம் என்ற ஓர் சடங்கு நிகழ்வதென்றால் அது ஏராளமான எம் நெருங்கிய உறவுகளின் முயற்சிகளாலேயே நடாத்தி முடிக்கப் படுகிறது. இவர்களால் நிகழ்த்தப்படும் இத்திருமணம் வெற்றியடைந்து அவர்கள் மகிழ்ச்சியாக வாழ்வார்களேயானால், இத் திருமணத்தை உரிமை கோர ஏராளமானவர்கள் முன்னின்று குரல் கொடுப்பார்கள். அதுவே சில சமயம் தோல்வியில் முடிவடைந்து விவாகரத்து வரை சென்றுவிட்டால், இத் திருமணத்தோடு சம்பந்தப்பட்டவர்கள் யாருமே தம் வாயையே திறக்க மாட்டார்கள்.

இதற்குக் காரணம் என்ன? அவர்களின் இந் நிலைக்கு தாம் தான் காரணகர்த்தா என வேறு யாரேனும் தம்மை குறை சொல்லி விடுவார்கள் என்ற சுயநலப் போக்குத்தான். சரி, இவர்களின் அனுமதியின்றியே குறிப்பிட்ட கணவன், மனைவி இருவருமே தாமாகவே விவாகரத்தைப் பெற்றாலும் கூட இது சம்பந்தப்பட்ட ஆணைவிட பெண்களே அதிகம் சமூகத்தின் கேலிப் பார்வைகளிற்கும் கேள்விக் கணைகளிற்கும் ஆளாகின்றார்கள். இதில் இன்னொரு வேதனையான விடயம் என்னவென்றால், சமுதாயம் அப்பெண்ணை தன்னிலிருந்து ஓரங் காட்டுவதற்கு முன்னரே, குறிப்பிட்ட அப்பெண் தானாகவே தன்னைச் சூழ ஒரு வேலியை இட்டுக் கொண்டு ஒதுங்கிக் கொள்வதுதான்.

எனவே மேற்சொன்ன இந்த இரு நிகழ்வுகளிற்குமே காரணம் எதுவென்று நாம் நோக்கினால், எம்மக்களிடையே பரந்துபட்டுக் காணப்படுகின்ற மூட நம்பிக்கை சார்ந்த அறிவீனம் தான் என்பது எமக்குத் தெளிவாகத் தெரிகின்றது. எனவே இது சம்பந்தப்பட்ட மக்களிற்கு, நானும் ஓர் பெண் என்பதால் தயவுடன் ஒன்று கேட்டுக் கொள்கிறேன், தயவுசெய்து எம் உடலை சுத்தப் படுத்துவதில் கொள்ளும் அக்கறையைப்போல் எம் மனதையும் நன்கு சுத்தமாக சிந்திக்கச் செய்யுங்கள்.



திருமணம் என்பது ஆண் பெண் இருபாலாருக்கும் எவ்வாறு பொதுவோ அதேபோலத் தான் விவாகரத்தும் இவர்கள் இருவரிற்கும் சமம் தான். நாம் எவ்வளவோ முயற்சி செய்து ஒரு காரியத்தை வெற்றியுடன் முடிக்க நினைக்கும் பட்சத்தில் எங்கே அது தோல்வியைத் தழுவினால் அதோடு எம் வாழ்க்கை முடிகிறதா? இல்லையே. அவ்வாறேதான் விவாகரத்திற்குள்ளாவோரின் வாழ்க்கையும்.

சம்பந்தப்பட்ட ஆண் பெரும்பாலும் மறுமணம் செய்தாலும் கூட, பெண் பெரும்பாலும் மறுவிவாகம்செய்ய முன்வருவதில்லை. இதற்குக் காரணம் கற்பு என்ற ஒழுக்கம், பெண்களை மட்டுமே சார்ந்தது என்ற எம்மவரின் தவறான எடைபோடல்தான். குறிப்பாக முதல் திருமணம் செய்து விவாகரத்துப் பெற்ற பெண் மீண்டும் திருமணம் செய்ய முன்வந்தால் அவளை 'வித்தியாசமான' பார்வையால் அளந்து கொள்ளுதல், அல்லது பலவீனமானவள் என்ற பாதகமான நிலையில் எண்ணிக்கொள்ளுதல் போன்ற காரணங்களும் உண்டு. எனவே மீண்டும் மீண்டும் நான் எங்கள் சமுதாயத்தைப் பார்த்துக் கேட்கிறேன். இவ்வாறு ஒவ்வொரு பெண்களையும் ஏதாவதொரு குற்றச்சாட்டுக்களின் பால் சமூகத்திலிருந்து; ஓரங்காட்டிவிட்டு எவ்வாறு நீங்கள் ஒரு முழுமையான சமூகத்தை உருவாக்கிக் கொள்ளப் போகின்றீர்கள். இது மட்டுமல்ல இங்குள்ள பெண்களையும் கவனத்திற் கொண்டு சொல்கின்றேன்.

சோதரிகளே! எம் மனசாட்சிக்கு சரியென்று மற்றையோரைப் பாதிக்காத நீதியான எந்த விடயமும் சரியானதே. அதனால் உங்களிற்குள்ளேயே நீங்கள் ஒதுங்கிக்கொள்ளாதீர்கள்; கடுமையான கட்டுகளை அறுத்து வெளியே வாருங்கள்.

- நர்மதா



## பெண்களின் பல(வீன)ம்?



விளையாட்டுத் துறையில் ஏற்படும் காயங்களின் விகிதத்தை எடுத்துக்கொண்டால், ஆண்களை விடவும் பெண்களுக்குத்தான் அதிக காயங்கள் ஏற்படுகின்றதாம்.

இதற்குக் காரணம் 'ஹோர்மோன்கள்' தான் என்று, மெக்சிக்கன் பல்கலைக்கழகத்திலும், சின்சினாட்டி விளையாட்டுத் துறை மருத்துவ நிலையத்திலும் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள் கூறுகிறன.

இவ் ஆராய்ச்சியின்போது, முழங்காலிலுள்ள 'லிக்கமன்ற்' (Ligament) எனப்படும் மெல்லிய இழையத்தில் பாதிப்புக்குள்ளான 40 பெண் மெய்வல்லுனர்களை பரிசோதித்தபோது இவர்களின் மாதவிடாய் வட்டத்தின் நடுப்பகுதியிலேயே இவ் விபத்து இடம் பெற்றதாகத் தெரியவருகின்றது. ஓஸ்ரெஜன் (Oestrgen) எனப்படும் ஹோர்மோன் இந்த இழையத்தின் பலத்தைப் பாதிக்கின்றது எனவும் கடுமையான ஓட்டப் பயிற்சி, பாய்தல், சுழல்தல், போன்ற பயிற்சிகளின்போது தான் இந்தப்பாதிப்பு ஏற்படுகின்றது எனவும் இந்த ஆய்வுகள் கூறுகின்றன.

## அரசியல் துறையில் ஆர்வம் செலுத்தும் பின்லாந்துப் பெண்கள்

அழகும் அமைதியும் மிக்க நாடுகளில் ஒன்று பின்லாந்து. இங்கே தற்போது ஏறத்தாழ 51,00,000 பேர் வாழ்ந்து வருகிறார்கள். இவர்களில் கிட்டத்தட்ட அரைவாசி (26,17,000) தொகையினர் பெண்களாக இருப்பதால் தானோ இந்த நாட்டின் அனைத்துத் துறைகளிலும் பெண்களின் தலையீடும் பூரணமாக இருக்கிறது. இருந்தாலும் இங்குள்ள பெண்கள் பெரும்பாலும் விரும்புவது அரசியல் துறையில் தம்மை ஈடுபடுத்திக் கொள்வதற்காகவே. தற்போது பின்லாந்து நாட்டின் பாராளுமன்றத் தலைவராக இருப்பது கூட ஒரு பெண்தான்.



அதுமட்டுமல்லாது அந்நாட்டின் பாதுகாப்புத்துறை அமைச்சரும், வெளிவிவகார அமைச்சராக இருப்பது கூட பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கதே. அங்குள்ள அரசியல்துறைச் செயற்பாட்டில் 40வீதம் பெண்களாக இருக்கின்ற காரணத்தால்தான் 1994ல் நடந்த பொதுத்தேர்தலில் அந்நாட்டைச் சேர்ந்த பெண்ணொருவர் சிறுதொகையான வாக்கு வித்தியாச அடிப்படையில் பின்லாந்து நாட்டின் தலைவராக வரக்கூடிய தகைமையை இழந்து விட்டார். இருப்பினும் மீண்டும் பெண் தலைவர் ஒருவர் இங்கு வரக்கூடிய சாத்தியக் கூறு இருப்பதாகவே அங்கு வாழ்ந்து வருவோர் கூறுகின்றனர்.

இப்படி அரசியல் துறையில் மட்டுமல்லாது வேறு துறைகளிலுமாக அங்கு தொழில் புரியும் பெண்களின் தொகை மொத்தச் சனத்தொகையில் 69 வீதமாகவே உள்ளது. பின்லாந்துப் பெண்களைப் பொறுத்தவரை குழந்தைகளை பிரசவித்துக் கொள்வதிலும், அதற்கான வளர்ப்புக்குரிய செலவுப் பணத்தைப் பெறுவதற்கும் போதிய சலுகைகளை அந்நாட்டு அரசு வழங்கி வருகிறது.

இவ்வாறு எல்லா விடங்களிலும் முன்னுரிமையைப் பெற்றிருக்கும் இவர்களைப் பார்த்து ஆண்களிற்குச் சமமாக எல்லா விடயங்களிலும் உங்களிற்குச் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளதா? எனக் கேட்டால் இல்லையென 58 வீதமானவர்கள் கூறுகின்றார்கள். அதாவது அங்கு தமக்கு வழங்கும் உழைப்புக்கான ஊதியம் 25 வீதம் ஆண்களைவிடக் குறைவென்றும், பாலியல் ரீதியில் இன்னும் பெண்கள் மறைமுகமாகத் துன்புறுத்தப்படுகிறார்கள் என்றுமே வருத்தப்பட்டுக் கொள்கிறார்கள்.

இவ்வாறு இவர்களின் கேள்விக்கு விடையென்பதும் தீர்வென்பதும் அந்நாட்டின் அரசு விதிக்கும் சட்ட மாற்றங்களாலும் ஆண்களின் பூரணமான புரிந்துணர்வினாலும்தான் என்பதே பின்லாந்துப் பெண்களின் தற்போதைய எதிர்பார்ப்பாகும்.

## என்னுயிர் அக்கா!

துன்பம் பெண் குலத்தின்
தொடர்கதை...
அதில்
நீயும்
விடை தெரியாமல் போன
ஒரு விடுகதை!
உன் மரணம்
ஆசைக் கிளிக்கோர்
அபாய அறிவிப்பு
இளங் காதல்
மலர்களுக்கு
எச்சரிக்கை!!!



நன்றி நாற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் வாரம் தமது பிறந்த தினத்தைக் கொண்டாடும்
செல்வி நிரோஜா கருணாநிதி, செல்வி கஸ்தூரி சத்தியராயன்
பல்கலையும் கற்றுச் சிறப்புடன் வாழ்கவென குட்டி மாமாவும்
மற்றும் சிறுவர் முற்ற சகோதர சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.

# கவிதை முற்றம்



**செல்வி ஆருகா செல்வரட்ணம்**
**வயது: 05 (07.08.1993)**
**இடம்:** Solothurn,
Switzerland.

சிறுவர் பாட்டு

பாட்டு பாடுவோம்
நாங்கள் பாட்டு பாடுவோம்
பாட்டு பாடுவோம்
புதிய பாட்டு பாடுவோம்
ஒன்று சேர்ந்து பாடுவோம்
ஒற்றுமையாய் வாழுவோம்
காலை நேரம் பாடுவோம்
கடவுள் பாட்டு பாடுவோம்
பாடசாலை செல்லுவோம்
பாடம் படிக்க பழகுவோம்
கூடித்திரிந்து ஆடுவோம்
குறையில்லாமல் வாழுவோம்.

# வாரம் ஒரு சோலை

புலம் பெயர்ந்த நாடுகளில் இயங்கி வருகின்ற தமிழ் பாடசாலைகளின் பொறுப்பாளர்கள் அல்லது அமைப்புகளின் கவனத்திற்கு! உங்கள் பாடசாலைகளில் கல்வி பயில்கின்ற சிறார்களின் ஆக்கங்களை முழுமையாகக் கொண்டு இச்சிறுவர் முற்றம் மலரவிருக்கின்றது.


வாரம் ஒரு பாடசாலை என்ற வகையில் சிறார்களின் பல்வேறு ஆக்கங்களையும் புகைப்படங்களையும் சுமந்துகொண்டு சிறுவர் முற்றம் பவனிவரவிருக்கிறது. உங்கள் பாடசாலை சிறார்களின் ஆக்கங்களை சிறுவர் முற்றத்தில் உலாவிடச் செய்ய விரும்பும் பாடசாலை பொறுப்பாளர்கள் அல்லது அமைப்புகள் எம்முடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

உங்கள் பாடசாலையின் விபரங்களையும் தங்களுடன் தொடர்புகொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கத்தையும் கடிதமூலமாகவோ அல்லது தொலைபேசி அல்லது தொலைநகல் மூலமாகவோ எமக்கு அறியத்தரவும்.



**செல்வன் அ. லவன்**
**வயது: 05**
**இடம்:** 75020 Paris,
France.

அம்மா
ஆடு
இலை
ஈ
ஊஞ்சல்
எருது
ஏணி
ஐந்து
ஒட்டகம்
ஓணான்
ஔவையார்
அஃறிணை




# தெனாலிராமன் கதை படியுங்கள்

## இடம் கிடைத்தது

அப்பொழுது அரசர் கிருஷ்ணதேவசகாயர் ராமதுர்க்கத்தில் மலைவாசம் செய்து கொண்டிருந்தார். அவரைப் பார்க்கத் தெனாலிராமன் குதிரை மீதேறிப் புறப்பட்டான்.

கரடு முரடான பாதை. குதிரை ஏறியும் இறங்கியும் ஓடியது. தெனாலிராமனுக்கு உடம்பு வலி எடுத்து விட்டது. அதோடு ஊரை நெருங்கிக்கொண்டிருந்த வேளையில் மழை வேறு 'சோ' வென்று வந்துவிட்டது. சொட்டச் சொட்ட நனைந்துவிட்டான். உடல் 'வெட வெட' வென்று நடுங்கத் தொடங்கிவிட்டது.

மலையடிவாரத்தில் இருந்த சத்திரத்திலேயே இறங்கிவிட்டான் தெனாலிராமன். அங்கேதான் அரண்மனைப் பிரதானிகளும் தங்கியிருந்தனர்.

எட்டிப் பார்த்தான் தெனாலிராமன். உள்ளே பெரிய கணப்பு மூட்டி, மாமிசத்தைப் பொரித்துத்தின்று கொண்டே, சுற்றிலும் நெருக்கடித்து உட்கார்ந்து கொண்டு குளிர் காய்ந்து கொண்டிருந்தார்கள். எட்டிப் பார்த்த தெனாலிராமனை அவர்கள் பார்க்காமல் இல்லை. இருந்தும் கொஞ்சம்கூட அசைந்து கொடுக்கவில்லையே! சற்று நகர்ந்து கொடுத்திருந்தாலும் அவன் வந்து குளிர் காய்ந்திருப்பான்.

அதைக் கண்டதும் அவனுக்குக் கோபம் வந்தது. உடனே அவன் மூளையும் வேலை செய்யத் தொடங்கியது.

'கொஞ்சம் மாமிசம் தருகிறீர்களா என் குதிரைக்கு? மழையில் நனைந்துகொண்டு பட்டினியாய்க் கிடக்கிறது' என்றான்.

'என்ன? குதிரைக்கு மாமிசமா! அதிசயமாயிருக்கிறதே! உன் குதிரை மாமிசங்கூடச் சாப்பிடுமா?' என்று அங்கிருந்த அனைவரும் அவன் பக்கம் திரும்பினார்கள்.

'இதோ, வாசலில்தான் நிற்கிறது குதிரை. நீங்களே வேண்டுமென்றாலும் கொடுத்துப் பாருங்களேன்?' என்றான். 'இதோ பார்த்துவிடுகிறோம்!' என்று உடனே சிலர், பொரித்த மாமிசத்தைக் கையிலெடுத்துக் கொண்டு எழுந்து சென்றார்கள். மற்றவர்களும் அவர்களைப் பின்தொடர்ந்து சென்றனர்.

இடம் காலியாயிற்று. தெனாலிராமன் கணப்பினருகில் தாராளமாய் உட்கார்ந்துகொண்டு தன் உடம்பை நன்றாய்க் காய்த்துக்கொண்டான். 'ஆகா! எத்தனை இதமாயிருந்தது தெரியுமா அவனுக்கு!'

வெகு நேரங்கழித்து, வெளியேபோன அவர்கள், 'திபுதிபுவென்று உள்ளே வந்தார்கள். 'என்ன ஐயா அது! அப்படி உளறினாயே? மாமிசத்தை எப்படி எப்படியோ கொடுத்துப் பார்த்தோம். உன் குதிரைவாயைக் கூடத் திறக்கவில்லையே' என்றார்கள்.

'உண்மையாகவா?' என்று வெளியே எட்டிப்பார்த்தான் தெனாலிராமன். அப்பொழுது மழை நின்றிருந்தது. 'சரிதான், அதன் எஜமான் நனைந்த உடம்பைக் காய்த்துக்கொண்டு தயாராகிவிட்டான் என்று தெரிந்து கொண்டுவிட்டது! மழையுந்தான் விட்டு விட்டதே! புல் பிடுங்கிக்கொண்டுவந்து போடட்டுமே என்று அது மாமிசத்தை மறுத்திருக்கிறதாக்கும்!' என்று சொல்லிக் கலகலவெனச் சிரித்தான் தெனாலிராமன்.

அறிவியல் முற்றம்

# கிரகங்களைத் தேடி!

பல நாடுகள் கிரகங்களை ஆராயக் கோள்களை ஏவியிருக்கிறார்கள். அவை என்னென்ன என்று பார்ப்போமா?

**முதல் சந்திரன் ஆய்வுக்கோள்:** லூனா சோவியத் குடியரசால் 1958 ஜனவரி 2-ம் திகதி ஏவப்பட்டது. அது திட்டமிட்டபடி செயல்படவில்லை.

**சந்திரனைச் சென்றடைந்த முதல்கோள்:** லூனா -2 சோவியத் குடியரசால் 1959 செப்டெம்பர் 12-ம் திகதி ஏவப்பட்டது.

**சந்திரனின் மேற்பரப்பில் இடித்து இறங்கி, சந்திரனின் மறுபக்கத்தை புகைப்படம் பிடித்த முதல் கோள்:** லூனா -3 சோவியத் குடியரசால் 1959 அக்டோபர் 4-ம் திகதி ஏவப்பட்டது.

**முதலில் மென்மையாக இறங்கிய கோள்:** லூனா - 9 சோவியத் குடியரசால் 1966 ஜனவரி 31-ம் திகதி ஏவப்பட்டது. முதல் அமெரிக்க கோள் (மென்மையாக இறங்கியது): சர்வேயர் -1, 1966 மே 30-ம் திகதி ஏவப்பட்டது.

**சந்திரனை வரைபடம் வரைந்த முதல் கோள்கள்:** லூனார் சுற்றுக்கோள்கள் 1-5 அமெரிக்காவால் 1966 ஆகஸ்டு 10-ம் திகதி ஆகஸ்ட் 1, 1967 வரையில் ஏவப்பட்டன. இவை சந்திரனின் மேற்பரப்பில் 99% ஐ வரைபடமாக வரைந்தன.

**சில முதல் வெள்ளி ஆய்வுக்கோள்கள்:** வெற்றிகரமான முதல் கோள் மாரினர் -2 அமெரிக்கா, இது 1962 டிசம்பர் 14-ல் வெள்ளியைத் தாண்டிப் பறந்து சென்றது. முதலில் இறங்கியது. வெனிரா -3, சோவியத் குடியரசு, 1966 மார்ச் 1-ம் திகதி வெள்ளியில் இடித்து இறங்கியது.

**முதலில் மென்மையாக இறங்கியது:** வெனிரா-7 சோவியத் குடியரசு, 1970 டிசம்பர் 15-ம் திகதி இறங்கி 23 நிமிடம் உடையாமல் இருந்தது.

**மேற்பரப்பின் முதல் புகைப்படம்:** வெனிரா -9 சோவியத் குடியரசு, 1975 அக்டோபர் 21-ம் திகதி ஒரு புகைப்படத்தை அனுப்பியது.

**சில முதல் செவ்வாய் ஆய்வுக்கோள்கள் வெற்றிகரமான முதல்கோள்:** மாரினர்-4 அமெரிக்கா, 1965 ஜூலை 14-15-ம் திகதிகளில் 22 புகைப்படங்களை அனுப்பியது.

**முதலில் இறங்கியது:** மார்ஸ்-2, சோவியத் குடியரசு, 1971 நவம்பர் 27-ம் திகதி இடித்து இறங்கியது. முதலில் மென்மையாக இறங்கியது.

வைக்கிங் -1 அமெரிக்கா, 1976 ஜூன் 20-ம் திகதி இறங்கியது.

**பிறகிரகங்கள்:** புதனுக்குச் சென்ற வெற்றிகரமான முதல் ஆய்வுக் கோள்: மாரினர் -10, அமெரிக்கா., 1974 மார்ச் 29-ம் திகதி புதனைத் தாண்டிப் பறந்து சென்றது.

வியாழனுக்குச் சென்ற வெற்றிகரமான முதல் ஆய்வுக் கோள்: பயனியர் -10 அமெரிக்கா, 1973 டிசம்பர் 3-ம் திகதி கடந்து பறந்து சென்றது. (சூரிய மண்டலத்தை விட்டு வெளியே சென்ற முதல் கோளும் இதுதான்.)

**சனிக்குச் சென்ற வெற்றிகரமான முதல் ஆய்வுக் கோள்:** பயனியர் -11 அமெரிக்கா, 1979 செப்டெம்பர் 1-ம் திகதி கடந்து பறந்து சென்றது.

**வியாழனின் நிலவுகளுக்கு முதலில் வெற்றிகரமாகச் சென்ற ஆய்வுக்கோள்:** வாயேஜர் -1 அமெரிக்கா, 1979, மார்ச் 5-ம் திகதி ஜூபிடரைக் கடந்து பறந்து சென்றது. நிலவுகள் ஐயோ, கனிமீட் மற்றும் காலிஸ்டோ பற்றிய விவரங்களை அனுப்பி விட்டு தாண்டிப் பறந்து சென்றது.

**யுரேனஸ் நெப்ட்யூனுக்கு முதல் ஆய்வுக் கோள்கள்:** வாயேஜர்-2, அமெரிக்கா 1977 ஆகஸ்டு 20-ம் திகதி ஏவப்பட்டது. 1986-ல் யுரேனஸ் மற்றும் 1989-ல் நெப்டியூனைச் சென்றடைந்தது. இது வியாழன் மற்றும் சனியை ஏற்கனவே அடைந்து விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா.வை நோக்கி

வருடாவருடம் ஐ.நாவை நோக்கி அலையெனச் செல்கின்றோமே? எமக்கு சாதகமாக ஏதாவது நடந்ததா— இல்லையே? இந் நிலையில் மீண்டும் ஒரு ஊர்வலமா? இவ்வாறான எண்ண அலைகள் யாருக்கும் எழுவதில் நியாயமிருக்கிறது. ஆனால் இவ் வேளையில் நாம் ஒரு சில விடயங்களை அவதானிக்கவும் வேண்டும். ஒரு காலத்தில் பயங்கரவாதிகளாக, பயங்கரவாதமாக சித்தரிக்கப்பட்ட எமது போராட்டத்தில் இன்று ஏற்பட்ட மாற்றம் என்ன?




வன்னி தளத்திலே ஐ.நா.வின் பிரதிநிதி ஒருவர் தமிழ் தேசியத்தின் பிரதிநிதிகளை சந்தித்து பேச்சுக்களை நடாத்திவிட்டு திரும்புகிறாரென்றால் அதற்கு வழிவகுத்தது எமது மக்களின் உறுதி குலையாத ஆதரவாகும். ஒவ்வொரு தடவையும் நாம் பேரணிகளிலோ அல்லது ஒன்றுகூடல்களிலோ 'எமது தலைவர் பிரபாகரன்', 'எமது தாயகம் தமிழீழம்' என முழங்குவது ஒன்றும் வெற்றுக் கோஷங்கள் அல்ல. உலகத்தின் செவிகளில் நாம் எமது தேசியப் போராட்டத்திற்கு கொடுக்கும் பலமான அங்கீகாரத்தின் அடையாளங்களின் ஒரு வடிவமே அவ் வெளிப்பாடுகளாகும். வஞ்சகமான எதிரியின் மாயப் பரப்புரைகள் சர்வதேசமெங்கும் தனது நச்சுக்கிளைகளை பரப்பிவிடும் இந்த வேளையில் இவ்வாறான போராட்டங்களே அத்தகைய நச்சுக்கொடிகளை தீய்த்துவிடும் வல்லமை கொண்டன.

இம்முறை இந்த பேரணியில் நாம் சொல்லவேண்டிய விடயங்கள்




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அமைதிப் பேரணி

ஏராளம் உள்ளன. தமிழர் தாயகத்திற்கு சிறீலங்கா விதித்த நிவாரணவெட்டு, பொருளாதாரத் தடைகள், வெறித்தனமாக கட்டவிழ்த்துவிடப்பட்ட பேரினவாத போர் வெறி... இப்படி பல விடயங்கள் உள்ளன.

பொருளாதார நலன்களுக்காக கூடிக்குலவ முனையும் சர்வதேசத்தின் முயற்சிகளின் முன்னே எமது உரிமைக் குரலினை ஓங்கி முழக்கமிடும் நேரமும் இதுதான்.


தமிழ்ச் தேசியம் அற்ப சலுகைகளுக்காக ஏங்கிக்கிடக்கும் ஒரு இனமல்ல. தனது தாயகத்தில் உரிமையுடன் வாழ முனைப்புக் கொண்டுள்ள ஒரு போராட்ட சக்தி என்பதை ஐ.நாவின் வாசல் வரை மீண்டும் ஒருமுறை அலையாகச் சென்று முழங்க ஒன்றாகத் திரளுவது எமது தார்மீகக் கடமையாகும்.

வீரம் செறிந்த எமது போராட்டத்தை, வியப்புக் கலந்த விழிகளால் நோக்கும் சர்வதேசத்தின் முன்பாக எம் உரிமை குரலை ஓங்கி முழங்க அணி திரள்வீர்.









வன்னிப் பெருநிலப்பரப்பில் சிறீலங்கா அரசு மேற்கொள்ளும் அரச பயங்கரவாதத்தைக் கண்டித்தும்,....

தமிழீழ மக்களுக்கு எதிரான தொடர்சியான இன அழிப்பை உடன் நிறுத்த வழி கோலும் வகையில் ஆக்கிரமிக்கப்பட்ட தமிழீழப் பகுதிகளிலிருந்து சிங்கள இராணுவத்தை வெளியேற்றக் கோரியும்....

தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தையும், சுயநிர்ணய உரிமைகளையும் அங்கீகரித்து நிலையான தீர்வு ஏற்படுவதற்கு சர்வதேச அரசுகள் சிறீலங்கா அரசிற்கு அழுத்தம் கொடுக்கக்கோரியும்

தமிழின அழிப்பிற்காக உலக நாடுகளிடம் அபிவிருத்திக்கென சிறீலங்கா கோரும் உதவிகளை சர்வதேச நாடுகள் வழங்குவதை நிறுத்தக் கோரியும்....

சிறீலங்கா அரச பயங்கரவாதத்தால் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் தமிழ்த் தேசியத்தின் அவலத்தை அகிலத்திற்கு எடுத்துரைக்கவும்....

சிறீலங்காவின் போர்ச் சூழலே தமிழீழ மக்களைப் புலம் பெயர்ந்த நாடுகளில் அரசியல் அகதியாக்கியுள்ளது என்பதை எடுத்துரைக்கவும்....

போக்குவரத்து வசதிகளுக்கு உங்கள் பகுதிகளுக்குரிய விடுதலைப் புலிகளின் பணியாளர்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

சூரிச் (சுவிஸ்) புகையிரத நிலையத்திலிருந்து விசேட புகையிரத வசதி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறு கதை

# கோடிச் சேலை

ஊசி முனைகளாய் குத்தும் குளிரிலிருந்து தப்பித்துக்கொள்ள அவன் பெரும் பாடுபட்டுக் கொண்டிருந்தான். தன்னை இரண்டு மூன்று துண்டுகளாய் மடித்துப்போட்டுக் கொண்டு, உடுத்தியிருந்த சாரத்தை இழுத்துப் போர்த்தி குளிருக்கு கவசமாக்கிக் கொண்டிருந்த அவனது முயற்சிகளெல்லாம் விரயமாக உடல் நடுங்கிக் கொண்டிருந்தது.

நிசப்தங்கள் பூத்திருந்த பின்னிரவு வேளையில் காம்பிராவின் ஜன்னல் வழியே புகுந்த நிலா வெளிச்சம் - திரைப்பட 'சிலைடா'ய் சற்றுத் தள்ளிப் படுத்திருக்கும் மகள் அஞ்சலை மீதும், பேரன் மீதும் விழுந்தது. இடுப்பிலிருந்து காற்சட்டை முழங்காலுக்குக் கீழே நழுவ அம்மணமாய், ஒரு நிலாத்துண்டைப் பறித்துப் போட்டது போலக் கிடந்தான் பேரன். அவனுக்குச் சற்றுத் தள்ளி சுருட்டி மடக்கிக்கொண்டு கிடக்கின்றாள் அஞ்சலை.

கூரைத் தகர ஓட்டையினூடே வந்த ஒளி சுவரில் புள்ளி புள்ளியாய் விழுந்தது. சுவர் ஓரமாய்க் கட்டப்பட்டிருந்த கொடிக்கயிற்றில் இரண்டு தப்புகளும், சுருட்டிவிடப்பட்ட ஒரு ஆட்டுத்தோலும் தொங்கின.

நடேசனுக்குத் தூக்கம் வரவில்லை. மகளையும் பேரனையும் நினைக்கையில் நெஞ்சம் வேதனையில் கனத்தது.

தோட்டத்துச் சனமே வாயில் கை வைக்கும்படியாக கையில் இருந்த காசெல்லாம் செலவழித்து நகை நட்டுக்கள் செய்து, 'லவுட்ஸ்பீக்கர்' போட்டு நல்லபடியாகத்தான் மகளைக் கலியாணம் செய்து கொடுத்தான். ஒரு குழந்தை பிறக்கும் வரை மருமகனும் ஒழுங்காகத்தான் இருந்தான். குழந்தை பிறந்த மறுமாதமே பிள்ளையும் கையுமாக வந்து நின்ற மகளைக் கண்ட தகப்பனுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. விரட்டி விடப்பட்ட மகளைக் கூட்டிக்கொண்டு நியாயம் கேட்கப் போனபோதுதான் மருமகனின் சுயரூபம் தெரிந்தது.

கெஞ்சலுக்கோ, பயமுறுத்தலுக்கோ 'அசைகிறகட்டை' அவன் இல்லை என்பதை விளங்கிக்கொண்ட பின்னர் மகளையும், பிள்ளையையும் தன்னுடன் கூட்டிக்கொண்டு வந்துவிட்டான். மருமகன் ஒரு மாதத்திற்குப் பின்னர் யாரோ ஒருத்தியை 'இழுத்துக்கொண்டு' வவுனியாப் பக்கம் ஓடிவிட்டான் என்று பேச்சு அடிபட்டதை அவனோ, அல்லது அஞ்சலையோ சட்டை செய்யவில்லை.

இது நடந்து பத்து வருடங்களுக்கு மேலிருக்கலாம்.

கைப்பிள்ளையைத் தூக்கிக்கொண்டு வந்த அஞ்சலை தகப்பனுக்குப் பாரமாக இருக்கவில்லை. மனசிலே தைரியம் இருந்தது. கையில் பால் வெட்டும் கத்தி இருந்து. மாதா மாதம் கைநிறைய இல்லையென்றாலும், சம்பளம் என்ற ஒன்று அவள் பெயரில் 'செக்ரோலி'ல் இருந்தது.

ஒழுங்காக் வேலைகளைக் கவனித்துக்கொண்டிருந்தவள் சுகமில்லையென்று ஒருநாள் படுக்கையில் விழுந்தாள். ஒரு மாதமாக படுத்த படுக்கையில் கிடந்தவள் ஒருவாறு தேறி எழும்பினாள். என்றாலும் முன்போல ஓடியாடி வேலை செய்ய சக்தியில்லை. திரும்பவும் மலையேறி வேலைக்குப் போன மறுநாள் மீண்டும் கைகால்களும், முகமும் வீங்கிக்கொண்டன. பழையபடி கைவைத்தியம், நாட்டு வைத்தியம், ஆஸ்பத்திரி வைத்தியமெல்லாம் படிப்படியாக நடந்தன.

வீக்கமெல்லாம் வாடிய பின்னர் மகளை ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டுக்குக் கூட்டி வந்த கையோடு ஒரு கோடாங்கி அடித்து சாமி பார்த்தான். 'சாமிபோட்ட கெடு' தான் கழிந்ததேயொழிய, அவளது நோய் மறையவில்லை. படுக்கையில் படுக்கக்கூடியளவு அவளுக்கு வருத்தமொன்றும் இல்லையென்றாலும் தெம்புடன் வேலை செய்ய முடியாமலிருந்தது.

மாதத்தில் நான்கு அல்லது ஐந்து நாட்கள் வேலைசெய்து கொண்டிருந்தவள், இந்த மூன்று மாதமாக வேலைக்கே போகவில்லை. தகப்பன்தான் மாலைவேலையையும் செய்துகொண்டு கொந்தரப்பும் வெட்டிக்கொள்வான்.

'தோட்டத்தை கவர்மெண்டுக்கு எடுக்கப்போறாங்களாம்' என்று பேச்சடிபட்டவுடன் நடேசனுக்கு ஒன்றுமே விளங்கவில்லை.

தோட்டத்தைப் பொறுப்பேற்க பெரிய மந்திரியே கொழும்பிலிருந்து இன்ன திகதியில் வருகிறார் என்று திடீரென ஒலிபெருக்கியில் அறிவித்தவர்கள், நோட்டீசும் ஒட்டிவிட்டுப் போனார்கள்.

இரண்டு மூன்று பொலிஸ் ஜீப்பைப் பின் தொடர்ந்து நாலைந்து கார்களில் யார் யாரோவெல்லாம் ஒருநாள் வந்து இறங்கினார்கள்.

மந்திரியும் வருகிறார் என்று கேள்விப்பட்டிருந்த நடேசனுக்கு 'நெசனலு'ம் வேட்டியும் உடுத்தியிருந்த ஒரு ஆளைக் காட்டி, இவர்தான் மந்திரி என்று குறிப்பிட்டபோது ஆச்சரியமாக இருந்தது. மந்திரி என்றால் ராஜபாட் நாடகங்களில் வருவது போல மணியுடுப்பும், கிரீடமும் அணிந்திருப்பார் என்றுதான் அவன் நினைத்திருந்தான்.

அந்தத் தோட்டம் இப்போது அரசாங்கத் தோட்டமாகிவிட்டது. முதலாளிக்குச் சொந்தமானதாக இருந்தபோது வேலை பார்த்த துரை, உத்தியோகஸ்தர் எல்லோருக்கும் சீட்டுக் கிழிக்கப்பட்டுவிட்டது.


புதுத்துரை, புது உத்தியோகஸ்தர்கள், புது நிர்வாகமெல்லாம் ஆரம்பித்து ஆறுமாதங்கள் சம்பளமும் போடப்பட்டுவிட்டன.

நடேசனை ஆபீசுக்கு வரச்சொல்லி நேற்றுவரை கூறிய வார்த்தைகள் பூதாகரமாக அவனைப் பயமுறுத்திக் கொணடிருந்தன.

'உன்னுடைய மகள் இரண்டு மாசத்திற்கு மேல் வேலைக்கு வரவில்லை. வேலைக்கு வராத ஆளுகளுக்கெல்லாம் லயமும் கூப்பன் சாமான்களும் கொடுப்பதற்கு இது ஒன்றும் தருமசத்திரம் அல்ல. உன் மகள் உடனடியாக வேலைக்கு வராவிட்டால் பத்துச் சீட்டு, கூப்பனெல்லாம் கையில் கொடுக்கப்படும்'

கண்டிப்பான குரலில் துரை கூறிய வார்த்தைகளிலேயே அவனது மனம் சிக்கிக்கொண்டிருந்தன.

இது துரையின் இரண்டாவது எச்சரிக்கை. இம்முறை துரை வெறும் வார்த்தைகளோடு



நின்றுவிடப்போவதில்லை என்பதும், இதற்கும் ஒரு நடவடிக்கையும் உண்டு என்பதுவும் நடேசனுக்கு நன்றாகத் தெரியும்.

வாசல் புறமாக ஒரு சேவல் கூவியது. அஞ்சலை புரண்டு படுத்தாள். அவளது உடலைப் போர்த்துக் கொண்டிருந்த துண்டுத்துணி இடுப்பிலிருந்து சற்று நழுவியிருந்தது.

வாரத்தில் ஒரு நாளோ அல்லது இரண்டு நாளோ அவள் நோயோடும் நொடியோடும் வேலைக்குப் போவதற்குத் தயாராகத்தான் இருக்கின்றாள். ஆனால் கட்டிக்கொள்ள ஒரு சேலை அவளிடம் இல்லை. இடுப்பைச் சுற்றிக்கொண்டிருக்கும் ஒரு பொத்தல் விழுந்த துண்டுத் துணியோடு நாலுபேருக்கு முன்னால்போய் நிற்கமுடியாமல் இருக்கும்போது, அதைக் கட்டிக்கொண்டு வேலை செய்வதெப்படி? மூன்று மாதத்திற்கு மேல் நோயில் படுத்திருந்த மகளுக்கு வைத்தியமும், சாப்பாடும் கொடுத்ததே பெரிய சாதனையாக இருந்தபோது சேலை வாங்கிக்கொடுப்பதற்கு அவன் எங்குபோவான்?

வெளியில் போகவேண்டும் போலிருந்தது. கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தான்.

நிலவு ஊமையாய் காய்ந்துகொண்டிருந்தது. சலவைக்குப்பின்னர் சாயம் மங்கிப்போன பண்டிகை ஆடையிலுள்ள பூக்களைப்போல நட்சத்திரங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தெரிந்தன.

அணிவகுத்து நிற்கும் ரப்பர் மரக்கிளைகளிலுள்ள இடைவெளிகளில் புகுந்த நிலா ஒளி, திட்டுத் திட்டாகத் தெரிந்தது. பாதையோர வரிசையிலுள்ள கோப்பி மரங்களில் பூத்துக்குலுங்கிய கோப்பிப் பூக்களின் மணம் கம்மென்று வீசியது.

பொழுது விடிவதற்கு இன்னும் கொஞ்ச நேரமே இருக்கின்றது. சூதல் காய்வதற்காக திண்ணையில் இருந்த அடுப்பைப் பற்றவைப்பதற்கு தயார்செய்து கொண்டிருக்கும் போது வெளியில் நாய் குரைக்கும் சத்தம் கேட்டு எட்டிப் பார்த்தான். கல்யாணம், சடங்கு, சாவு வீடுகளில் நடேசனோடு சேர்ந்து தப்படிக்கும் கந்தன் மேட்டு லயத்திலிருந்து வந்து கொண்டிருந்தான்.

'என்ன கந்தா! என்னமும் அவசரமா? விடிஞ்சதும் விடியாததுமா இந்த நேரத்தில் வந்திருக்கிறியே!'

'ஒங்ககிட்ட தாண்ணே வந்தேன். மேட்டு லயத்திலே இருந்த சாமிக்கெழவி நேத்து ராத்திரி மண்டையை போட்டுட்டா!'

'அட, நெசமாத்தானா? பாவம், கெழவியும் போயிட்டா சாகிறநேரம் எத்தனை மணியிருக்கும்?'

'சீவன் பிரியறநேரம் காலையில நாலுமணியிருக்கும்.'

கந்தன், நடேசனின் அருகில் அடுப்படியில் உட்கார்ந்தான் சூதல் காய்வதற்காக.

சாமிக் கிழவி ஒரு தனிக்கட்டை வேலை செய்ய முடிந்த காலத்தில் 'பட்றபர்' மலையில்தான் பால் வெட்டினாள். இரண்டு பேருக்கு 'பேர்' போடுகின்ற அளவிற்கு பால் கொண்டுவருவாள். வயது போய்விட்டது என்ற காரணத்தைக் காட்டி பழைய மலையில் அவளுக்கு 'வெட்டுக்' கொடுக்கப்பட்டது. 'கண்டக்கையா' வின் மாட்டுக்கு புல் அறுக்கும் சுப்பையாவிற்கு 'பட்' மலையில் 'வெட்டு'க் கொடுப்பதற்காகத்தான் கிழவிக்கு மாற்றம் கொடுக்கப்பட்டது என்பது ஒருவருக்கும் தெரியாததல்ல.

இதைப்பற்றிப் பிரச்சினை கிளப்பினால் 'ஒட்டுப் பாலாய்' இழுபடுமே ஒழிய, ஒரு நல்ல முடிவு வராதென்பதெல்லாம் பழைய கதைகள்!

ஒருநாள் பால் வெட்டுகின்ற பொழுது பால் சிரட்டைக்குள் சுருட்டிக்கொண்டிருந்த சுருட்டைப் பாம்பு கிழவியின் கையைக் கடித்துவிட்டது. அதன் பின்னர் மழைக் காலங்களில்அவளது வலது கை வீங்கிக்கொள்ளும், வீக்கம் வாடுவதற்கு மூன்று நான்கு நாட்களுக்கு மேலாகும். வீக்கம் வாடினாலும் கை கடுப்பு இருந்து கொண்டேயிருக்கும்.

பால் வெட்டக் கிழவி தகுதியற்றவளானாள். வேலை செய்கின்ற பொழுது இருந்த வயிறு வேலை செய்யாத காலத்திலும் இருந்தது. நெற்றியில் வீபூதி பூசி குங்குமப் பொட்டொன்றை வைத்துக்கொண்டு ஒரு தட்டில் கொஞ்சம் வீபூதியுடனும் ஒரு பிடிமயிலிறகுடனுமாக கிழவி தோட்டம் தோட்டமாக லயம் சுற்றத் தொடங்கிவிட்டாள். தோளில் தொங்கும் குட்டிச்சாக்கு மாலையில் வீடு திரும்பும்போது அரைவாசியாவது நிரம்பியிருக்கும்.

வீடுகளுக்கு முன்னால் போய் நின்று கிழவி அதிகம் பேசமாட்டாள்.

'அரோகரா சாமி அரோகரா காணிக்கை படியரிசி சாமி' அவ்வளவுதான். வேடிக்கை பார்க்க வந்த சிறு பிள்ளைகளுக்கு வீபூதி பூசுவாள்.

புதுத்துரை வந்த பின்னர் கிழவியின் காம்பிராவைப் பறித்துக்கொண்டதற்கு ஆத்திப்படுவதைவிட, பிள்ளை காம்பிராவில் தங்குவதற்கு இடம் கொடுத்ததையே பெரிதாக நினைக்கவேண்டும்.

ஒரு இறாத்தல் அரிசியும், ஒன்றரைறாத்தல் மாவுமாக ரேஷன் குறைக்கப்படும்வரை கிழவியின் சீவியம் அவ்வளவு கஷ்டமானதாக இருக்கவில்லை.

அதன் பின்னர் தான் கிழவி ஒரேயடியாக ஆட்டம் கண்டுபோய் விட்டாள். ஒரு நாளைக்கு ஒரு வேளை சரி அரைவயிற்று சாப்பாடு கிடைத்தால் அது சாதனைதான்.

ஆளே அடையாளம் தெரியாதபடி நடக்கக்கூட சீவனில்லாமல் படுக்கையில் தள்ளிவிட்டது பஞ்சம்.

'மூணு நாளா அன்னந்தண்ணி ஆகாரமில்லாமல் கெழவி பெனாத்திகிட்டு கெடந்திருக்கா. ஒரு படி சோறு குடுக்கநாதியில்ல. பட்டினி தான் கிழவிவிய கொன்னுபுடிச்சி. சொந்தக்காரன் அண்ணன் தம்பியோ ஒருத்தருமில்ல. நம்பதான் பொணத்த எடுத்து பொதைக்கணும்' என்றான் கந்தன்.

'நம்பதான் முன்னுக்கு நின்னு கேத காரியத்தை செய்யப் போறமுன்னு தொரக்கிட்ட மொதல்ல சொல்லிரனும். நாளைக்கு அதுல ஒரு இக்கட்டுவராம' என்றான் நடேசன்.

'ஆமா! ஆமா!' தலையாட்டினான் கந்தன்.

பிணத்தைப் புதைப்பதற்கான அனுமதியை மட்டும்தான் துரையிடம் இரண்டு பேராலும்

(தொடர்ச்சி 20–ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாளரம்

# பாட்டோடு நின்றுவிட்ட கும்மி

புலம் பெயர்ந்த நாடுகளில் பிறந்து வளர்கின்ற தமிழ் குழந்தைகளும் எமது தாயகத்திலே பிறந்த இங்கு புலம் பெயர்ந்து வாழுகின்ற இளைய தலைமுறையினர் பலருக்கும் - தெரிந்திராத தமிழர் வாழ்வியல் கலைகளில் கும்மியும் ஒன்று.

முற்காலத்தில் தமிழர்களுடைய வாழ்வியல் சடங்குகளில் குறிப்பாக குழந்தை பிறப்பு, அதற்கு பெயர் வைத்தல், தொட்டிலில் இருத்தல், காது குத்துதல், அமுது ஊட்டுதல், வயல்களில் விதை விதைத்தல், நாற்று நடுதல், அறுவடை செய்தல், புதிர் எடுத்தல், மற்றும் கோவில் திருவிழாக்கள் பொங்கல் திருநாள் விழாக்கள் எல்லாவற்றிலும் கும்மியடித்துப்பாடுதல் என்பது மிக முக்கியமான கலை வடிவமாக கூத்துவடிவமாக இருந்தது.

இளவயதுப் பெண்கள் வட்டமாகச் சுற்றிவந்து பாடிக் கொண்டு கை குவித்தடிக்கும் கூத்து கும்மி எனப்பட்டது. 'கும்முதல்' என்ற சொல்லுக்கு கை கொட்டுதல் என்று தமிழ் அகராதியில் பொருள் சொல்லப்படுகின்றது. சங்கத் தமிழ் இலக்கியமான அக நானூற்றில் 'கொப்பி' எனக் குறிப்பிடப்படுகின்றது. ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான சீவக சிந்தாமணி கும்மியை 'கொம்மை' எனக்குறிப்பிடுகிறது.

தமிழகத்தின் இன்றும் சில கிராமப்புறங்களில் கும்மியடிக்கும் வழக்கம் இன்றும் நடைமுறையிலுள்ளது. குறிப்பாக கிராமப்புற கோவில் திருவிழாக்களில் கன்னிப் பெண்கள் அலங்காரம் செய்து கொண்டு வட்டமாக நின்று பாடிக் கும்மியடிக்கும் வழக்கம் உள்ளது. பொதுவாக இந்தக் கும்மிப் பாடல்கள் முன்பாட்டு பின்பாட்டு என்ற அடிப்படையில் அமைந்திருக்கின்றன.



தமிழ் நாட்டின் தென்னார்க்காடு மாவட்டத்தில் கும்மிப் பாட்டை, கன்னிப்பாட்டு என்றே அழைக்கின்றனர்.

பருவ மழை பொய்த்துப் போகும் காலத்தில் மழைக் கடவுளான வர்ண பகவானுக்கு வேண்டுதல் செய்யும் விதத்தில் கன்னிப் பெண்கள் இரவு நேரத்தில் கூடிநின்று பாடிக் கும்மியடிக்கும் வழக்கமும் தமிழகக் கிராமங்களில் இன்றும் நடைமுறையில் உள்ளது.

பெண்கள் மட்டும்மல்லாது ஆண்களும் கும்மியடித்து ஆடும் வழக்கமும் நமது தமிழ் சமூகத்தில் இருந்தது. பெண்கள் வட்டமாகக்கூடி நின்று கைகொட்டிப் பாடி ஆடுவதை 'கும்மி' என்றும் ஆண்கள் அவ்வாறு ஆடுவதை 'ஒயில் கும்மி' என்றும் அழைப்பர்.

ஆண்கள் தலையில் தலைபாகை கட்டிக்கொண்டும் கையில் வண்ணவண்ண துணிகளை ஏந்திக்கொண்டும், கால்களில் சதங்கைகளை அணிந்துகொண்டும் வட்டவடிவில் துள்ளிக்குதித்து கைகொட்டி ஆடிவருவர்.

பொதுவாக இந்தவகை ஒயில் கும்பிகள், கதைப் பாடல்களையோ, வரலாற்றையோ சொல்வதை அடிப்படையாகக் கொண்டிருக்கும். தமிழகத்தின் திருநெல்வேலிப் பகுதியில், வீரபாண்டிய கட்டப் பொம்மன் கதையும், மதுரையில் மதுரை வீரன் கதையும் கோயம்புத்தூரின் 'வள்ளி திருமணமும்' இவ்வாறு ஒயில் கும்மி வடிவத்தில் கூத்தாக ஆடப்படுகின்றது.

இவற்றை விட அரிச்சந்திரன் கும்மி, மருத்துவக் கும்மி, அகஸ்தியர் வைத்தியக் கும்மி, நளன் கும்மி, என்று பல கும்மி வகைகள் முன்பு தமிழகத்தில் வழக்கத்தில் இருந்ததாக அறிய முடிகிறது. இவற்றைவிட 'பெண்கள் விடுதலைக் கும்மி' என்ற ஒரு கும்மிப்பாட்டு முறையில் வழக்கில் இருப்பதாக அறிய முடிகிறது.

**இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் சமயங்களுக்கிடையில் ஏற்பட்ட போட்டியில் தங்கள், தங்கள் மதக் கருத்துக்களை மக்கள் மத்தியில் பிரச்சாரப் படுத்துவதற்காக இந்தக் கும்மிக் கூத்தை பயன்படுத்த ஆரம்பித்தனர். இது நாளடைவில் இலக்கியத்தில் கும்மிப் பாட்டு ஒரு தனிப்பிரிவாக வளர்வதற்கு வித்திட்டது.**

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் சமயங்களுக்கிடையில் ஏற்பட்ட போட்டியில் தங்கள், தங்கள் மதக் கருத்துக்களை மக்கள் மத்தியில் பிரச்சாரப் படுத்துவதற்காக இந்தக் கும்மிக் கூத்தை பயன்படுத்த ஆரம்பித்தனர். இது நாளடைவில் இலக்கியத்தில் கும்மிப் பாட்டு ஒரு தனிப்பிரிவாக வளர்வதற்கு வித்திட்டது.

கிருஸ்தவர்கள் அர்ச். அன்னம்மாள் திருப்பதியின் பிரசங்க வியாக்கியானக் கும்மி, கோப்பிக்கிருசிக் கும்மி, ஞானக் கும்மி என்றும், இஸ்லாமியர்கள் நாகூர் மீரா சாகிபு அலங்காரக் கும்மி ஞானப் பெண் கும்மி, சாத்திரக்கும்மி என்றும் உருவாக்கிக்கொண்டனர்.

சினிமா மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகளின் வருகை கிராமியக் கலாச்சாரத்தை சீரழிக்க தொடங்கியதால் தற்போது கும்மியின் முக்கியத்துவம் குறைந்துவிட்டது. தமிழீழத்தில் இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் 'இந்து ஆரிய விசுவாசிகள்' தமிழர் மரபுக் கலைகள் கோவில்களில் ஆடுவதற்கு தடை விதித்ததால் கும்மி உட்பட பல்வேறு தமிழர் வாழ்வியல் கலைகள் உரிய முக்கியத்துவமின்றி வளர்ச்சிகுன்றி அழிவு நிலைக்குச்சென்றுவிட்டன.

இங்கே புகலிடத்தில் கும்மியானது எங்காவது ஒரு மேடையில் காட்சிக்காக ஆடும் ஆட்டமாகவே இருக்கிறது. அது அதனுடைய சமூகப் பயன்பாட்டை தமிழர் வாழ்வியலோடு ஒன்றிய அதன் கலாச்சார முக்கியத்தை இழந்துவிட்டது.

தமிழகத்திலும் கூட, ஆடலும் பாடலும் என்ற அதன் கூட்டுச் செயற்பாடு ..... கும்மிப் பாட்டு என்ற அளவில் அதாவது பாட்டோடு மட்டும் நின்றுவிடும் நிலை உருவாகியுள்ளது.

- சிலேகா

# நாற்று

இளம் ஆக்கங்கள்

## சொந்த வீடு....

தமிழ் தேசத்துக்குயில் – நான்
தமிழ் தேசத்துக் குயில்
எனக்கும் உண்டு துயர்
புயலடித்த வாழ்வினிலே
விடிவுக்காய் காத்திருக்கும் – நானோர்
தமிழ் தேசத்துக் குயில்
சுதந்திரக் காற்றினைச் சுவாசித்து
உதிப்பான் நாளை உதயசூரியன்
கம்பீரமாய் உயரும் கொடிமரம்
பறக்கும் அதிலே தமிழ்ச்சின்னம்
இறக்கை இரண்டும் ஓயும்வரை
சிறகடித்து வானில் பறப்பேன்.
உயர்ந்திருக்கும் கொடிக்கம்பத்தின்
உச்சியிலே நானிருந்து
உரக்கக் கத்திப் பாடுவேன்.
சுதந்திரமாய்த் தமிழ்ப்பாட்டு
மூச்சிரைக்கப் பாடுவேன் நான்
சுதந்திரக் காற்றை சுவாசித்து
தத்திவரும் பிஞ்சுகட்கு – வீட்டு
முத்தத்திலே நானும் சென்று
சொல்லிக் கொடுப்பேன் தமிழ்ப்பாட்டு
பாடிடுவர் அதைக்கேட்டு
பிரிந்து சென்ற உறவு எல்லாம்
மீண்டும் வந்து சேர்ந்திடுவார்
உரக்க நானும் கூறிடுவேன்.
எமக்குத் துன்பமினி இல்லையென்று
கார்மேகம் இனித்தூவும்
நீர் நிலைகள் வழிந்தோடும்
வயல் வெளிகள் விளைந்திருக்கும்
வாழ்வினிலும் வளம்சேரும்
தமிழ்தேசம் தலை நிமிரும்
அலைகடலும் தாலாட்டும்
வலைகளிலே மீன் விளையும்
பனைமரங்கள் அசைந்தாடும்
தென்னையோடு தென்றல் பேசும்
பச்சைக்கிளி தமிழ்பேசும்
கானமயில் பரதமாடும்
வானரங்கள் கிளைதாவும்
சுதந்திரத்தமிழ் ஈழத்திலே
பச்சைத் தடி நானெடுத்தால்
இயற்கை வளம் அழியுமென்று
பட்ட தடி நான் பொறுக்கி
வெட்டவெளி மரத்தினிலே
கட்டிடுவேன் நானொரு வீடு (கூடு)
சுதந்திரமாய் வாழ்வதற்கு
கூடு கட்டத் தெரிந்திடாத
குயிலினங்கள் எனச்சொல்லும்
காகக்கூட்டம் வாய் பொத்தும்
சுதந்திரமாய் என் கூட்டில்
முட்டையிட்டுக் குஞ்சுவைப்பேன்
வெட்டவெளி மரத்தினிலே – என்
குஞ்சுகளை விட்டுச் செல்வேன் – ஏனெனில்
சுதந்திரத் தமிழ் வான்வெளியில்
கொத்தி என் குஞ்சைத்தின்ன
வான் கழுகுகள் இருந்திடாதே!
சொந்த வீடு நானும் கட்டி
சுதந்திரமாய் வாழும் நாளை
ஆவலுடன் காத்திருக்கும் – நானோர்
தமிழ் தேசத்துக் குயில்

- பொன். சிவா


# ரவி வாகனசேவை

உங்கள் அனைத்து
வாகனத் தேவைகளுக்கும்
நீங்கள்
தொடர்புகொள்ள
வேண்டியது



தொலைபேசி:
0148765190 அல்லது
0607622689

Pub


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(18-ம் பக்கத் தொடர்ச்சி)

# கோடிச் சேலை

பெற முடிந்தது. முன்பெல்லாம் யாராவது செத்துவிட்டால் பெட்டியும் குழிவெட்டு செலவும் தோட்டக் கணக்குச் செலவைப் பொறுத்ததாகும்.

புதிய நிர்வாகத்தில் அதைப் பற்றியெல்லாம் பேசவேகூடாது.


'சாமி கெழவி செத்துப் போயிட்டதுங்க. புதைக்கிறதுக்கு ஒரு நாதியுமில்ல. அதுதான் சல்லி சேத்து சவத்த அடக்கம் பண்ணப் போரோம். அநாத பொணத்துக்கு உதவிசெய்யுங்க'

லயம் தவறாமல் இருவரும் கிளம்பி விட்டார்கள். நிதி வசூலிக்க!

நாலு டிவிஷனிலுமுள்ள வீடுகள், உத்தியோகஸ்தர் பங்களாக்கள், தோட்டத்துக்கருகாமையிலுள்ள கடைகள் என்று கால் கடுக்க நடந்ததற்குப் பலனில்லாமல் போகவில்லை. கணிசமான அளவு காசு சேர்த்து முடிக்கும்போது மாலையாகிவிட்டது.

சில சில்லறைச் சாமான்களை வாங்கிக்கொண்டே கையோடு கணக்கப்பிள்ளை ஐயா வீட்டில் 'பெற்றோமெக்ஸ்' லைட்டைப் பற்ற வைத்துக்கொண்டு திரும்ப நன்றாக இரட்டிவிட்டது.

இருட்டில் தனிமையில் கிடந்த பிணத்தை ஒழுங்கு படுத்திக்கொண்டிருக்கையில் பத்து பன்னிரண்டுபேர் வரை வந்து சேர்ந்து விட்டார்கள்.



நான்கைந்து பெண்கள் ஒரு 'பாட்டம்' ஒப்பாரி வைத்து அழுது தீர்த்தார்கள். ஒரு புறம் சீட்டாட்டம் தொடங்கியது. காய்ச்சி எடுத்த தப்புகளை நடேசனும் கந்தனும் அடிக்க ஆரம்பிக்க 'கேதவீடு' களை கட்டி விட்டது.

ஒரு மண்டியெண்ணைப் பந்தத்தைப் போல குபு குபு என சிறிது நேரம் எரிவதும் பின்னர் சிறிது பிரகாசம் தருவதுமாக 'பெற்றோ மெக்ஸ்' 'சோ' வென இரைந்து கொண்டிருந்தது.

நன்றாக விடிந்தவுடன் கந்தனையும் கூட்டிக்கொண்டு நடேசன் கடைக்குச் சென்றான். இரண்டுபேருக்கும் நல்ல பசி. பசி தீருமட்டும் சாப்பிட்டு, ஆளுக்கொரு பீடியும் பற்ற வைத்துக்கொண்டு, வெற்றிலை, பாக்கு, புகையிலை, மெழுகுவர்த்தியெல்லாம் வாங்கிய பின்னர் நடேசன் சொன்னான்.

'ஒரு கோடிச் சீலை போடாம பொணத்தைப் பொதைக்கக்கூடாது. முப்பது முப்பத்தைஞ்சுக்குள்ள ஒரு சீல எடுப்பம்.'

'சீல வேணாம் சாத்திரப்புக்கொரு யார் வெள்ளத்துணி போட்டா போதும்' என்றான் கந்தன்.

'சீச்சி....ஒரு சீல கட்டாயம் வாங்கி போடவே வேணும். பொணம் வெறும் முண்ட கட்டையா கெடக்கு. சல்லிதான் இருக்கே 'வாங்குவம்' என்றான் நடேசன்.

இருக்கிற சல்லியில சீல எடுத்திட்டா மத்த செலவுக்கு என்ன செய்யிறது' என்றான் கந்தன்.'

'மத்த செலவுக்கு கட்டமொய், அது இதுன்னு கெடைக்கும்தானே அதுல பாத்துக்குவம்.' கந்தனின் பதிலை எதிர் பார்க்காமலேயே சிகப்பு நிறத்தில் கறுப்பு கரை போட்ட சேலையை வாங்கிக் கொண்டான் நடேசன்.

பாடையில் வைத்து தூக்கிக்கொண்டு போகும்போது பிணம் சிகப்புச் சேலையால் மூடப்பட்டிருந்தது. மொத்தமாக ஆறு ஏழு பேர்தான் அந்த ஊர்வலத்தில் போனார்கள். அவர்களே பிணத்தையும் சுமந்து சென்றார்கள். கந்தன் பிணத்துக்கு முன்னால் தப்படித்தபடி ஆடிப்பாடி சென்றான். அவன் 'கண்மண்' தெரியாதபடி குடித்திருந்தான்.

'நான்தான் கொள்ளி வைப்பேன்; நான்தான் கொடம் ஒடப்பேன்'என்ற உரிமைப் பிரச்சினையே அங்கு இல்லை.

குளிமேட்டில் பிணத்தை வைத்தவுடன் எல்லாக் காரியங்களையும் நடேசனே செய்து முடித்தான்.

நடேசனின் பேரன் பழைய சின்ன சட்டியொன்றைக்கொண்டு வந்திருந்தான். சட்டியில் கொஞ்சம் சோறும் பீட்ரூட் கொழும்புக்கறியும் இருந்தது.

'இது எதுக்கு' என்றான் கந்தன்.

'போகுற உசிரு ஆசா பாசத்தோடு போகக்கூடாது. குழி பொணத்துக்கு கேட்டதெல்லாம் குடுக்கணும். மூணு நாளா கெழவி சோறு மேலேயே ஏக்கம் புடிச்சி செத்திருக்கிறா' என்றான் நடேசன்.

'சரி, சரி நீ சொன்னதெல்லாம் சரிதான்,' கண்கள் கிறங்க தள்ளாடினான் கந்தன்.

பிணத்தின் இரண்டு கைகளிலும், சோற்றையும், கறியையும் வைத்தான் நடேசன்.

'நேரமாகுது சுறுக்கா வேலைய முடிங்க' என்றபடி சற்று அப்பால் இருக்கும் றபர் மரத்தடியில் கையால் தலையைத் தாங்கிப் பிடித்தவாறு உட்கார்த்துகொண்டான் கந்தன்.

பிணத்தை புதைத்துவிட்டு செல்லும் பொழுது கந்தனை கைத்தாங்கலாக கூட்டிக்கொண்டு போக வேண்டியிருந்தது.

வழி நெடுக வாய் புலம்பிக்கொண்டு வந்தான் கந்தன்.

மறுநாள் காலை, இவ்வளவு நாளும் ஒழுங்காக வேலைக்கு வந்தவர்களையும், இது நாள் வரை வராமலிருந்து அன்று வந்து சேர்ந்தவர்களையும்கொண்டு பிரட்டுக்களம் நிரம்பி வழிந்தது.

அழுக்கும் கந்தலுமாக நின்ற அக் கூட்டத்தினிடையே பிதிய கறுப்புப் கரைபோட்ட சிகப்புச் சேலையுடன் பளிச்சென்று நின்றாள் நடேசனின் மகள் அஞ்சலை.

நன்றி:
ஒரு கூடைக் கொழுந்து

# கால்வாயின் நீர்த்தேக்கம் முற்றாக வற்றியது

1978-ம் ஆண்டு கோடைகாலம், ஐக்கிய இராச்சியத்தில் நொட்டிங்கம் சயர் பிர தேசத்தின் றெற்போல்ட் என்னும் இடத்தில் அருகே உள்ள செஸ்ரர் பீல்ட் கால்வாயை (Chester Field Canal) துப்பரவு செய்வதற்காக ஜக் றொத்வெல் என்ற தொழில்நுட்ப மேலாளர் (Foreman) தனது தொழிலாளர்களுடன் சென்றார். வேலை ஆரம்பிக்கப்பட்டது. சுத்திகரிப்பு இயந்திரமொன்றை உபயோகித்து கால்வாயை சுத்தம் செய்தபோது, துருப் பிடித்த சைக்கில்களும், குளிர்சாதனப் பெட்டிகளும் அழுக்குகளும் வெளியகற்றப்பட்டன.

இவ்வாறு மிகவும் கஷ்டப்பட்டு அழுக்குப் பொருட்களை வெளியகற்றியபோது கால்வாயின் அடிப்பாகத்தில் பெரிய இரும்புச் சங்கிலியால் பொருத்தப் பட்டு புதையுண்டிருந்த மரக்குற்றி சிறிதாக அசைந்து காணப்பட்டது. பிடித்து இழுத்தபோதும் அசையாது இருந்த காரணத்தினால், அவர்கள் அம்முயற்சியைக் கைவிட்டுவிட்டு அருகில் உள்ள தேநீர்க் கடையில் தேநீர் அருந்தச் சென்று விட்டனர். அதே நேரத்தில் அங்கு ரோந்து சென்றுகொண்டிருந்த பொலிஸ் உத்தியோகஸ்தர் அந்தக் கால்வாயின் நீர்ச் சுழியையும், நீரின் மட்டம் குறைந்துகொண்டு போவதையும் கண்டு, அங்கு வேலை செய்தவர்களைக் கண்டுபிடித்து, எல்லோரையும் வேகமாக கூட்டிச் சென்ற போதிலும் அந்தக் கால்வாயின் நீர் முற்றாக வற்றி விட்டது. 1 1/2 மைல் தூரமுள்ள கால்வாய் நீர் வற்றியதைக் கண்டு ஆச்சரியமடைந்த ஜக் குழுவினர் அதன் காரணத்தைக் கண்டுபிடிக்க முயன்றனர்.

அந்த வாய்க்காலின் கீழ் நீர் ஓடும் குழாய் (Drainage) இருந்த காரணத்தினால் இந்த கால்வாயின் நீர் கீழே போகாதிருக்க 200 வருடங்கட்கு முன்பு இந்தக் கால்வாய் கட்டப் பட்டு ஜேம்ஸ் பிறின்லி (James Brindley) என்பவரினால் ஒரு ஆப்பு (Plug) அந்தப் பெரிய மரக் குற்றி சங்கிலியில் பொருத்தப்பட்டு அங்கு வைக்கப்பட்டிருந்தது என்பதை அவர்களால் உணர முடிந்தது. மில்லியன் கலன் கணக்கான நீர் தேங்கியிருந்த கால்வாயின் நீர் அருகிலிருந்த ஐடில் (Idle) நதியில் ஓடிக் கலந்தது. கால்வாய் முற்றாக வற்றிவிட்டது. 200 வருடங்கட்கு முன்பு பெரு முயற்சியுடன் கட்டப்பட்ட கால்வாய் நீர் தேக்கம், ஜாக் றொத்வெல் குழுவினரின் தவறு காரணமாக முற்றாக வற்றி சேதத்தை உண்டாக்கியது.

**- கவிதா -**

**வரலாற்றில் பதிவாகிய அழிவுகளும் தவறுகளும்**


## பாரிஸ் ராதா கிருஸ்ணா ஆலயம்

31, Rue du Dr Jean Vaquier - Noisy Le Grand. RER-A

கிருஸ்ண ஜெயந்திவிழா ஆவணி (Août) 15-ம் திகதி சனிக்கிழமை

### நிகழ்ச்சிகள்

மாலை 5 மணி - பஜனையும் கிருஸ்ணா விரிவுரையும்
5.30 மணி - அர்ச்சனை
6.30 மணி - பூஜை
7.30 மணி - அன்பளிப்பு
8.00 மணி - அபிஷேகம்
9.30 மணி - பரதநாட்டியம்
(பிந்துஜா - ஜெயபாலன், பிரியதரிசினி ஆனந்தநாகநாதன், ஜெனனி (நுவசி லு கிரோன் தமிழ்ச்சோலை)
10 மணி- மகாபாரதம், இராமாயணம், பகவத்கீதை எழுத்துப் போட்டியில் வென்றவர்களுக்கான பரிசில் வழங்கல்.

### பரிசில்கள் பெறுபவர்கள்

**ஆரம்பப் பிரிவு**

1-ம் பரிசு சிவநேசன். சிதாரன்
2-ம் பரிசு செல்வகுமார் தனேசன்
3-ம் பரிசு மகேந்திரராஜா ஜீவிதன்
ஆறுதல் பரிசு- ஜெகதீஸ்வரன் சுந்தரலோகேஸ்வரன்
தனுஜா அருணகிரிநாதன்

**மத்தியபிரிவு**

1-ம் பரிசு கஜேந்தினி பீதாம்பரம்
2-ம் பரிசு எஸ். சிவசந்திரன்
3-ம் பரிசு வித்தியா சந்திரகாசன்
ஆறுதல் பரிசு- பரமநாயகம் துளசித்தாமன்
ரட்ணம் நிக்கொலஸ்

**மேற்பிரிவு**

1-ம் பரிசு சி. சிவகுமார்
2-ம் பரிசு வி. நளாயினி
3-ம் பரிசு லோ. சோமேஸ்வரி
ஆறுதல் பரிசு- ச. புஸ்பலதா
இ. யோகேஸ்வரி

**பிரெஞ்சுமொழி**

1-ம் பரிசு ஸ்ரீகாந்தன் லவன்
2-ம் பரிசு காயத்ரி மாசிலாமணி
3-ம் பரிசு பிரியதரிசினி தெய்வகுமார்
ஆறுதல் பரிசு- ஜெகநாதன் ஜெனன்
ஆரணி ஆனந்தராஜ்

*ஆரம்பப் பிரிவில் பங்குபற்றிய சிறுவர்கள் யாபேருக்கும் தகுதிக்கு ஏற்ப ஆறுதல் பரிசில்களும் ஊக்குவிப்புப் பரிசில்களும் காத்திருக்கின்றன.*

**பரிசு பெறுபவர்களுக்குரிய பரிசுப் பொருட்களை தமிழாலயம், தங்கமாளிகை, கோல்டன் ஸ்ரார், வனஸ்பதி ஸ்தாபன முதல்வர்கள் தந்து உதவுகிறார்கள்.**

**கிருஸ்ண தங்கப்பதக்க வடிவமைப்பு கஜலட்சுமி நகைமாளிகை**

11 மணி - கிருஸ்ணாவைப்பற்றியவிரிவுரையும், கேள்வி பதில்களும்
12 மணி - நடுஜாமப்பூஜை
1 மணி - பிரசாதம் வழங்கல் (108 வகை)

மாலை 6 மணிக்கு முதல் இரவு 12 மணிவரை தமிழ் மக்களால் பிரசாதம் வழங்கப்படும். கிருஸ்ணருக்கு அர்ச்சனை செய்யவிரும்பும் பக்தர்கள் மாலை 7 மணிக்கு அர்ச்சனை செய்துகொள்ளலாம். (தினம் நித்திய அர்ச்சனை அதிகாலை 4 மணிக்கு நடைபெறுகிறது. நித்திய அர்ச்சனை செய்யவிரும்புபவர்கள் தங்கள் பெயர் நட்சத்திரங்களை ஆலயத்தில் கொடுத்தால் கிருஸ்ணருடைய பாதங்களில் வைத்து தினம் அர்ச்சனை செய்யப்படும். உங்களுடைய பிறந்த நாளுக்கும் விஷேச அர்ச்சனை செய்யப்படும். தினம் அதிகாலை 4 மணிக்கு அர்ச்சனை செய்வதால் உங்களுக்கு அதிக பலன்கிட்டும்.

**மேலும் அதிக விபரங்களுக்கு:** Sundar. Gopal

**Temple Radma Krisna**

*31 Rue Du Dr Jean Vaquier, 93160 Noisy le Grand. RER -A*

*Tel: 01 43042766 / 01 43043263*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழீழ விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக்கழகம் (பிரித்தானியா)

வழங்கும்

# எழுச்சி கானங்கள் 98




விடுதலை உணர்வுகளை ஒன்றிணைக்கும்

உன்னத இசை நிகழ்ச்சி

**22.08.98 சனிக்கிழமை மாலை 6.30 மணி**

**Walthamstow Assembly Hall**
**Froest Road, Walthamstow,**
**London E 17**
**Nearest Tube Station: Walthamstow Central**

**நுழைவுச்சீட்டு**

தனிநபர்: £ 7

குடும்பம்: £ 20 (4 இருக்கைகள்)

வாகன வசதிகள் பற்றிய விபரம் எமது செய்திச்சேவையில் (0171 403 5055) அறியத்தரப்படும்

மேலதிக தொடர்புகட்கு:

0171 4034554, 0956 329660, 0411 765801, 0956 827174

Pub: Gra

பிரித்தானியாவில் ஆரம்பமாகிவிட்டது

# GNANAM Telecom Centers




| | |
|---|---|
| *சிறீலங்கா | - 1min - 0.35p |
| *இந்தியா | - 1min - 0.30p |
| கனடா | - 1min - 0.05p |
| அமெரிக்கா | - 1min - 0.05p |
| ஜேர்மனி | - 1min - 6p |
| பிரான்ஸ் | - 1min - 0.06p |

| | |
|---|---|
| லண்டன் Mobile | - 1min- 0.15p |
| லண்டன் National | - 1min- 0.03p |
| அவுஸ்திரேலியா | - 1min- 0.08p |
| சிங்கப்பூர் | - 1min- 0.20p |
| சுவிற்சர்லாந்து | - 1min- 0.08p |

வர்த்தகர்களுக்கு விசேட கழிவு உண்டு. கீழ்காணும் முகவரியில் தொடர்புகொள்ளவும்

# GNANAM Telecom Centers

180 High Street North,
East Ham, London E6, U.K.
Tel: 0181-4708844 Fax: 0181-4708777

பாரிசில் மக்களின் நம்பிக்கையைப் பெற்ற ஞானம் தொலைபேசி அட்டைகளை இப்பொழுது லண்டனில் சகல வணிக நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

* இரவு 6 மணி முதல் காலை 7 மணி வரை

Pub

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவிஸ் பேர்னில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டி

விளையாட்டுப் போட்டி உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு கல்விச் சேவையின் ஆதரவில் தமிழ் வித்தியாலயங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி 04.07.98 பேர்னில் நடைபெற்றது. விடுதலைக்காக தம்மை அர்ப்பணித்த மாவீரர், பொதுமக்களுக்கான அமைதி வணக்கத்தை தொடர்ந்து உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு கல்விச்சேவையின் பிரதிநிதி சிற்றுரை ஒன்றை ஆற்றினார். விளையாட்டுப் போட்டிகளால் எதைச் சாதிக்க முடிகிறது; ஏன் நடாத்தப்படுகிறது என்றதோடு அதில் ஆசிரியர்கள், மாணவர்களின் பங்களிப்பு எவ்வகையில் முக்கியமானது சம்பந்தமாகவே அவரின் உரை காணப்பட்டது. அவரின் உரையை அடுத்து பேர்ண் மாநில தமிழ்வித்தியாலய மாணவ மாணவிகள் பங்கெடுத்துக்கொண்ட அணிவகுப்பு மரியாதையும் இடம்பெற்றது. அவ் அணிவகுப்பு மரியாதையை கல்விச் சேவை பிரதிநிதியும், சுவிஸ் ஒருங்கிணைப்பாளரும் ஏற்றுக் கொண்டனர். அதனைத் தொடர்ந்து சுவட்டு மைதான நிகழ்ச்சிகள் ஆரம்பமானது. மிகவும் ஆர்வத்துடன் போட்டிகளில் மாணவ மாணவிகள் கலந்துகொண்டதோடு, பயிற்றுவித்த ஆசிரியர்களும் மிகவும் உற்சாகமூட்டி மாணவ மாணவிகளை தட்டிக் கொடுத்தனர்.

போதிய கால அவகாசம் இல்லாதபோதிலும் 100-க்கு மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்து கொண்டனர். இவ் விளையாட்டுப் போட்டியின் இறுதியில் ஆசிரியர்கள், பார்வையாளர்களுக்கு இடையிலான நடைபெற்ற போட்டிகள்; மிகவும் விறுவிறுப்பாகவும் சுவாரசியமாகவும் அமைந்திருந்தன. பின்னர் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினரால் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு போட்டிகள் யாவும் இனிதே நிறைவை எட்டின.

# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் துயர் துடைப்பு மாதம்

**(நிதி சேகரிப்புக் காலம்: ஆவணி 1 முதல் 31 வரை)**

**அன்பான நெதர்லாந்து வாழ் தமிழீழ மக்களே!**

சிறீலங்கா அரசின் தமிழின அழிப்பின் உச்சக்கட்டமான இக் கால கட்டத்தில் எம் உறவுகள் சொந்த மண்ணிலேயே இடம் பெயர்ந்து காடுகளில் மரங்களின் கீழும் அகதி முகாம்களிலும் உண்ண உணவின்றி உடுக்க உடையின்றி பலவித தொற்று நோய்களின் தாக்கத்தின் மத்தியிலும் வாழ்கின்றார்கள். சிறீலங்கா இராணுவம் மேலும் மேலும் அவர்கள் மீது அகோரமான தாக்குதல்களை நடாத்தி அவர்களை மேலும் இடம் பெயர வைத்துள்ளது.

இடம் பெயர்ந்து அல்லலுறும் மக்களின் துயர் துடைக்க புலம் பெயர் நாடுகளில் வாழும் தமிழீழ மக்களாகிய உங்களிடம் அவர்களின் அத்தியாவசிய தேவைகளையேனும் பூர்த்தி செய்ய தங்களால் இயன்ற உதவியை மனமுவந்து வழங்குமாறு கேட்கிறோம்.

*எமது உறவுகளின் துயர் துடைக்க எழுந்திடுவீர்.*

*தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் இணைந்திடுவீர்.*

போரினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த தமிழ் மக்களுக்கான புனர்வாழ்வுக்காக தாயகத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் 100 மில்லியன் பெறுமதியான துரித புனர்வாழ்வு அபிவிருத்தித் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தில் இடம் பெயர்ந்தவர்கள், வறுமை நிலைக்கு உட்பட்டவர்கள், பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள், முதியவர்கள், நோயாளிகள் எனப் பலரும் பயனடைவர்.

இவ் அபிவிருத்தித் திட்டமானது கல்வி, சுகாதாரம், வீடமைப்பு, விவசாயம், தொழில், புனர்வாழ்வு, பொதுவிடயம் என ஏழு துறைகளாகச் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்திற்கு நிதி சேகரிப்பதற்காக தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உலகெங்குமுள்ள புனர்வாழ்வுக்கழகத்தின் கிளைகளிடம் உதவி கோரியுள்ளது.

பல நூறு திட்டங்களுளடனும் சுமக்க முடியாத சுமையுடனும் உங்கள் உறவுகளின் நாளாந்த வாழ்விற்கு வழிகாட்ட வேண்டிய பாரிய பொறுப்பைச் சுமந்து தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உலகம் பூராவும் உங்கள் கதவுகளைத் தட்டுகின்றது.

## துயர் துடைப்போம்

கடந்த வருடம் நீங்கள் எம்முடன் பகிந்து கொண்ட சுமைகள் பல இலட்சம் தமிழ் மக்களை வன்னியிலும் வாகரையிலும் பாதுகாக்க உதவியது. இவ்வருடம் உங்கள் வருடாந்த உழைப்பின் ஒரு துளியை உணர்வுடன் வழங்குங்கள். அது எம் மழலைகளின் பசி போக்கும். முதியோரின் நோய் போக்கும். பாதிக்கப்பட்ட பெண்களுக்கு வழிகாட்ட உதவும்.

வாருங்கள்! ஒவ்வொரு தமிழனும் தன் வாழ்விடத்தில் சுயமாகப் பாதுகாப்பாக வாழும் நாட்கள் வரும் வரை அவர்களின் துயர் துடைப்புப் பாணியில் இணையுங்கள்.

**தமிழர் புனர்வாழ்வுக் கழகம் - நெதர்லாந்து**

வங்கி விபரம்: TRO 568705068 _ ABN AMRO, Heerhugowaard

தொடர்புகளுக்கு: சின்னத்துரை [கட்டியண்ணை] 072 5644442— இளவரசன் 0224 217181 — புலேந்திரன் 045 5322841.

# புகலிட நிகழ்வுகள்

## பரதநாட்டிய அரங்கேற்றம்

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஜேர்மன் பணியக கலை பண்பாட்டுக்கழக நடன ஆசிரியையும் டோட்முன்ட் பவித்திர கலாலயாவின் அதிபருமான செல்வி பவித்திரா செல்வகாந்தனின் மாணவியும், திருதிருமதி. நடேசன் தம்பதிகளின் புதல்வியுமான செல்வி. ஆன்வினோலினி நடேசனின் பரதநாட்டிய அரங்கேற்றமும் முன்ஸ்ரர் நகரில் நடைபெறவுள்ளது.

15.08.98 சனியன்று மாலை 5 மணிக்கு Schiller _ Gymnasium மண்டபத்தில் அரங்கேற்றம் நடைபெறும்.

செல்வி. ஆன்வினோலினி நடேசன் முன்ஸ்ரர் தமிழாலய மாணவியாவார்.








எங்கும் கிடைக்கிறது




Marketed & Distributed by
Ayngaran Limited
172, Woodmansterne Road,
London SW16 5TZ,
United Kingdom.
Tel: 0181 7645200
Fax: 0181 764 5255
E-mail:
bhasky@aol.com




போலி CD க்களை வாங்காதீர்கள். Bhasky முத்திரைகளை கவனித்து வாங்குங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜேர்மனியில் மாவீரர் வெற்றிக்கிண்ண இறுதிப் போட்டிகள்

ஜேர்மன் தமிழ்மாணவர் அமைப்பினர் ஆறாவது வருடமாக நடாத்தும் மாவீரர் வெற்றிக்கிண்ண இறுதிப்போட்டிகள் டோட்முன்ட் சிவந்தமண் விளையாட்டு மைதானத்தில் சுமார் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் மத்தியில் நடைபெற்றது.

தமிழீழத் தேசியக் கொடியான புலிக்கொடி வானளாவப் பறக்க 25.07.98 சனிக்கிழமை காலை எட்டு மணிக்சே மாவீரர் வெற்றிக்கிண்ணப் போட்டிகள் ஆரம்பமாகின. முதலில் கொடியேற்றம் ஆரம்பமாகியது. தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ விடுதலைப் புலிகளின் ஜேர்மனிப் பணியக இணைப்பாளர் ஏற்றிவைத்தார். தமிழ் மாணவர் அமைப்பின் கொடியை திரு.வண்ணனும், உலகத்தமிழர் இயக்கக் கொடியை திரு.கி. நாகலிங்கமும், ஜேர்மன் நாட்டின் தேசியக் கொடியை தமிழர் புனர்வாழ்வுக் கழக ஜேர்மன் கிளைப் பொறுப்பாளர் திரு.இ. ஆனந்தராஜாவும் ஏற்றி வைத்தனர்.

அமைதி வணக்கத்தையடுத்து அணிநடைப் பயிற்சி இடம் பெற்றது. ஏழு அணிகளாக தமிழாலய மாணவர்கள் இதில் கலந்து கொண்டனர். கிறிபில்ட் தமிழாலயம், மேயபுர்ஸ் தமிழாலயம், வியூப்பற்றால் தமிழாலயம், டியூஸ்பேர்க், சோலிங்கன் ஆகிய தமிழாலயங்கள் இதில் கலந்து கொண்டன.

ஜேர்மனியில் நான்கு மாநிலங்களிலும் இடம்பெற்ற தெரிவுப்போட்டிகளில் தெரிவான போட்டியாளர்களின் போட்டிகளுடன், தடைதாண்டி ஓட்டம், சாக்கு ஓட்டம் கொடிகொடுத்து ஓட்டம், அஞ்சலோட்டம், 1500 மீ.ஓட்டம் குண்டெறிதல் ஆகியவையும் இடம்பெற்றன. மெய்வல்லுனர் போட்டிகள் மதியத்துடன் முடிவடைந்தன.

இதன் பின் 12 வயதிற்கு மேற்பட்ட தமிழாலய மாணவருக்கான உதைபந்தாட்ட இறுதிப் போட்டி நடைபெற்றது. இதில் சுட்காட் தமிழாலயம் 1.0 கோல் போட்டு டியூஸ்பேர்க் தமிழாலயத்தை வென்றது.

ஒப்பனையும் பாவனையும் போட்டியில் மேயபுஷ் தமிழாலயமும், கிறிபில்ட் தமிழாலயமும் கலந்து கொண்டன. இதில் கிறிபில்ட் தமிழாலயம் முதலிடத்தையும் மேயபுஷ் தமிழாலயம் இரண்டாமிடத்தையும் பெற்றன.

பன்னிரண்டு வயதிற்கு உட்பட்ட தமிழாலய மாணவருக்கான நட்புரீதியிலான உதைபந்தாட்டப் போட்டியில் பிராங்பேர்ட் தமிழாலயமும், முன்ஸ்ரர் தமிழாலயமும் கலந்து கொண்டன. மாணவர்கள் பயிற்சி பெற்ற உதைபந்தாட்ட வீரர்களுக்கு நிகராக விளையாடினர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

சங்கீதக் கதிரைப்போட்டி பார்வையாளர்களைக் கவர்ந்த போட்டியாகும். இப் போட்டியில் தமிழ் மாணவர் அமைப்பின் பெண்கள் பிரிவும் தமிழாலய ஆசிரியைகளும் கலந்து கொண்டனர். விறுவிறுப்பாக நடந்த போட்டியில் தமிழ் மாணவர் அமைப்பின் பெண்கள் பிரிவினர் தோல்வியடைந்தனர். ஆசிரியைகளின் அணியில் பேர்லின் தமிழாலய ஆசிரியை திருமதி உத்தமபுத்திரன் வெற்றி பெற்றார்.

தமிழர் உதைபந்தாட்டக் கழகங்களுக் கிடையேயான இறுதிப்போட்டியில் முன்சன்ட் கிளட்பாக் தமிழர் விளையாட்டுக் கழகமும், எசன் தமிழர் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன. இதில் எசன் தமிழர் விளையாட்டுக் கழகம் 1-0 கோல்கள் பெற்று வெற்றியடைந்தது.

பார்வையாளர்கள் அனைவரையும் மிகவும் கவர்ந்த போட்டி கயிறிழுத்தல் போட்டி. இப் போட்டியில் தமிழ் மாணவர் அமைப்பு தமிழர் புனர்வாழ்வுக் கழகம், உலகத் தமிழர் இயக்கம், கலைபண்பாட்டுக் கழகம் ஆகியன கலந்து கொண்டன. மிகவும் சுறுசுறுப்பாக நடந்த இப் போட்டியில் கலை பண்பாட்டுக் கழகம் முதலிடத்தையும், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் இரண்டாமிடத்தையும், தமிழ் மாணவர் அமைப்பு மூன்றாமிடத்தையும் பெற்றன. பரிசளிப்பு வைபவத்தையடுத்து கொடி இறக்கத்துடன் மாவீரர் வெற்றிக் கிண்ண விளையாட்டுப் போட்டி இனிதே முடிவடைந்தன.

# வூபெற்றால் தமிழாலயம் முதலிடம்

ஜேர்மன் தமிழ் மாணவர் அமைப்பின் மாவீரர் வெற்றிக் கிண்ண மெய்வல்லுனர் போட்டிகளில் இம்முறையும் வூப்பற்றால் தமிழாலயம் பெரும் போட்டிக்கு மத்தியில் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டது. வூப்பற்றால் தமிழாலயம் நான்காவது ஆண்டாக மாவீரர் வெற்றிக்கிண்ண மெய்வல்லுனர்ப் போட்டியில் முதலிடத்தைப் பெற்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

25.07.98 சனியன்று ஜேர்மன் டோட்முன்ட் நகரில் சிவந்த மண்விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற மாவீரர் வெற்றிக்கிண்ண விளையாட்டுப் போட்டிகளில் புள்ளிகளின் அடிப்படையில் இரண்டாவது இடத்தை கிறிவால்ட் தமிழாலயம் பெற்றுக் கொண்டது.

இதேவேளையில் மூன்றாமிடத்தை மேயபுஷ் தமிழாலயம் பெற்றுக்கொண்டது. மெய்வல்லுனர் போட்டிகளில் கலந்து கொண்ட பல தமிழாலயங்களில், மேற்படி மூன்று தமிழாலயங்களும் புள்ளிகளின் அடிப்படையில் தெரிவாகியுள்ளன.

# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் சுவிசில் நடாத்திய நிகழ்ச்சிகள்

05.06.98 தொடக்கம் 05.07.98 வரையான ஒரு மாதமும் சுவிசின் பல பாகங்களிலும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நற்பணிக்காக பல துயர் துடைப்பு நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன.

05.06.98 இல் பேர்ன் மாநிலத்திலுள்ள எம்மன்தால் பகுதி மக்களின் முன்னேற்பாட்டில் ஒரு கலைமாலை நிகழ்வு இடம் பெற்றது. அதில் அப்பகுதியிலுள்ள தமிழ் பாடசாலைகளுக்கிடையில் பாட்டுப்போட்டி நடத்தப்பட்டது. தாயக உணர்வுகளை பாடல் வடிவில் தாங்கி வந்த இப்போட்டியில், புதிய ஆக்கங்கள் புத்துயிர் ஊட்டும் தமிழில் விடுதலையின் முக்கியத்துவத்தை சிறப்பாகவே எடுத்துக் காட்டியது. அத்தோடு எழுச்சிப் பாடல்களுக்கு நடனங்கள் அமைத்ததோடு எழுச்சியுரைகள், நாடகம் என பல்வேறுபட்ட வடிவில் தாயக நினைவுகளை சுமந்து வந்தன.

13.06.98 உம் 14.06.98 உம் சொலத்தூண் மாநிலத்தின் நலன்புரிச் சங்கத்தினர், துயர்துடைப்பு நிதிக்காக சுவிஸ்நாடு தழுவிய ரீதியில் பரதநாட்டியப் போட்டிகளையும் எழுச்சி நடனப் போட்டிகளையும் நடத்தினர். இதில் நாடு முழுவதிலிருந்தும் பல நடனக் கல்லூரிகளையும் சார்ந்த 300-க்கு மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டதே ஓர் பெரும் எழுச்சியாக காணப்பட்டது.

21.06.98 லுசேர்ன் மாநிலத்தில் துயர்துடைப்பு கலை மாலை நிகழ்வுகள் இடம்பெற்றன. தமிழீழத்தின் தலைசிறந்த பாடகரான சங்கீத பூஷணம் பொன். சுந்தரலிங்கம் அவர்களின் தமிழிசைக் கச்சேரியும், இந்திய கலைஞர்களான ராஜ், இராதா கிருஷ்ணன், வெங்கடேஸ் ஆகியோரின் கர்நாடக வாத்திய முழக்கமும் இடம் பெற்றது. அத்தோடு லுசேர்ன் மாநிலத்தைச் சேர்ந்த சிறார்களின் பல நிகழ்வுகளும் மேலும் விழாவுக்கு சிறப் பூட்டிக்கொண்டது. இந்த விழாவினை லுசேர்னிலுள்ள பல தமிழ் அமைப்புகள் இணைந்து நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

28.06.98 சுக் மாநிலத்தில் வர்த்தகஸ்தாபனங்கள் இணைந்து கலைமாலை நிகழ்வு ஒன்றினை நடத்தியிருந்தார்கள். 'பாட்டுக்குப் பாட்டு' 'அறிவிப்பாளருடன் ஒரு நிமிடம்' போன்ற நிகழ்வுகளுடன், எழுச்சி நடனங்களும் இடம் பெற்றிருந்ததோடு தமிழீழம் சென்று தன் அனுபவங்களைப் பகிர்ந்த ஓர் தமிழீழ பிரஜையின் சிற்றுரையும் இடம் பெற்றிருந்தது.

இதே தினமான 28.06.98 இல் சுவிஸ் நாடு தழுவிய ரீதியில் லுசேர்ன் நகரில் பூப்பந்தாட்ட சுற்றுப் போட்டியும் நடைபெற்றது. இதில் பல சுவிஸ் நாட்டு வீரர்களும் பங்குபற்றியிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

27.06.98 பேர்ன் மாநிலத்தில் கலைமாலை நிகழ்வு ஒன்று இடம்பெற்றது. இதில் பல தமிழீழ கருவை தாங்கிய புரட்சி உரைகளும், நடன அமைப்பில் விடுதலையைச் சித்தரிக்குத் எழுச்சி நடனங்களும் இடம் பெற்றிருந்தன.

துயர்துடைப்பு மாதத்தின் இறுதி நிகழ்வாக 05.07.98 பாசல் நகரில் துயர்துடைப்பு கலை மாலை இடம்பெற்றது. மீண்டும் பொன்.சுந்தரலிங்கம், இந்திய கலைஞர்கள் இணைவில் தமிழிசைக் கச்சேரி இடம்பெற்று பெரும் பாராட்டையும் பெற்றுக் கொண்டது. பாசல் - கலாநிவேதன் நடனாலய்ா மாணவர்கள் பல எழுச்சிப்பாடலுக்கு அபிநயம் அமைத்துக் காட்டியதோடு, சிறார்களின் மழலை மொழிப் பேச்சுக்களும் விழாவை மேலும் மெருகூட்டியது. இவ் விழாவை பாசல் சங்கமம் இசைக்குழுவும், கலாநிவேதன் நடனாலயாவும் ஒழுங்குபடுத்தி நடத்தியிருந்தார்கள்.

முடிவுற்ற துயர் துடைப்பு மாத நிகழ்வுகளில் மக்கள் தாமாகவே முன்வந்து தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நற்பணிக்காக பல வகைப்பட்ட பங்களிப்புகளில் ஈடுபட்டனர். குறிப்பாக 05.06.98 எம்மன்தால் கலை விழாவில் ஒருவர் தனது பெற்றோரின் ஆண்டு திவசம் செய்யும் நிதியாக 1000 சுவிஸ் பிராங்குகளை நற்பணிக்கு அளித்தார். இதேபோல் 28.06.98 சுக்கில் நடைபெற்ற போட்டி நிகழ்சிகளில் வெற்றிபெற்ற பலர் தமது பரிசில்களை நற்பணிக்காக ஒப்படைத்தனர். தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் ஒன்றிணைந்து பல தமிழ் அமைப்புக்கள், விளையாட்டுக் கழகங்கள், பாடசாலைகள், ஆன்மீக பணியகங்கள், ஆலயங்கள், கலைக்கூடங்கள் வர்த்தக நிறுவனங்கள், பொது அமைப்புகள் கூட்டாகச் செயற்பட்டு துயர்துடைப்பு மாதத்தினை மிகவும் பயனுள்ள முறையில் ஒழுங்கமைத்தார்கள்.

*- சங்கையூர் குமார்.*

# தமிழ்த்திறன் போட்டியில் சாதனை

ஜேர்மனி உலகத் தமிழர் இயக்க கல்விப் பணியினர் இவ் வருடம் நடாத்திய தமிழ்த்திறன் போட்டியில் 8-9 வயதுப் பிரிவில் செல்வி உமா விக்கினேஸ்வர மூர்த்தி சாதனை ஒன்றை ஏற்படுத்தியுள்ளார். இவர் பிராங்போட் தமிழாலய மாணவியாவார்.

பேச்சுப்போட்டி, திருக்குறள் மனனப்போட்டி, சொல்வதெழுதல், வாசிப்பு ஆகிய நான்கு போட்டிகளில் பங்கு பற்றி நான்கிலும் முதலிடங்களையே பெற்றுக் கொண்டார்.

முதலில் ஒவ்வொரு நகர தமிழாலயங்களிலும் பின்பு மாநில ரீதியாகவும் நடைபெற்று அதிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஜேர்மன் தழுவிய போட்டிகளில் பங்குபற்றினர்.

உமா விக்னேஸ்வர மூர்த்தி 8-9 வயதும் பிரிவால் தமிழாலயத்திலும், மாநில ரீதியாகவும் நடைபெற்ற நான்கு போட்டிகளிலும் முதலிடங்களைப் பெற்றதுடன் ஜேர்மன் தழுவிய இறுதிப் போட்டிகளிலும் முதலிடங்களைப் பெற்று சாதனை ஒன்றை ஏற்படுத்தியுள்ளார்.



உமா விக்னேஸ்வரமூர்த்தி பேச்சுப் போட்டிகளில் நான்கு வயது முதலே கலந்துகொண்டு தமிழீழ விடுதலைப் புலியின் ஜேர்மனி பணியக கலைபண்பாட்டுக் கழகத்தினால் 'பிஞ்சு மிளகாய்' என அழைக்கப்பட்டவர்.

உமா விக்னேஸ்வரமூர்த்திக்கு எமது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், தொடர்ந்தும் சாதனைகளை ஏற்படுத்துமாறு வாழ்த்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.


## ரவி வாகனசேவை

உங்கள் அனைத்து வாகனத் தேவைகளுக்கும் நீங்கள் தொடர்புகொள்ள வேண்டியது

தொலைபேசி: 0148765190 அல்லது 0607622689



Pub


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்து மாதத்திற்கு முந்திக் கொள்வதால்...

குறைப் பிரசவக் குழந்தைகள் என்பவர்களை கருத்தரித்து குழந்தை பிறப்பதற்கு உரிய காலமான 270 நாட்களுக்கு முன்னரே பிறக்கும் குழந்தைகளை மட்டுமின்றி 19 அங்குலத்திற்கும் குறைவான உயரமும், 2.7 கிலோவிற்கு குறைவான நிறையும், தலையின் சுற்றளவு, எலும்பின் தன்மை ஆகியவற்றைக் கொண்டு நிர்ணயம் செய்ய வேண்டும். இவர்களை வளர்ச்சி அடையாதவர்கள் என்றும் கூறலாம். வளர்ச்சி சார்ந்த சிக்கல்கள் ஏற்படுகின்றன. இத்தகைய குழந்தைகளின் வளர்ச்சி வேகம் மற்ற குழந்தைகள் வளர்ச்சி அளவோடு ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது மிகவும் வளர்ச்சி குறைவாக உள்ளது. இந்த பாதிப்பு நீடித்து காணப்படுகின்றது. பிறந்து முதல் ஆண்டு முடிவு வரை, பலவிதமான நோய்களுக்கு ஆளாகின்றன. எளிதில் இக் குழந்தைகளுக்கு வியாதிகள், தொற்றிக் கொள்கின்றன. ஒட்ஸிஜன் பற்றாக்குறை காரணமாக, பார்வை பாதிப்பு பெரும்பான்மையான குழந்தைகளுக்கு ஏற்படுகின்றது. உட்காருவது, நிற்பது, நடப்பது பேசுவது போன்ற இயக்க வளர்ச்சி சார்ந்தே செயல்களிலும் பின்தங்கிவிடுகின்றனர். மேலும் இக் குழந்தைகள் அசையும் பொருள்கள், நிறம், ஒலி, வெளிச்சம் போன்ற தூண்டல்களுக்கு அளவுக்கு அதிகமாகவே தூண்டப்பட்டு உணர்ச்சிவசப்படுகின்றனர்.



உடல் அமைப்பிலும் பாதிப்பு ஏற்பட்டு பக்கவாதத்திற்கு மாற வாய்ப்புகள் அதிகமாக உள்ளன. பேச்சுக்கோளாறும், திக்குதலும், உண்டாகின்றன. இவர்களின் நுண்ணறிவும் குறைவாக இருப்பதால் கல்வி கற்பதிலும் குறிப்பாக கணிதம் பயிலுவதிலும் பின்தங்கிவிடுகின்றனர், பதின்மர் பருவம் வரை சமூகவளர்ச்சியிலும், பலரோடு பழகுவதிலும் சிரமத்தைக் காண்கின்றனர். இவர்கள் எந்த ஒரு செயலையும் முரணாகவும் எதிர்மறையாகவும் செய்வது, எளிதில் எரிச்சல் அடைவது, முன்கோபம் கொள்வதுபோன்ற மன வெழுச்சிக் கோளாறுகளும் தோன்றுகின்றன. விரல் சூப்புவது, எளிதில் விபத்துக்குள்ளாவது, நரம்புத்தளர்ச்சி, அதிர்ச்சி தரும் செயல்களை செய்யத் துடிப்பது, சுயநலப்போக்கு ஆகியவையும், காணப்படுகின்றன. இவை பெரும்பாலும் இக் குழந்தைகளின் பெற்றோர்கள், அளவுக்கு அதிகமாக செல்லமும் பாதுகாப்பும் அரவணைப்பும் கொடுப்பதால், குழந்தைகளின் வளர்ச்சி பற்றிய கவலை அக்கறையின்மை காரணமாக பல குறைகள் ஏற்படுகின்றன.

பொதுவாக குறை பிரசவத்தில் பிறந்த குழந்தைகளின், பெற்றோர்கள், மிகுந்த பாசமுடன், அளவுக்கு அதிகமான அரவணைப்பில் அக்குழந்தைகளை வளர்க்கக்கூடாது. சாதாரணமாக சமுதாயத்தில் மற்ற குழந்தைகளை பெற்றோர்கள், எப்படி, வளர்க்கின்றனரோ அதே மாதிரியாக குழந்தையை வளர்த்தால், அக்குழந்தையின் வளர்ச்சியில் மாற்றம் ஏற்படும். இருப்பினும் சீரான பராமரிப்பும், சிந்தனையைத், தூண்டும் சூழ்நிலை ஆகியவற்றின் மூலம் பெரும்பாலான சிக்கல்களில் இருந்து இக்குழந்தைகளை காப்பாற்றி, நல்வழிப்படுத்தலாம்.

# மனநோய்க்கு திருமணம் மருந்தாகுமா?

திருமணம் என்பது இருவரது அன்பிற்கு அடையாளம். மன நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு திருமணம் செய்து வைத்தால் சரியாகிவிடும் என்று நினைப்பது தவறு. மனநோயாளிகளுக்கு தக்க நேரத்தில் உரிய சிகிச்சையளிக்க வேண்டும்.

உடலுக்கு ஏற்படும் நோய்களைப் போன்றே மனதுக்கும் நோய்கள் ஏற்படுகின்றன. சிந்தனை, உணர்ச்சி செயல்பாடு, நடத்தை ஆகியவற்றை மனநோய்கள் பாதித்து குணமாற்றத்தை ஏற்படுத்துகின்றன. மூளையில் ஏற்படும் இரசாயன மாறுதல்கள், மூளையைப் பாதிக்கும் அளவுக்கு தலையில் ஏற்படும் காயங்கள், மரபியல் பரம்பரையாக வரக்கூடிய நிலை, வாழ்க்கையில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளினால் வரும் பாதிப்புகள், கவலை, சோகம் ஆகியவை காரணமாக மனநோய் ஏற்படலாம். மருத்துவ சிகிச்சை, மனவியல் சிகிச்சை, மறுவாழ்வுப் பயிற்சி ஆகியவற்றை பாதிக்கப்பட்ட மன நோயாளிக்கு அளித்து குணப்படுத்த முடியும். மிதமான மனநோய், தீவிர மனநோய் என இரண்டு வகைகள் உள்ளன. மிதமான மனநோய் அதிக பாதிப்புகளை ஏற்படுத்துவதில்லை. தீவிர மனநோய் அதிக பாதிப்புகளை ஏற்படுத்தி நோயாளியின் அன்றாட வாழ்வை நிலை குலையச் செய்கிறது.

**மனநோயின் அறிகுறிகள்:**

1. கண்ணுக்குப் புலப்படாத காட்சிகள் தங்களுக்குத் தெரிவதாகக் கூறுவது; பிறர் காதுக்குக் கேட்பதாகக் கூறுவது; பிறர் காதுக்குக் கேட்காத குரல்கள் தங்களுக்குக் கேட்பதாகக், கூறுவது.
2. தனக்குத் தானே பேசிக்கொள்வது.
3. பசியில்லாமல் இருப்பது.
4. தூக்கம் இல்லாமல் இருப்பது.
5. காரணமில்லாமல் பிறரை சந்திப்பது.
6. வரம்புக்கு மீறிய கற்பனை.
7. அவதூறாகப் பேசுவது.
8. காரணமின்றி மனம்போன போக்கில் திரிவது.
9. தன் சுகாதாரத்தில் குறைவு.
10. உணர்ச்சிகளற்று (அன்பு, பாசம்) இருப்பது.
11. தன்னம்பிக்கை இல்லாமல் உற்சாகம் இல்லாமல் இருப்பது.
12. முரட்டு சுபாவம்.
13. வாழ்க்கையில் ஈடுபாடில்லாமல் இருப்பது.
14. தற்கொலை எண்ணங்கள், முயற்சிகள்.
15. அமைதி இல்லாமல் இருப்பது.

மேற்சொன்ன இந்த அறிகுறிகளில் ஏதேனும் சில ஒரு வாரத்துக்கு மேலும் தொடர்ந்தால் மனநல மருத்துவரிடம் சிகிச்சை பெறுவது அவசியம்.

# தலைக்குள் தண்ணீரா?

தலையினுள் நீர் அதிகமாக இருப்பதை 'ஹைட்ரோ கெபலஸ்' என்கிறோம். மூளை அழிவுறும் எல்லா நிலைகளிலும் இது உண்டாகிறது. மூளை தமனிகளின் சீர்கேடு, வாதம், மூப்பிற்கு முன்னதாக மறதி நிலை போன்றவற்றிலும் உண்டாகிறது. இது சில வேளைகளில் ஒரு 'சரிகட்டும்' செயலாகவும் அமைகிறது. மூளைத் தண்டு வடதிரவத்திலுள்ள அழுத்தம் அதிகரித்தால் பின் விளைவுகள் ஏற்படும். நான்காவது 'வென்டிகலி'லிருந்து கெராய்டு 'ப்லக் சஸ்' இடையிலான வழியில் தடங்கல் ஏற்படுத்துவது ஒருவகை. மற்றொருவகை 'சப் அரக்னாய்டு' இடங்களில் அதிகமான அழுத்தத்தை உண்டாக்குவதை கம்யூனிகேடிங் ஹைட்ரோ கெபலஸ் என்பது.

**பிறவியில் ஏற்படுவது:**

குழந்தை பிறக்கு முன்னரே ஏற்படுவது ஒன்று. இதனால் தண்டு வடத் திரவ சுழற்சியில் தடை ஏற்படுகிறது. மூளையிலுள்ள நாளக் குழாயின் குறுகல் ஏற்படுவதாலோ அல்லது நாளம் இன்மையாலோ சிறு மூளை நாக்கு நீட்டு விடுவதாலோ தடை உண்டாகலாம். சிரிங்கோ மைலியா, ஸ்பைன பைபிடா ஆகிய வியாதிகளிலும் தோன்றும். சில வேளைகளில் பிறவியில் பிரசவத்தில் ஏற்படும் காயங்களால் உண்டாகும்.

தானாகவே தோன்றுவது: இவ்வகை மூன்றாவது அல்லது நான்காவது வென்ரிகலில் உண்டாகும் கட்டிகள், நடுமூளையில் நாளவழி குறுகிவிடுவது போன்ற காரணங்களால் உண்டாகும். பாரசைட்டுகளால் உண்டாகும் உட்குழிப்பைகளாலும் அடைப்பு ஏற்படும். காது அழற்சிகளாலும் இரத்தக் கட்டிகள் உறைவுகள் ஏற்பட்டு அடைப்பு தோன்றலாம்.

**அறிகுறிகள்:**


பெரும்பாலும் தலை அளவிற்கு அதிகமாக பெரிதாக இருக்கும். பிரசவத்தில் இதன் காரணமாக சிக்[illegible] தோன்றும் [illegible] பிறந்த ஒரு மாதத்திற்குப் பின்னால் கூட மெல்ல மண்டை பெருத்து விடுகிறது. தலையின் சுற்றளவு 30 அங்குலத்திற்கு மேலாகி விடுவதுமுண்டு. மண்டைமேலுள்ள தையல் பகுதி, தலை உச்சி ஆகியவற்றில் மாற்றங்கள் தோன்றுவதைக் காணலாம். இதனால் மூளை வளர்ச்சி குறைவதோடு, கை, கால்களின் தன்மையும் பாதிப்படைகிறது. தலைவலி, கழுத்துவலி போன்ற அறிகுறிகளும் காணப்படுகிறது.

சிலருக்கு கண்ணில் உள்ளே நீர்தேங்கி அழுத்தம் உண்டாவதால் பார்வை பழுதடையும், எக்ஸ்-ரே மற்றும் 'ஐசோடோப் என்கெபலோ கிராபி' மூலம் அறிய முடிகிறது. சிகிச்சையை மேற்கொள்ளாவிட்டால், குழந்தை இறக்க நேரிடும். அரிதாக பிழைக்கும் குழந்தைகளுக்கு வலிப்பு, பார்வை இழப்பு, மூளை வளர்ச்சி குறைவு போன்ற பிரச்சினைகள் உண்டாகும்.

[illegible] சிகிச்சை முறைகள் உள்ளன.

எனவே மண்டை அளவிற்கு அதிகமாக பெருத்திருந்தால் நரம்பியல் நிபுணரை அணுகி ஆலோசனை பெறுவது நல்லது.

ஏனெனில் மூளை — நரம்பு மண்டலம் சார்ந்த துறையில் நாம் எவ்வளவோ முன்னேற்றம் அடைந்துள்ளோம்.



நன்றி ஹெல்த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிட்னியிலிருந்து வன்னிக்கு - 4

*அவுஸ்திரேலியாவில் தற்போது இருக்கும் திரு. பொன்னி வேந்தன் அவர்கள், கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் கொழும்புக்குச் சென்று அதன் பின் வன்னிக்கும் சென்றிருந்தார்.*

*அங்கு தான் கண்டவற்றையும், கேட்டவற்றையும் தனக்குக் கிடைத்த அனுபவங்களையும் ஒரு பயணக் கட்டுரையாக வடித்திருக்கிறார்.*

*இக் கட்டுரை தொடராக ஈழ முரசில் வெளிவருகின்றது.*

*— ஆர்.*

(சென்ற வாரத் தொடர்ச்சி)


இலங்கை நாணயம் பெறுமதி குறைய இருப்பதால், வெளிநாட்டுப் பணத்தை கொஞ்சம் அனுப்பினாலும் அது பன்மடங்காக, பல்லாயிரமாக அங்குள்ளவர்களுக்குப் போய்ச் சேரும். அதுவும் அவர்களுக்கு எங்கே புரியப்போகிறது. நிற்கும் அறையிலோ இரண்டு பாய், நாற்றம் எடுக்கும் இரு தலையணை, ஒரு மண்ணெண்ணை குப்பி விளக்கு என்பன மட்டுமே இருந்தன. இடையிடையே மின் விளக்கு எரிந்து நூர்ந்து கொண்டும் இருந்தது.

பலர் வாயில் புகையிலை வைத்து மேலும் புகையை கக்கிய வண்ணம் இருந்தார்கள். பல்வேறு தரம் கொண்டதாக இருந்தது. தமிழ் சமுதாயத்தின் முழு வடிவங்களும் அங்கு காணப்பட்டதுபோல் இருந்தது. ஒரு காலம் கம்பி வேலி போட்டு, நெருக்கமாக கிழுவை நட்டு, பின்னர் பனை அல்லது தென்னை ஓலையால் நெருக்கமாக ஒரு ஓட்டையும் இன்றி நெருக்கி அடைத்து, பின்னர் வீட்டுக்கு முன்னும் ஒரு மறைப்புக் கட்டி போதாக்குறைக்கு கிணற்றை சுற்றி மறைப்புக்கட்டி வாழ்ந்த எம்மவர்கள், இன்று பரந்த வெளியில் பாரபட்சமின்றி காலை அகல விரித்து படுத்து கிடக்கின்றார்களே என்று நினைத்து எனக்குள்ளேயே சிரித்துக் கொண்டேன். வீட்டை மறைக்கும் அளவிற்கு மதில் கட்டிவாழ்ந்த கனவான்களையும் பற்றி மனம் நினைக்கிறது.

சற்று நேரம் கழித்து குளிப்பதற்காக அந்த வளவில் இருந்த கிணற்றடிக்குப் போனேன். ஒரு சிறிய கிணறு அதைச் சுற்றி பத்துக்கு மேற்பட்ட கயிற்று வாளிகள். சுற்றிவர ஆணும் பெண்ணும் பெரிசும் சிறிசுமாய் நின்று கதைத்துக் கதைத்து குளிக்கிறார்கள். என் கண்களை என்னால் நம்பவே முடியவில்லை.

**ஆணும் பெண்ணும் பெரிசும் சிறிசுமாய் நின்று கதைத்துக் கதைத்து குளிக்கிறார்கள். என் கண்களை என்னால் நம்பவே முடியவில்லை. சமுதாயம் எப்படி சூழ்நிலைகளுக்கேற்ப மாற்றப்படுகிறது என்று நினைத்துக் கொண்டேன்.**

சரியான களைப்பு தலையிடி. உடுப்புக்களை கழட்டி, இரவு உடுப்பை மாற்றி விட்டு சற்று நேரம் சாய்ந்து கொண்டோம். சிறிதுநேரத்தின் பின் யன்னல் வழியாக, சற்று தலையை உயர்த்திப் பார்க்கின்றேன். ஆண் பெண்கள் வித்தியாசமின்றி படுத்து இருந்த எம்மவரைப் பார்க்கின்றேன். குப்பி விளக்கு குபீர் என்று புகையை கக்கிய படி வெளிச்சத்தைத் தருகிறது- சமுதாயம் எப்படி சூழ்நிலைகளுக்கேற்ப மாற்றப்படுகிறது என்று நினைத்துக் கொண்டேன். நன்மைதான். எனக்குள் எண்ணுகின்றேன். என்னால் குளிக்க முடியவில்லை. ஒருவாறு மேலைக் கழுவிக் கொண்டு, மீண்டும் பயணத்தின்போது போட்ட அந்த வியர்வை தாங்கிய உடுப்புக்களையே போட்டுக் கொண்டு நண்பருடன் அருகில் உள்ள ஒரு கடையில் சென்று, ஒன்றையும் யோசியாது அங்கு கிடைத்ததை சாப்பிட்டுவிட்டு பசிக்கொடுமைக்கு தற்காலிக முற்றுப்புள்ளி போட்டுவிட்டு வெளியில் வந்து முற்றத்து நிலாவின் முன் குந்தி இருந்து கொண்டோம்.



மெல்லிய காற்று மேனியை சற்று சுகமாக தடவிச்செல்ல பல மணி நேரம் மெய் மறந்து நாட்டு நிலமைகளைப் பற்றி கதைத்தோம். என் நண்பர் ஒரு பட்டதாரி ஆசிரியர். நாட்டுப் பற்று உள்ளவர். பல சந்தர்ப்பங்கள் அவரை நாடி ஓடி நாட்டைவிட்டு வெளிநாட்டுக்கு இழுத்த போதும், அவரை அந்த பயித்தியத்தால் ஆட்டிப் படைக்க முடியவில்லை. மிகவும் கடுமையானவர். அநீதியைக் கண்டு ஆர்த்தெழுபவர், விடுதலைப் புலிகளை விமர்சிப்பவர், அதே வேளையில் அவர்களின் இலட்சிய வேட்கையை அளவுக்கு அதிகமாய் காதலிப்பவர், புகழ்பவர், ஒரு நல்ல ஜனநாயகவாதி. வன்னிப்பகுதியில் கடமை புரியும் ஒரு திறமை வாய்ந்த ஆசிரியர். ஆர்வமாக விடயங்களை வாசிப்பவர் விமர்சிப்பவர். நல்ல பிரயோசனமாக இருந்தது. அவருடன் கலந்துரையாடும்போது, நிலைமைகளை ஓரளவு ஊகித்துக்கொள்ள முடிந்தது.

நடுச்சாமம் ஆனது குப்பி விளக்கை நூர்த்துவிட்டு படுத்துக்கொண்டோம். புதிய இடம் சுத்தம் குறைவு, இரைச்சல், நுளம்புக்கடி, புழுக்கம், மன உழைச்சல் இவைகளால் நித்திரை வரவில்லை. ஒருவாறு புரண்டு புரண்டு படுத்துவிட்டு, மறுநாள் நான்கு மணிக்கே எழும்பிவிட்டேன். இரண்டு மலசல கூடம் மட்டும் நூற்றுக்கணக்கானவருக்கு இருப்பதை முதல் நாள் இரவே அறிந்து வைத்திருந்தேன். எழுந்தவுடன் மலசல கூடத்திற்குப் போனேன். அங்கு ஏற்கனவே பலர் ஆணும், பெண்ணுமாக வரிசையில் நிற்கிறார்கள். சற்று பொறுமையாக வரிசையில் நின்று ஒருவாறு காலைக் கடன்களை முடித்துவிட்டேன். அதிகாலை ஆறுமணியளவில் அறையில் இருந்து வெளிக்கிட்டு அருகில் உள்ள ஒரு கடையில் தேனீர் அருந்திவிட்டு, வன்னி பெருநிலப்பரப்புக்கு செல்வதற்காக அனுமதிபெறும் இராணுவ முகாமை நோக்கிச் சென்றோம்.

இங்கு நான் வன்னி பெருநிலப்பரப்பு என்று சொல்வது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் மன்னாரின் பெரும் பகுதியும், மல்லாவி, துணுக்காய், வவுனிக்குளம், மாங்குளம், முறிகண்டி, விசுவமடு, தண்ணீர் உற்று, முள்ளியவளை, முல்லைத்தீவு பகுதிகளே ஆகும்.

ஜெயசிக்குறுய் நடவடிக்கையின்போது கண்டி வீதியை ஒட்டிய வன்னிப் பிரதேசங்களில் வாழ்ந்த என் உடன் பிறப்புகள் இடம் பெயர்ந்து இப் பகுதிகளுக்கு அகதிகளாய் சென்றமையாலேயே இப் பகுதிகளுக்குச் செல்லும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. கிளிநொச்சி வரையில் உள்ளவர்கள், அதாவது ஓமந்தை, பெரியமடு, பண்டிக் கெய்த குளம், பனிக்கநீராவி, மாளிகை, சேமமடு, புளியங்குளம், பழையவாடி, பூதூர் புதுக்குளம், குறிசுட்டகுளம், ஆலங்குளம், பெரியகுளம், கரப்புக்குத்தி, அடம்பன், ஆயிலடி, பெரியமடு, கல்லிருப்பு, புற்குளம், மாங்குளம். மன்னன் குளம், புதுவிளாங்குளம், முழங்காவில், முறிகண்டி, புத்துவெட்டுவான் பகுதிகளில் வாழ்ந்த மக்கள் இடம் பெயர்ந்து துணுக்காய் வவுனிக்குளம், மல்லாவி, பனங்காமம், பாண்டியன்குளம், நாட்டாங்கண்டல், தேராங்கண்டல், பாலையடி போன்ற பிரதேசங்களில் அகதிகளாக்கப்பட்ட நிலையில் தஞ்சமடைந்துள்ளார்கள். மேலும், நெடுங்கேணியை அண்டிய பகுதி மக்களும் அனந்தர் புளியங்குளம், நயினாமடு, குழவிசுட்டான், சன்னாசி பரந்தன், கரிப்பட்ட முறிப்பு பகுதிகளைச் சேர்ந்த மக்களும், தண்ணீரூற்று முள்ளியவளை, முல்லைத்தீவு பகுதிக்கு கூடுதலான இடம் பெயர்ந்துள்ளார்கள் என அறிய முடிகிறது.

அனுமதி பெறும் பொருட்டு இராணுவ முகாமை நோக்கி போகும் பொழுது ஆள் நடமாட்டம் பெரிய அளவில் காணப்பட்டது. கடைகள் குறிப்பாக தேனீர்க்கடைகள் திறக்கப்பட்டு வியாபாரம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. ஒரு கடையின் முன் பல் ஆண்களும், பெண்களும், யுவதிகளும் நிற்பதைக் காண முடிந்தது. என்ன என்று பார்த்த போது, அது ஒரு தொலைபேசி தொடர்பு நிலையம், மன்னாரில் இருந்து வவுனியாவுக்கும், யாழ்ப்பாணத்திற்கும், கொழும்பிற்கும், பிறநாடுகளுக்கும் தம் உறவினர்களுடன் கதைப்பதற்காக பலர் காத்து இருக்கிறார்கள் என்பதைப் பிரிந்து கொண்டேன்.

**வன்னிப்பக்கம் செல்ல இருப்பவர்களை பொதிபொதியாக வைத்திருக்கும் சாமான் மூட்டைகள் அப்படியே அடையாளம் காட்டியது.**

இராணுவ முகாமை அண்மித்தபோது ஏற்கனவே வீதியின் இரு மருங்கும் பல நூற்றுக்கணக்கான மக்கள் வரிசையாக நிற்பதைக் காணமுடிந்தது. ஒரு பக்கம் நிற்பவர்கள் வவுனியா செல்வதற்கும், மறுபக்கம் நிற்பவர்கள் வன்னி பெருநிலப்பரப்புக்குச் செல்வதற்கும் நிற்பதாய் ஊகிக்க முடிந்தது. வன்னிப்பக்கம் செல்ல இருப்பவர்களை பொதிபொதியாக வைத்திருக்கும் சாமான் மூட்டைகள் அப்படியே அடையாளம் காட்டியது. நாம் இருவரும் வன்னிப் பக்கம் போகும் மக்கள் வரிசையில் போய் நின்று கொண்டோம். குழந்தைகள், வயோதிபர், ஆண்கள், பெண்கள், யுவதிகள், இளைஞர்கள் என்று பல மட்டத்திலும் சனங்கள் வரிசையாக நின்றார்கள்.


## ஐரோப்பா தழுவிய குறும்படப் போட்டி - 1998

**கலைஞர்களே !**

உங்கள் கமராக் கண்களைத் திறவுங்கள், எங்கள் முன்னால் விரிந்து கிடக்கும் எம்மவர் பற்றிய பிரச்சினைகளை படமாக்கிக் கொள்ளுங்கள். சமூகத்தைப் பற்றிய பார்வையும் எதிர்காலம் பற்றிய தெளிவும் உங்கள் குறும்படத்தில் பிரதிபலிக்கட்டும்.

**குறும்படப் போட்டியில் பங்குபற்றுவோருக்கான விதிமுறைகள்**

1. இவ்வருட ஜூலை மாத இறுதிப் பகுதிக்குள் போட்டியில் பங்குபற்றும் அனைவரும் தங்களது விண்ணப்பங்களை தொலைபேசி மூலமாக பதிவு செய்து கொள்ளுங்கள்
2. குறும்படங்கள் எம்மை வந்து சேரவேண்டிய இறுதித் திகதி ஒக்ரோபர் 15 இற்கு முன்.
3. ஆக்க தளம் - புலம் பெயர் வாழ்வின் அவலங்களை வெளிப்படுத்துவதாக இருத்தல் விரும்பத்தக்கது.
4. திரைக்கதை, இசை, பாடல், நெறியாள்கை யாவும் சுயமானதாக இருத்தல் வேண்டும்.
5. இப்போட்டியில் கலைக்குழுக்களாகவோ, தனிநபர்களாகவோ கலந்து கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு: தமிழர் கலை பண்பாட்டுக் கழகம் - பிரான்ஸ் (01 43 58 11 42)



திருமணவிழாக்களா, பூப்புனித நீராட்டு விழாக்களா, பிறந்த நாள் வைபவங்களா, மேடை நிகழ்ச்சிகளா இசை மழையில் நனைந்து மகிழ

ஐரோப்பா புகழ்

பாரிஸ்

**ஈழநிலா**

தொடர்புகட்கு: இயக்குநர் S.S. தில்லைச்சிவம்
Tel: 0140375669


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைந்த சொற்கள் எண்: 12

கீழ் உள்ளவற்றில் சொற்கள் கலைந்திருக்கின்றன. சொற்கள் நேர்கோட்டிலும், இடமிருந்து வலம், வலமிருந்து இடம், மேலிருந்து கீழ், கீழிருந்து மேல், மூலைப் பக்கம் இருக்கும். இச் சொற்களை கண்டுபிடித்து கோடிடவும். சொற்களில் சேராத சில எழுத்துக்கள் மேலதிகமாக உள்ளன.

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | ரு | த் | து | சி | க | ம் | ப | ம் | வு | ழ் | வா | க |
| தி | ரு | ப | ன் | ற் | உ | த | உ | ட | சு | க் | க | று |
| ர | யா | ம | ப | ய | ண | த் | கை | இ | கு | வை | ணி | ப் |
| வ | த | க | ம் | மு | த | த | த | ரி | வி | ரு | ப் | பு |
| ன் | ர் | க | ம் | ர | வி | உ | மை | ர | ப | வை | பு | பு |
| உ | ல | ண | வு | உ | சா | ம் | உ | எ | வா | ப் | வி | ப் |
| தி | க | உ | ம் | க் | ய | ப | வ | க | ரி | த | உ | ர |
| உ | பு | ன் | மா | கி | கா | ர் | உ | ச | உ | ப் | ம் | ப |
| சி | த் | ன | ம் | ர | தி | உ | ச் | மை | ற் | ய | பு | ம |
| உ | ன | த | ம் | ம் | டி | உ | கி | சி | பா | உ | ர | த |
| பு | த் | ம் | ம | தி | த் | ம | லோ | உ | ப | தே | ச | ம் |
| ம் | ப் | த | த | ன் | மா | ன | ம் | க | சா | ற் | உ | ரி |
| டு | த் | டி | ரி | வி | ரு | ட | ர | ள | ம் | த | ச | தா |
| உ | ப் | க | ண் | ய | ப | ண | தா | தா | ள் | ன | க | ள |
| பு | க | ல | க் | க | ம் | க | மு | ரு | தி | உ | இ | ம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| உக்கிரம் | உத்தரியம் | மத்திமம் | தன்மானம் | மான்பு | உயர்ச்சி | உபகரணம் |
| வர்ணம் | முயற்சி | தாரம் | உச்சரிப்பு | உலோகம் | தினசரி | கணிப்பு |
| மதம் | உத்தமம் | உற்சவம் | எரிப்பு | கதிரவன் | கடிதம் | உதிரம் |
| உத்தமன் | மகிமை | வாக்குரிமை | கலர் | உபகாரம் | உபதேசம் | சாதகம் |
| திருமுகம் | கறுப்பு | உபசாரம் | உன்னதம் | தியாகம் | விருப்பு | தாளம் |
| உத்தரவு | உதயன் | திலகம் | சுவைப்பு | சினம் | உத்தரவாதம் | உற்சாகம் |
| தத்தம் | கருமம் | தடிப்பு | உப்பரிகை | உள்ளம் | கம்பம் | துன்பம் |
| மதன் | உபாயம் | உயரம் | கண்டிப்பு | கலக்கம் | வாழ்வு | உடும்பு |
| உதவி | கருத்து | பரப்பு | இடம் | கபடம். | | |

பெயர்: ..........................

முகவரி: ..........................

..........................

..........................

பிறந்த நாள்: ..........................

சந்தாதாரராயின் சந்தா இல: ..........


கலைந்த சொற்கள் எண்–12 இற்கான விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள்: 14.08.98

*(போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)*

**விடைகள் அனுப்பவேண்டிய முகவரி:**

கலைந்த சொற்கள்
ஈழமுரசு - 22, Rue Perdonnet,
75010 Paris, France.

# கலைந்த சொற்கள் எண் - 11 விடைகள்



**பழமொழி: சுட்ட மண்ணும் பச்சை மண்ணும் ஒட்டுமா?**

*ஈழமுரசுவின் கலைந்த சொற்கள் பகுதிக்கு 200 இற்கும் மேற்பட்ட வாசகர்கள் விடையெழுதி அனுப்பியிருந்தார்கள்.*

*அவர்களில் சரியான விடையெழுதிய வாசகர்களில் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து வாசகர் விபரங்கள் வருமாறு.*

1) திருமதி சு.முருகேந்திரன்
5030 Landas,
Norway.
2) G.யோகநாதன்
3930 Visp,
Switzerland.
3) திருமதி சிவானந்தம்
77200 Torcy,
France.
4) வ. திருநந்தி
70376 Stuttgart,
Germany.
5) S.T. பெனடிக்ற்
91100 Corbeil Essonne
France.

இவர்களுக்கு
**Lune International Paris**
நிறுவனத்தினரால் பெறுமதி மிக்க நூல்கள் அனுப்பி வைக்கப்படும்.

இந்த கலைந்த சொற்கள் எண்-12 இற்கான சரியான விடையும், கலைந்த சொற்கள் எண்-13ம், 20 - 26 ஒகஸ்ட் 98 ஈழமுரசில் வெளிவரும்.

**தயாரிப்பு: சவேயூ சவுந்தரராஜா**


10வது ஆண்டில் காலடிபதிக்கும்

# இமாலயாவின்

தொடரும் சேவையில்.... மற்றுமோர் அறிமுகம்

**100 இடியப்பம் 100 பிராங்குகள் மட்டுமே**

உங்கள் இல்லங்களையும்; உங்கள் தொழிலகங்களையும் நோக்கிய எமது....

## கடுகதி பார்சல் சேவை

❀ பிரியாணி ❀ கொத்துறொட்டி ❀ இடியப்பப்பிரியாணி ❀ தண்டூரி வகைகள் ❀ நாண் ❀ சீஸ்நாண் ❀ சப்பாத்தி ❀ சமுசா ❀ றோல்ஸ் ❀ சோறு - கறி

இவற்றை உங்களின் இல்லங்களில் இருந்தபடியே உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்து உண்டு மகிழ்ந்திட இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.

தொலைபேசி: 01 42 06 03 50 / 01 42 03 06 51

## றெஸ்ரோறன் இமாலயா

9, Rue Jacques Louvel Tessier, 75010 Paris (M°: Goncourt)

Pub



# சாந்தினி உணவகம்

குதூகலமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது

14, Rue Perdonnet, 75010 Paris.
Métro: La chappelle / Gare du Nord
**Tel: 01 42 09 37 99**

காலை – 9.00 மணி முதல் இரவு – 11.30 மணிவரை

**உங்கள் விருப்பத்திற்கேற்ப உணவு**

**காலை:** இட்லி, அப்பம், இலங்கைத்தோசை, மசாலாத்தோசை, இடியப்பம், பிட்டு
**மதியம்:** சோறு (பலவகைக்கறிகளுடன்), பிரியாணி, இடியப்பக்கொத்து, கொத்துறொட்டி, றொட்டி மற்றும் பலவகையான உணவுகள்.
**இரவு:** நீங்கள் விரும்பிய உணவு வகைகள் உண்டு

மகிழ்ந்திட நாடவேண்டியது
சாந்தினி உணவகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர் மரணங்கள் - தற்கொலைகள் - கொலைகள்

## ஒரு சிறப்பு புலனாய்வுத் தொடர்

யாழ்ப்பாணம் புறநகர் பகுதியைச் சேர்ந்த அந்த மனிதர் ஒரு விஞ்ஞானப் பட்டதாரி. கொழும்பிலுள்ள பிரபல தமிழ் தொழிற்சாலையொன்றில் தொழில்நுட்பவியலாளராகக் கடமையாற்றிய அவர், 1983 ஆடி இனப் படுகொலை அமளியில் அந்தத் தொழிற்சாலை சிங்களப் பேரினவாதிகளால் தீக்கிரையாக்கப்பட்டதையடுத்து ஜேர்மனிக்கு புலம் பெயர்ந்து வந்துவிட்டார்.

அவர் ஜேர்மனிக்கு வந்ததே ஒரு தனிக்கதை. 1977 இனப்படுகொலைக்கு பின்பு தமிழர்கள் அங்கொன்றுமிங்கொன்றுமாக ஐரோப்பாவுக்கு புலம் பெயர்ந்து கொண்டிருந்தபோது நான் சொல்லுகின்ற இந்தக் கதாநாயகரது நண்பர்களும் புலம் பெயர்ந்து செல்வதற்கு முயற்சி செய்து கொண்டிருந்தனர்.

அதில் அவருக்கு வேண்டிய ஒரு சிலர், 'மச்சான் இனி இங்கை இருந்து (கொழும்பில்) பிரயோசனமில்லை ஏதாவதொரு ஈரோப் கன்றிக்கு போகலாம் வா' என்று கேட்டபோது, 'நோ.. நோ.. நோ.. நான் ஒருநாளும் அகதியா போயிருந்து பிச்சைக் காசு வாங்கிச் சாப்பிடமாட்டன். நான் அப்பிடிப் போகோணும் எண்டு தீர்மானிச்சால் ஒன்றில் யூக்கேக்கு போவன், இல்லையெண்டால் அவுஸ்திரேலியாவுக்குத்தான் போவன். அதுவும் கூட நல்ல விசாவிலைதான் போவன்' என்று வீராப்புடன் சொல்லி விட்டார்.

1983 ஆடிக் கலவரத்துக்கு பின்பு, கொழும்பிலிருந்த அரசியல் சூழ்நிலை மற்றும் அவரது குடும்பத்தவர்களது நிர்ப்பந்தம் என்பவற்றால் அவர் புலம் பெயரத் தீர்மானித்தபோது, இந்த வீராப்பு அவருக்கு உறுத்தியது. தான் இங்கிலாந்து அல்லாத எங்காவது ஒரு ஐரோப்பிய நாட்டில் போய் அகதியாக... இருந்து தனது பழைய நண்பர்களைச் சந்திக்க நேர்ந்துவிட்டால் தன்னுடைய கௌரவம் என்னாகிறது என்ற தாழ்வுச் சிக்கல் அவருக்கு ஏற்பட்டது.

அதனால் கொழும்பிலுள்ள ஐக்கிய இராட்சியத் (UK) தூதரகத்திற்கும் அவுஸ்திரேலியத் தூதரகத்திற்கும் சென்று, தன்னுடைய படிப்பு, தொழில் அனுபவம் எல்லாவற்றையும் காட்டி, தான் மேற்படிப்பு படிப்பதற்கு விசா தருமாறு கேட்டார். அவர்கள் பல்வேறு சாக்குப்போக்குச் சொல்லி அவரது விண்ணப்பத்தை நிராகரித்துவிட்டார்கள்.

> **ஜேர்மனியில் ஒரு தமிழர் தனது குடும்பத்தைக் கொழும்புக்கு அனுப்பிவிட்டு தற்கொலை செய்து கொண்டுவிட்டார். அதற்கு என்ன காரணம் என்று ஆராய்ந்தபோது...**

புலம் பெயரும் எண்ணத்தை கைவிட்டு, தான் வேலை செய்த பழைய தொழிற்சாலையிலேயே வேலையைத் தொடரலாம் என்றால் அவருக்குக் கீழே வேலை பார்த்த கடைநிலை சிங்கள ஊழியர்கள் எல்லாம் ஆடி அமளியில் அவருக்கு அடித்து விட்டார்கள்.

அதனால் மீண்டும் அங்கே வேலைக்குச் சென்றால் அவர்கள் மதிக்கமாட்டார்கள். என்பதால் அதிலும் அவருக்கும் [illegible] பம் இல்லை. எனவே அந்த [illegible] தில் கொழும்பில் கொடிகட்டிப் பறந்த ஒரு பிரயாண முகவரிடம் தொடர்பு கொண்டு தன்னை எப்படியும் லண்டனுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொண்டார். அந்தக்காலத்தில் ஐரோப்பாவுக்குப் புலம் பெயர்வதற்கு 25 ஆயிரமோ 30 ஆயிரம் தான் ரேட் போய்கொண்டிருந்தது. இவர்தான் 5 ஆயிரம் கூடத் தருகிறேன் என்னை எப்படியும், லண்டனுக்கு அனுப்பிவைச்சிடோணும் எண்டு பிரயாண முகவரிடம் பேரம்பேசியிருந்தார்.

அவரும் 'அண்ணை நீங்கள் யோசிக்க வேண்டாம். 'சுவரா நீங்கள் லண்டனிலை போய் இறங்குவியள்' என்று சொல்லிவிட்டு, கிழக்கு ஜேர்மனியூடாக பேர்லினில் கொண்டுவந்து இறக்கிவிட்டான்.

பேர்லின் அகதி முகாமில் இருந்தபோது இவருக்கு வாழ்க்கையே வெறுத்துவிட்டது. 2 வருடம் அங்கே இருந்த பின்பு முன்பு இவர் வீராப்பு பேசிய நண்பன் ஒருவன் சந்தித்து இவரை அன்றைய ஜேர்மனியிலிருந்த முக்கிய நகரொன்றுக்கு அழைத்துச் சென்று, பதிந்து அகதி அந்தஸ்த்தும் பெற்றுக்கொடுத்துவிட்டான். (அந்தக் காலகட்டத்தில் ஜேர்மனியில் ஒரு நகரத்தில் அரசியல் தஞ்சம் கோரியவர்கள் இன்னொரு நகரத்துக்கு போக முடியாது)

அதன் பின்பு, கொழும்பிலிருந்த அவரது மனைவியும் மூன்று பிள்ளைகளும் ஜேர்மனிக்கு வந்து விட்டனர். ஜேர்மன் அரசாங்கம் அகதிக்காசை அள்ளிக் கொடுத்த போது இவருக்கு 'லண்டன் கனவு' மறைந்து 'காசுகண்ட இடம்தான் சொர்க்கம்' என்ற நினைப்பு வந்துவிட்டது.

ஆனாலும் ஜேர்மனியில் அக[illegible] பேரை வைத்து வேலை வாங்கியவன்; மற்ற அகதிகளை விட தான் உயர்ந்தவன் என்ற செருக்கு அவரிடம் நிறையவே இருந்தது.

இந்த நிலையில் மேலதிகமாகப் பணம் சம்பாதிப்பதற்கு சீட்டு ஒன்றை தொடங்கினால் எப்படி இருக்கும் என்று யோசித்துப் பார்த்தார்.

அதிலேயும் தான் மற்றவர்களை விட வித்தியாசமான முறையில் செய்ய வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு ஏற்பட்டது.

சீட்டு மொத்தத்தொகை 20 ஆயிரம் மார்க் 20 மாதம் கட்ட வேண்டும். சீட்டில் சேருபவர் அவருடைய வருமான அத்தாட்சி, வதிவிட அத்தாட்சி காட்ட வேண்டும். ஒவ்வொரு மாதமும் 5-ம் திகதி சீட்டுக்காசு கட்டவேண்டும், அவ்வாறு கட்டத் தவறினால் ஒவ்வொரு கிழமைக்கு 50 மார்க் தண்டப் பணம் கட்டவேண்டும்.

அதுபோல் தான் ஒவ்வொரு

## அகதி வாழ்வின் அவலங்கள்

மாதமும் 10-ம் திகதி சீட்டை கூறி எடுத்தவருக்கு பணம் கொடுப்பார். அவ்வாறு கொடுக்கப் பிந்தினால் தானும் அந்தத் தொகைக்கு 5% வட்டிபோட்டுக்கொடுப்பார்.

இவ்வாறான நிபந்தனைகளுடன் -1995-ம் ஆண்டு தை மாதத்தில் இவரது சீட்டு வியாபாரம் ஆரம்பித்தது.

'மனிசன் படித்த மனிசன். கறாரான பேர் வழி. ஒழுங்காக பணம் தருபவர் என்ற நம்பிக்கையில் 20 பேர் சீட்டில் சேர்ந்து கொண்டனர்.

முதல் மூன்று மாதம் சீட்டு ஒழுங்காக நடந்தது. ஆனால் நடைமுறைக் காரணங்களால் ஒரு சிலர் ஒரு சில நாட்கள் பணம் கொடுக்கத்தவறியபோது குறிப்பாக ஒருநாள் பிந்தினால் கூட இவர் கறாராக தண்டப் பணம் அறவிட்டது; கண்டபடி ஆட்களை பேசியது இதெல்லாம், சிலருக்கு இவர் மீது ஒரு முரண்பாட்டைத் தோற்றுவித்து விட்டது.

இவ்வாறு இவருடன் முரண்பட்ட சிலர் திட்டமிட்டு, அடுத்த, அடுத்த மாதங்களில் சீட்டை எடுத்துக்கொண்டு கனடாவுக்குச் சென்றுவிட்டனர். 4வது மாதம், முதல் ஆள் தலைமறைவாகிய போது, இவர் அதிர்ந்து போனாலும் தன்னுடைய சுய கௌரவத்தை விட்டுக்கொடுக்கக் கூடாது என்பதற்காக சொந்தப் பணத்தைக் கொடுத்து சமாளித்துக்கொண்டார். 5-ம் மாதமும் 6-ம் மாதம் கூட அடுத்தடுத்து இரண்டு பேர் தலைமறைவாகிய போது தான் திட்டமிட்டு தன்னை ஏமாற்றும் முயற்சி நடந்ததை அவ்வரால் புரிந்துகொள்ள முடிந்தது. மூன்று பேருடைய சீட்டுக்காசை தொடர்ந்து 14 மாதத்துக்கு கட்டுவதென்பது அவருக்கு முடியாத காரியமாக இருந்தது. அதைவிட ஏற்கனவே மூன்றுபேர் ஓடிவிட்ட விஷயம் வெளியில் தெரிந்ததால், மற்றவர்கள், தொடர்ந்து சீட்டைக் கட்டமறுத்து தாங்கள் அதுவரை கட்டிய பணத்தை திருப்பித் தரும்படி தொல்லை கொடுக்க ஆரம்பித்தனர்.

அவரால் ஒன்றுமே செய்ய முடியவில்லை. தனது மனைவியையும், பிள்ளைகளையும் சாக்குப்போக்குச் சொல்லி கொழும்புக்கு அனுப்பிவிட்டு தான் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டுவிட்டார்.

இதுபற்றி அவருடைய நெருங்கிய நண்பர் ஒருவரிடம் நான் கேட்டபோது, உண்மையில் 'எனது நண்பனின் மரணத்துக்கு காரணம் ஆட்களை மதிக்கத் தெரியாத அவனது திமிர்க்குணம் தான். சீட்டுக்கட்டுறது; கொடுக்கல் வாங்கல் செய்யிறபோது பரஸ்பர நம்பிக்கை அடிப்படையிலேயே செய்யவேணும். மற்றவையில் சந்தேகப்பட்டுக்கொண்டு ஒரு விசயத்தை செய்ய வெளிக்கிட்டால் நிச்சயம் அவை உண்மை தெரியிறபோது எங்களை பழி வாங்கத்தான் பாப்பினம். தான் மற்றவையைவிட உயர்ந்தவன, படித்தவன் ஆங்கிலம் தெரிந்தவன் என்ற தலைக்கனம்தான் அவனுடைய சோகமான முடிவுக்கு காரணமாகிவிட்டது என்றார்.

அவரது இன்னொரு நண்பனைக் கேட்டபோது, சிலபேருக்கு தங்கடை வரட்டுக் கௌரவத்தை விட முடியாது. மனிதனாகப் பிறந்தவனுக்கு கடன் வாறது, கஷ்டம் வாறது சகசம். அதுக்காக நான் கவரிமான் சாதி என்று சொல்லிக்கொண்டு தற்கொலை செய்கிறது, தீர்வாகாது: அவன் தனக்காக தன்ரை குடும்பத்துக்காக வாழவில்லை. மற்றவை தன்னைப் பார்க்கவேணும்; மற்றவையைவிட தான் உயர்ந்தவனாக இருக்கவேணும் எண்டதுக்காக ஒரு போலி வாழ்க்கை வாழ்ந்திட்டான். அது தான் அவன்ரை முடிவுக்கு காரணம்' என்றார்.

– நக்கீரன்

## சீட்டுக்கள் தோல்வியில் முடிவதற்கு என்ன காரணம்?

புலம் பெயர்ந்த நாடுகளில் நம்மவர்களால் நடாத்தப்படும் பெரும்பாலான சீட்டுக்கள் ஏமாற்றுதல்- நம்பிக்கை மோசடி செய்தல் என்பவற்றின் உறைவிடமாக இருந்து வருகின்றன.

புலம் பெயர்ந்த தமிழர்களின் உளவியல் சிக்கல்களுக்கு 'சீட்டும்' ஒரு காரணமாக இருந்து வருகின்றது.

பொதுவாக புலம்பெயர்ந்த தமிழர்களிடம் இருக்கும் புலம் பெயர்ந்த நாடுகளின் சிவில் நிர்வாகச் சட்டங்கள் பற்றிய அறிவின்மை, வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி பணத்தை சேர்க்கவேண்டும் என்கிற மரபுவழிப் பார்வை என்பனவே சீட்டுக்களில் ஏமாற்றுதலும், நம்பிக்கை மோசடிகளும் இடம் பெறுவதற்கு பிரதான காரணமாக இருக்கின்றன.

பிரான்ஸை எடுத்துக்கொண்டால்- 3 ஆயிரம் முதல் 5 ஆயிரம் பிராங்குக்கு மேற்பட்ட அனைத்து பணக்கொடுக்கல் வாங்கல்களும், வங்கிகளுக்கூடாகவே மேற்கொள்ளப்படவேண்டும்.

உழைப்புக்கான ஊதியம் கூட காசோலைகள் அல்லது வங்கிக் கணக்குகளுக்கூடாகவே செய்யப்பட வேண்டும். காசாக அதாவது நோட்டுக்களாக கொடுக்கல் வாங்கல் செய்வது- அதுவும் வியாபாரம் நோக்கத்துக்காக செய்வது சட்ட விரோதமானதாகும்.

அடுத்து 'வர்த்தகம்' என்ற வரையறைக்கும் வரும் சகல தொழில்களும் கண்டிப்பாக பதிவு செய்யப்படவேண்டும். அத்தோடு சம்பந்தப்பட்ட தொழிலுக்கு கண்டிப்பாக காப்புறுதி செய்திருக்க வேண்டும். ஆனால் நம்மவர்களால் நடத்தப்படும் எந்தச் சீட்டும் பதிவு செய்யப்பட்டவையல்ல, அவைக்கு காப்புறுதியும் கிடையாது. எனவே சட்ட விரோதமான ஒரு செயலில்-மோசடியான நடவடிக்கைகள் இடம்பெறுவது தவிர்க்க முடியாத ஒன்றாகிவிடுகின்றது. அதாவது சீட்டுக் கட்டுபவர் தன்னுடைய பணத்தின் உரிமையை சட்ட பூர்வமாக நிருபிக்கும் நிலை இல்லாமல் இருப்பதே- சீட்டுக்காரர்கள் சீட்டுக் கட்டுபவர்களை ஏமாற்றுவதற்கு பிரதான காரணமாகும்.

அடுத்து வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி பணத்தை சேமிக்கும் நம்மவர்களுடைய மரபு வழிப் பார்வை, நமது நாட்டில் எங்கள் சொந்த வீட்டுக்கு நாங்கள் எவருக்கும் வாடகை கட்டத்தேவையில்லை. பெரும்பாலும் யாரும் தண்ணீருக்கு காசு கட்டியதில்லை. ஆனால் இங்கே 'சுவாசிக்கின்ற காற்றைத்தவிர மற்ற அனைத்துக்கும் பணம் கொடுக்க வேண்டும்' என்ற நிலையில் வாயைக் கட்டி வயிற்றைக்கட்டி பணத்தை சேமிப்பதென்பது எல்லா நேரத்திலும் சாத்தியப்படாது. குடும்ப வரவு செலவை திட்டமிடாமல் ஆசைப்பட்டு, அகலக் கால்வைத்துவிட்டு அவதிப்படும் நிலையும் சீட்டுக்கள் தோல்வியில் முடிய மற்றொரு காரணமாகும்.

சிவாசினி வாகன சேவை
Chivashini Transport
வாகன தேவைகளுக்கு 24 மணி சேவை
தொடர்புகட்கு: ஜெயா
0614616984 / 0611289118 /
0614424117 / 01 42 05 44 04
டிஸ்னி றெஸ்றோறன்ட்

Pub

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடாத்தும்

# மாபெரும்

# தமிழர் விளையாட்டு விழா

உதைபந்தாட்டம், துடுப்பெடுத்தாட்டம், கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், சங்கீதக் கதிரை, கயிறிழுத்தல் போட்டி, தலையணைச் சண்டை, குறிபார்த்துச் சுடுதல், சிறுவர்களுக்கான ஓட்டப் பந்தயங்கள் இன்னும் பல பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் யாவும் ஒரே மைதானத்தில்

குடும்பத்துடன் வந்து மகிழ்ச்சியுடன் நாளைக் கழித்திட

உங்களுக்காக **தமிழீழ உணவகம்**

அப்பம், தோசை, கொத்துறொட்டி, கூழ், பிரியாணி, கோழிக்கால் பொரியல், மீன்பொரியல், றோல்ஸ், வடை இன்னும் பல சுவையான உணவு வகைகள் மலிவான விலையில்

**காலம்:** 30.08.1998 ஞாயிறு

**நேரம்:** காலை 9.00 மணி

**இடம்:** Stains மைதானம்

மேலதிக விபரங்களுக்கு:
தமிழர் புனர்வாழ்வுக் கழகம்
01 40 38 30 74



## கப்டன் கஜன் அரங்கில்

தமிழர் கலை பண்பாட்டுக் கழகம் - பிரான்ஸ்

வழங்கும்

# விடுதலை மாலை

இது விடியலைத் தேடி... சுதந்திரக் காற்றை சுவாசிக்க... அவாவி நிற்கும் எம் மக்களின் விடுதலை உணர்வுகளை சுமந்து வரும் மாலை...

தலைகுனியா பச்சைவயல் வெளியினை... மண்டியிடா மண்முகரும் அலைகடலினை... உரசிவரும் ஊர்க்காற்றை சுவாசிக்கும்

## விடுதலை மாலை

**பிரான்ஸ் வாழ் தமிழீழ மக்களை அழைக்கின்றோம்**

**23.08.98 ஞாயிறு (பிற்பகல் 5.30 மணி)**

Théâtre du Gymnase

38, Bld. Bonne Nouvelle, 75010 Paris. (M°:Bonne Nouvelle)

மேலதிக தொடர்புகளுக்கு: 01 43 58 11 42



## டென்மார்க்கில் 5வது ஆண்டாக கருமபுலிகள் ஞாபகார்த்த

# ஐரோப்பா கிண்ணம் - 1998

7 நபர் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

**காலம்: 29.08.1998**

**இடம்:** Ikast Kfumbold Bane - Thriges vej. Ikast, Denmark

தமிழீழ விடுதலைப் புலிகள் டென்மார்க் கிளை, கரும்புலிகள் ஞாபகார்த்தமாக நடாத்தும் மாபெரும் 7 நபர் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி Lkast நகரில் எதிர்வரும் 29.08.98 சனிக்கிழமை நடைபெறவுள்ளது. போட்டியில் பங்கு கொள்ள விரும்பும் கழகங்கள் எதிர்வரும் 15.08.98 ற்கு முன்னர் தமது விண்ணப்பங்களை

M. Rangarajam - Sonderparken -12-1-TV, 7430 Ikast, Denmark

என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**நுழைவுக் கட்டணம் : 350 டெனிஷ் குரோணர்**

Bank: Den Danske Bank - Reg: 3406 Konto: 3406815749

மேலதிக தொடர்புகட்கு: ரங்கன்: 4597154801 / ராஜன்: 4597155299 (Tel/Fax)

**7 பேர் கொண்ட ஐரோப்பாக்கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி விதிகள்**

1. Off Side விதி கடைப்பிடிக்கப்படமாட்டாது.
2. மைதானத்தின் அளவு – டென்மார்க்கில் 7 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நடைபெறும் மைதானத்தின் அளவு.
3. மஞ்சள் அட்டை காட்டப்பட்டால் 5 நிமிடங்கள் வெளியேற்றப்படுவர். (ஏனெனில் மைதானம் சிறியது ஆகையால்)
4. Group_இல் கழகங்களுக்கிடையிலான போட்டிகள் லீக் முறையிலும் கால் இறுதி, அரை இறுதி, இறுதி ஆட்டங்கள் நொக் அவுட் முறையிலும் நடைபெறும்.
5. நேர அளவு - Group இல் கழகங்களுக்கிடையிலான போட்டிகளும், கால் இறுதி, மூன்றாம் இடத்திற்கான போட்டியும் 15+5+15 நிமிடங்களும், அரை இறுதி, இறுதிப்போட்டிகள் 20 + 5 +15 நிமிடங்களும், அரை இறுதி, இறுதிப் போட்டிகள் 20+5+20 நிமிடங்களும் நடைபெறும், கால் இறுதி, அரை இறுதி, இறுதி ஆட்டங்கள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தால் 5+5 நிமிடங்கள் மேலதிகமாக விளையாட அனுமதிக்கப்படுவர்
6. புள்ளிகள் – வெற்றிபெறும் கழகத்திற்கு 3 புள்ளிகளும், வெற்றி தோல்வியின்றி போட்டி முடிவடைந்தால் தலா 1 புள்ளியும் வழங்கப்படும்.
7. இச் சுற்றுப்போட்டியானது TBU (Tamilsk Boldspil Union) இன் சட்ட விதிகளுக்கமைய நடைபெறும்.


## 4ம் ஆண்டு நினைவு அஞ்சலி

அன்னை மடியில் 31.10.1980



ஆண்டவன் பாதத்தில் 18.07.1994

## கோபாலபிள்ளை ஆனந்தலட்சுமி (கௌரி)

அன்பிற்கோர் அணையா விளக்காய் உதித்த
ஆருயிர்ச் செல்வமே அனந்தா
மலரே நீ மலர்ந்து மணம் வீசும் முன்
சருகானதேன் மரணத்தின் பிடியில்
உன் இளமைப் பருவம் வாட்டுதம்மா இதயங்களை
உயிரில்லா ஓவியமே ஆனந்தா
உனையெண்ணி உருகுகின்றோம் உள்ளத்தால்
பாரதில் பதினான்கு ஆண்டுகள் போதுமென்று
பாரதத்தில் பாதிவழி சென்றனையோ
பாசமுள்ள தங்கையே உன் பால்வடியும் முகமும்
காணாது பரிதவிக்கின்றோம் அம்மா
சோகங்களால் வாழ்வை ஜீரணிக்க முடியாமல்
உன் பாதங்களில் கண்ணீரால் அஞ்சலி
செலுத்துகின்றோம்

'மென்மையான உள்ளங்கள் மட்டுமே தனக்கு
சொந்தம் என்பதற்காக இறைவன் தன்னிடம்
மலர்களை சேர்த்துக்கொண்டான்'

என்றும் உன் பிரிவால் துயருறும்
ஐயா, அம்மா, அண்ணன்மார், அண்ணிமார் மருமக்கள்

தகவல்
கோ. யோகநாதன்

Pub

## முதலாம் ஆண்டு நினைவாஞ்சலி

தாயின் மடியில் முத்தாக: 18.08.1980



தாயக மண்ணில் வித்தாக: 06.08.1997

## பொன்னுத்துரை வரதலிங்கம் (ஜீவன்)

(வசாவிளான் தெற்கு வசாவிளான்)

நெஞ்சம் எல்லாம் வாழ்ந்த எங்கள் ஜீவா நீ எங்களுடன் பண்பும்,
பாசமும் நிறைந்தவனாய் வாழ்ந்தாய்
உன் சின்ன வயதில் எங்களை எல்லாம் சிரிக்க வைத்தாய்
பள்ளி வயதினிலே பாசறை புகுந்து பாயும் புலியானாய்.
தலைவன் வழியிலே தாய்மண் மீட்கவென
புயலெனப் புறப்பட்ட வரிப்புலியே
வெற்றி நிச்சயமென வெளிக்கிட்ட எதிரியினை
புளியங்குளத்தில் வைத்து புறமுதுகு காட்டவைத்து
விடுதலை வேள்வியில் தணலாகிப் போனவனே
செந்தமிழர் புகழ் காக்க செம்மையாய் நின்றவனே
மண்ணில் நீ மறைந்தாலும் எங்கள் கண்களில் என்றும் நிறைந்தவனே
ஆண்டு ஒன்று ஆனாலும் உன் நினைவு எம்மைவிட்டு நீங்காதடா

இவ்வெற்றிச் சமரில் இவருடன் வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட ஏனைய போராளிகளுக்கும் எமது ஓராண்டு நினைவஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

என்றும் உன் நினைவுடன்
அப்பா, அம்மா, சகோதரர்கள், அண்ணிமார், அத்தான்மார், உறவினர்கள்.

தகவல்:
பொ. ஞானலிங்கம் (வவி) (சுவிஸ்) தொலைபேசி: 0041622913256
பொ. யோகலிங்கம் (கடவுள்) (ஜேர்மனி) தொலைபேசி: 00491727252144

Pub

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழமுரசு வாசகர் கருத்துக் கணிப்பு - 2

புகலிட நாட்டிலிருந்து வெளிவரும் தமிழ் தேசியப் பத்திரிகை என்ற வகையில் ஈழமுரசு தன்னுடைய பயணப் பாதையில் தனது பணியை சுய மதிப்பீடு செய்து கொள்வதற்காக வாசகர் கருத்துக் கணிப்பு ஒன்றை நடாத்துவதற்கு முன்வந்திருக்கிறது. ஈழ முரசினுடைய வளர்ச்சியிலும் அதனுடைய வருகையிலும், தரத்திலும் அக்கறை கொண்ட அனைத்து வாசகர்களும் இந்தக் கருத்துக் கணிப்பில் இயன்றவரை பங்கெடுத்து ஈழமுரசு முகவரிக்கு இந்தப் படிவத்தை அனுப்பி வைத்து எமக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம். - ஆர்

1. **நீங்கள் ஈழமுரசின் சந்தாதாரரா?** ஆம் ☐ இல்லை ☐ (ஆம் எனில் சந்தா இல.-------)
2. **சந்தாதாரர் இல்லை எனில், மாதத்தில் எத்தனை முறை ஈழமுரசு வாங்குகின்றீர்கள்?**
   வாரந்தோறும் ☐ இரண்டு வாரத்துக்கு ஒரு முறை ☐ ஒரு வாரம் மட்டும் ☐ எப்போதாவது ☐
3. **ஈழமுரசு இதழைப் படிக்க எவ்வளவு நேரம் செலவு செய்கின்றீர்கள்?**
   1/2 மணி நேரம் ☐ 1 மணிநேரம் ☐ 2 மணிநேரமும் ☐ அதற்கு மேலும் ☐
4. **கீழே தரப்பட்டுள்ள ஈழமுரசின் பக்கங்களை எப்படிப்படித்து வருகின்றீர்கள்?**

| | வழக்கமாக | எப்போதாவது | படிப்பதேஇல்லை |
|---|---|---|---|
| சாஎரம்.............. | ☐ | ☐ | ☐ |
| சினிமா.............. | ☐ | ☐ | ☐ |
| சிறுகதை.............. | ☐ | ☐ | ☐ |
| பெண்கள்.............. | ☐ | ☐ | ☐ |
| சிறுவர்.............. | ☐ | ☐ | ☐ |
| தொடர்கதை.............. | ☐ | ☐ | ☐ |
| தொடர்கட்டுரை.............. | ☐ | ☐ | ☐ |
| அழிவு + தவறு.............. | ☐ | ☐ | ☐ |
| அருமைத்தம்பி.............. | ☐ | ☐ | ☐ |
| எதுகைமோனை.............. | ☐ | ☐ | ☐ |
| நடைபாதைக் குறிப்பு.............. | ☐ | ☐ | ☐ |
| கேள்வி பதில்.............. | ☐ | ☐ | ☐ |
| நாற்று.............. | ☐ | ☐ | ☐ |
| விளையாட்டு.............. | ☐ | ☐ | ☐ |
| புகலிடம்.............. | ☐ | ☐ | ☐ |
| அரசியல் பார்வை.............. | ☐ | ☐ | ☐ |
| பண்ணையார்.............. | ☐ | ☐ | ☐ |
| ஆசிரியர் தலையங்கம்.............. | ☐ | ☐ | ☐ |
| அரசியல் ஆய்வுகள்.............. | ☐ | ☐ | ☐ |

5. **ஈழ முரசில் வரும் செய்திகள் எப்படியிருக்கின்றன. அவற்றை விரும்பிப் படிக்கின்றீர்களா?**

| | விருப்பம் | | | தரம் | | |
|---|---|---|---|---|---|---|
| | அதிகம் | ஓரளவு | குறைவு | நல்லது | பரவாயில்லை | மோசம் |
| உலகம்.............. | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ |
| இந்தியா.............. | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ |
| தமிழீழச் செய்தி.............. | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ |
| யாழ் செய்தி.............. | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ |
| உட்பக்க செய்தி(பொது).............. | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ |
| முன்-பின் பக்கங்கள்.............. | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ |

6. **நீங்கள் ஈழமுரசின் நிரந்தரமான வாசகராக அல்லது சந்தாதாரராக இருந்தால் எதற்காக ஈழமுரசை வாங்குகின்றீர்கள்?**
   செய்திகளுக்காக.............. ☐
   இராணுவ அரசியல் ஆய்வுகளுக்காக.............. ☐
   இலக்கிய விடயங்களுக்காக.............. ☐
   வேறு விடயங்களுக்காக.............. ☐ (விபரம் குறிப்பிடவும்)
7. **நீங்கள் எப்போதாவது ஈழமுரசு வாங்குபவராக அல்லது முதல் தடவையாக ஈழமுரசு வாங்குபவராக இருந்தால், எந்த அடிப்படையில் அதை வாங்கத் தீர்மானித்தீர்கள்?**
   ★ தலைப்பு செய்திகளால் ஈர்க்கப்பட்டதால் ☐
   ★ கடைகளில் ஒட்டப்பட்டிருந்த ஈழமுரசு விளம்பரப் படுத்தியில் உள்ள கட்டுரைத் தலைப்புகளைப் பார்த்து ☐
   ★ ஈழமுரசில் நல்ல விடயங்கள் வருவதாக நண்பர்கள் சிபார்சு செய்ததனால் ☐
8. **ஈழமுரசில் இடம்பெறும் கலந்த சொற்கள் சொற்சிலம்பம், உங்களுக்கு திருப்தியளிக்கிறதா?** ஆம் ☐ இல்லை ☐
   இல்லையென்றால் காரணம்..............................
9. **ஈழமுரசின் கீழ்காணும் அம்சங்களில் உங்கள் கருத்தை குறிப்பிடுங்கள்**

| | மிகச் சிறந்தது | நன்று | மோசம் |
|---|---|---|---|
| ஓட்டு மொத்த உள்ளடக்கம்.............. | ☐ | ☐ | ☐ |
| செய்திகளின் மொழிநடையும் அமைப்பும்.............. | ☐ | ☐ | ☐ |
| கட்டுரைகளின் மொழிநடையும் உள்ளடக்கமும்.............. | ☐ | ☐ | ☐ |
| பத்திரிகையின் வடிவமைப்பு.............. | ☐ | ☐ | ☐ |
| முன்பின்பக்க வடிவமைப்பு.............. | ☐ | ☐ | ☐ |
| பத்திரிகையின் ஆவணப்பயன்பாடு.............. | ☐ | ☐ | ☐ |

10. **உங்கள் வீட்டில் ஐரோப்பிய தமிழ் வானொலிகளை கேட்கும் வாய்ப்புண்டா?**
    ஆம் ☐ இல்லை ☐
11. **ஈழமுரசில் விசேடமான தொடர்கள் கட்டுரைகள் இடம்பெறவேண்டும் என்று விரும்புகின்றீர்களா?** ஆம் ☐ இல்லை ☐
    விரும்பினால் - எந்தமாதிரியான விடயங்கள் என்று குறிப்பிடவும்..............................
    ..............................
12. **ஈழமுரசு இதழை மேம்படுத்த உங்கள் ஆலோசனைகள்**..............................
    ..............................

**பெயர்:**..............................
ஆண் ☐ பெண் ☐
**முகவரி:**..............................
..............................
.............. நாடு..............
தொலைபேசி இலக்கம்:..............
தொலைநகல் இலக்கம்:..............

**வயது:** 25 க்கு கீழ் ☐
25 35 வரை ☐ 35 க்கு மேல் ☐
**உங்களது வதிவிட நிலை**
அகதி அந்தஸ்து பெற்றவர் ☐
தற்காலிக அனுமதி பெற்றவர் ☐
வதிவிட அனுமதிப் பத்திரமின்றி இருப்பவர் ☐

ஈழமுரசு முகவரிக்கு இப் படிவத்தை அனுப்பி வைக்கவும்

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## மேஜர் சிட்டு (தங்கத்துரை)

### சிற்றம்பலம் அன்னலிங்கம்

கடந்த ஆண்டு 01.08.97 அன்று 'ஜெயசுக்குறுய்' ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கெதிரான திருப்பு முனையான போர்க்களத்தில் விதையாக வீழ்ந்த அனைத்து போராளிகளுக்கும் வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேஜர் சிட்டு 1990 ஆண்டு தன்னை போராட்டத்தில் இணைத்துக் கொண்டார். இவர் ஒரு சிறந்த கலைஞனாக தமிழீழ மக்கள் நெஞ்சங்களில் நிறைந்திருந்தார். சுமார் 70 ற்கு மேற்பட்ட தமிழீழ எழுச்சிப் பாடல்களைப் பாடி சிறந்த தமிழ்ப் பாடகர் என்ற பாராட்டையும் மக்கள் மத்தியில் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.
இவரது பாடல்களில் சிலவற்றை என்றும் நாம் மறக்க முடியாது.

1. கண்ணீரில் காவியங்கள் செந்நீரில் ஓவியங்கள்.
2. புலி ஒரு காலம் பணியாது எந்தப் படை வந்த போதும் சரியாது.
3. விழிகளை மூடி குழிகளில் உறங்கும் வீரக்குழந்தைகளே
4. ஓட்டிகளே; பட கோட்டிகளே
5. மூசுமலை பேசவில்லையா துறைமுகத்தில் அனல் எழுந்து வீசவில்லையா
6. சோலையிலே பாடும் செஞ்சோலையிலே பாடும்...
7. சின்னச் சின்ன கண்ணில் ஒரு மின்னல் வந்து விளையாடும்...
8. நிறைகுடத்தை ஏந்திக் கொண்டு ஊர்முழுதும் திரிவதா...
9. வெற்றி பெற்றுத் தந்து விட்டு நீர் உறங்குகிறீர்...
10. வாழ்க வாழ்க ஒளி வீச்சு.


தொடர்புகள்: சகோதரன்
சிற்றம்பலம் நாகலிங்கம்
தொலைபேசி: 78988147

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீண்டும் உங்கள் திருப்திக்காக

# வூட்லன்ஸ் கோல்

## தொலைபேசி அட்டை வெளியாகிவிட்டது




**60 UN**

~~50 Frs TTC~~

**48 Frs TTC**

**120 UN**

~~100 Frs TTC~~

**88 Frs TTC**




| | |
|---|---|
| இந்தியா | 45 நிமிடங்கள் |
| இலங்கை | 40 நிமிடங்கள் |
| ஐரோப்பா | 70 நிமிடங்கள் |
| பிரித்தானியா | 100 நிமிடங்கள் |
| அமெரிக்கா | 100 நிமிடங்கள் |
| கனடா | 100 நிமிடங்கள் |

இன்று பல நாடுகளுக்கும் மிகக்குறைந்த விலையில் அதிக நிமிடத்துடன் தெளிவான தொனிவுடன் உரையாடுவதற்கு பாரிசில் முன்னனி தொலைபேசி அட்டையான Woodlands Call வாங்கி ஓர் முறை பேசிப்பாருங்கள்!

**ஒரு மாத விலைகுறைப்பு**

நல்ல சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள்!!

தொடர்புகளுக்கு: வூட்லன்ஸ் உணவகம்

**207, Rue Fg. St. Denis, 75010 Paris.**

**Tel: 0140370820 / Fax: 0140372820**

மிக விரைவில் லண்டன், ஜேர்மனி, சுவிஸ், டென்மார்க், இத்தாலி, இலங்கை, இந்தியா இன்னும் பல நாடுகளுக்கு விஸ்தரிக்கப்படும்.

**விநியோகத்தர்கள் தேவை**

**அரிய சந்தர்ப்பங்களை நழுவவிடாதீர்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாணயமாற்று விகிதம்

| | $ | DM | £ | FFr | S.Fr |
|---|---|---|---|---|---|
| நியூயோர்க் | – | 1.77 | 0.61 | 5.95 | 1.49 |
| பிராங்பேட் | 0.56 | – | 2.90 | 0.29 | 1.19 |
| லண்டன் | 1.63 | 0.34 | – | 0.10 | 0.40 |
| பாரிஸ் | 0.17 | 3.35 | 9.89 | – | 0.25 |
| சூரிச் | 0.67 | 0.84 | 2.47 | 3.99 | – |
| பம்பாய் | 42.50 | 23.93 | 69.42 | 7.14 | 28.54 |
| கொழும்பு | 65.85 | 37.08 | 107.55 | 11.05 | 44.22 |

ஈழத்தமிழர் உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் ஆதரவில்

**காயத்திரி ஸ்தாபனம்**
நடாத்தும்

# உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

காலம்: **09.08.1998 ஞாயிறு**
நேரம்: **காலை 9.00 மணி**

இடம்:
Porte de Pantin **மைதானம்**

## மரண அறிவித்தல்

மலர்வு: 13.06.1954



மறைவு: 21.07.1998

### ஸ்ரீ பத்மநாதன் பொன்னையா

தமிழீழம் புலோலி தெற்கைச் சேர்ந்தவரும் பிரான்சில் வசித்து வந்தவருமாகிய ஸ்ரீ பத்மநாதன் (பத்தன்) பொன்னையா அவர்கள் 21.07.98 செவ்வாயன்று பிரான்சில் அகால மரணமடைந்துவிட்டார்.

இவர் பொன்னையா தர்மபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும் மீனாம்பிகையின் அன்புக் கணவரும் பத்மமீரன், பத்மசீலன், பத்மலன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், காந்திமதி, ஈஸ்வரிதேவி, பாக்கியநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆனந்த சுப்பிரமணியம், சிவஞானஸ்கந்த மூர்த்தி, நாகேந்திரராஜா, மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் கணபதிப்பிள்ளை செல்வநாயகி தம்பதிகளின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 06.08.98 வியாழக்கிழமை Institut Medico - Legal, Quai de la Rapée, 75012 Paris இல் 8.30 மணியிலிருந்து 9.30 மணி வரை பார்வைக்கு வைக்கப்பட்ட பின் CREMATORIUM, Pere Lachaise, 75020 Paris என்ற முகவரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு, 10.30 மணியளவில் இறுதிக் கிரியைகள் செய்யப்புட்ட பின் தகனம் செய்யப்படும்.

*தகவல் - மனைவி, பிள்ளைகள்.* - Tel: 01/47/26/71/11

Pub

# 177 லொறிகளுக்கு இராணுவம் அனுமதி மறுப்பு

வன்னி, மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கு வவுனியா இராணுவ கட்டுப்பாட்டு பகுதியிலிருந்து உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் ஏற்றிச் செல்லும் 302 லொறிகளில் 177 லொறிகளுக்கு வழங்கப்பட்ட அனுமதியை வவுனியா இராணுவம் இரத்துச் செய்துள்ளது. வன்னி மாவட்டங்களுக்கான அத்தியாவசியப் பொருள் விநியோகத்தில் பெரும் சீர்குலைவினை ஏற்படுத்திவரும் சிறீலங்கா அரசின் தொடர் நடவடிக்கைகளில் இந்த அனுமதி மறுப்பும் ஒன்றாகும். இராணுவத் தரப்பின் இந்த மனிதாபிமானமற்ற நடவடிக்கையினைக் கண்டித்து போராட்டம் நடாத்த லொறி உரிமையாளர்களும், சாரதிகளும், உதவியாளர்களும் முடிவெடுத்துள்ளனர்.

## செம்மணி விடயத்தை ஆராய ஒரு குழு வேண்டும்

### ஐ.நா. உப ஆணைக்குழுவில் கோரிக்கை

ஜெனிவா-மனித உரிமை உப ஆணைக்குழுவின் 50வது கூட்டுத்தொடர் இன்று ஆரம்பமாகியுள்ளது. இக் கூட்டத்தொடர் தொடர்ந்து இம் மாதம் 28ம் திகதி வரை பல நாடுகளின் மனித உரிமை மீறல்கள் பற்றி ஆராயவுள்ளது.

'தமிழர் மனித உரிமை மையத்தின் தலைமைக் காரியாலயத்தினால் இக்கூட்டத் தொடரின் தலைவருக்கும் மற்றைய அங்கத்துவர்களுக்கும், இதில் கலந்துகொள்ளும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் இலங்கைத் தீவில் தமிழர்களின் தாயக பூமியில் அரச பயங்கரவாதத்தினால் மக்கள் படும் கஸ்டங்களையும், மனித உரிமை மீறல்களையும் தொகுத்து ஓர் அறிக்கையாகக் கையளித்துள்ளது.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### சித்தாண்டியில்....

டுள்ளன.

கிரான் முகாமினைச் சேர்ந்த சிப்பாய்களே விடுதலைப் புலிகளின் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களாவார்கள். புலிகளின் தாக்குதலையடுத்து தமது பழிவாங்கும் தாக்குதல்களை பொது மக்கள் மீது கட்டவிழ்த்துவிட்ட படையினர் 82 வயதான முதியவர் ஒருவரையும் 34 வயதான லீலாதேவி என்ற பெண்மணியினையும் சுட்டுப் படுகாயப் படுத்தப்பட்டுள்ளனர்.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### சிறீலங்கா விடயத்தில்....

ஏற்றுமதி - இறக்குமதி நடவடிக்கைகளையும் நிறுத்தவேண்டும். கால தாமதம் செய்யாது தமிழ் மக்களுக்கு நீதி கிடைப்பதற்கு அவுஸ்திரேலியா நடவடிக்கை எடுக்கவேண்டும் போரில் வெல்லமுடியாது என்ற நிலையினை சிறீலங்கா அரசிற்கு தெளிவாக்கவேண்டும் என்பதாகும்.

இவ்வாறு திரு. போல் சமித் தெரிவித்துள்ளார்.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### பிரித்தானிய....

புலிகள் நிதி சேகரிப்பு பற்றி பிரித்தானியாவில் வாழும் தமிழ் மக்கள் முறைப்பாடுகள் எதுவும் செய்வதில்லை என தான் உணர்ந்து கொள்வதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### படுவான்கரையில்....

பண்ணை ஒன்றின் மீது குண்டுகளை வீசின. குண்டு வீச்சுக்கு இலக்கான பாற்பண்ணை சேதமடைந்ததுடன் அங்கு நின்ற சிறுவன் உடல் சிதறி பலியாகியுள்ளான். இத் தாக்குதலின் போது எட்டுப் பசுக்களும் கொல்லப்பட்டுள்ளன.

**உத்தியோகபூர்வ**
## மொழிபெயர்ப்புச் சேவை
(கிருஷ்ணபிள்ளை மாயவன்)

உங்கள் சகல மொழிபெயர்ப்புத் தேவைகள், பிரெஞ்சு நிர்வாக - நீதிமன்றத் தேவைகள் மற்றும் தொழில் நிறுவனங்களில் ஏற்படும் பிரச்சினைகள் போன்றவற்றுக்கான சட்ட ஆலோசனைகளுக்கு கடந்த 14 ஆண்டுகளாக அரசாங்க அங்கீகாரம் பெற்று பாரிஸ் நகரில் (பாரிஸ்-18 - மெத்ரோ மார்க்கடே புவசொனியேயில்) சேவையாற்றி வரும் நாம் எமது அலுவலகத்தை தற்போது புதிய முகவரிக்கு இடமாற்றம் செய்துள்ளோம்

எமது மொழிபெயர்ப்புத் தேவைகள் சகல நீதி – நிர்வாக அலுவலகங்களினாலும் வெளிநாட்டுத் தூதரகங்களினாலும் எற்றுக்கொள்ளப்படும்

புதிய முகவரி:
39, Bld. de la Chapelle, 75010 Paris.
(Mo: La Chapelle / Gare du Nord)
Tel / Fax: 01 40 34 53 41 - Port: 06 14 89 68 07
(எம்.ஜி.ஆர். வீடியோ & ரெக்ரைல்ஸ் நிறுவனத்தினுள்ளே, ஈழநாடு, தமிழாலயம் நிறுவனங்களுக்கு அருகாமையில்)

## 3ம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 01.08.1965



ஆண்டவன் அடியில் 06.08.1995

### தங்கவேல் கிருஸ்ணகுமார் (குமார்)

பருத்தித்துறை

மூன்றாண்டாய் வாடுகின்றோமய்யா
முழுநிலவான உன்முகம் காணாது
ஆண்டு பல ஆனபோதும்
அழியாதைய்யா உன் நினைவு எம் மனம் விட்டு

உன் பிரிவால் தினம் வாடும்
குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள்.

தகவல் - குடும்பத்தினர்.
T.P.: 004998312076 ஜேர்மனி / 00491724513780 ஜேர்மனி
0055300835 பிரான்ஸ்

Pub

**AMV**
IMPORT - EXPORT

அனைத்து மீன் வகைகளும் மொத்த விலையில் கொடுக்கப்படும். மரக்கறி வகைகளும் மலிவான விலையில் மொத்தமாகப் பெற்றுக்கொள்ளலாம். Rungis மரக்கறி வகைகளும் மொத்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

208, Rue du Fbg. St. Denis,
75010 Paris.

ஏற்றுமதி இறக்குமதியாளர்கள்

Tel: 01 44 72 91 25
Fax: 01 44 72 91 30

Pub

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழமுரசு
Eelamurasu Weekly

அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

மேற்கு லண்டன் மாநகரில்
துவாரகா
Cash & Carry
இல்லை என்பது இங்கில்லை
Nº: 199, The BROADWAY, Southall, Middx. T.P: 0181 / 813 9126

# சிறீலங்கா இனப்பிரச்சினையில் அவுஸ்திரேலிய அரசின் மௌனம் கவலையானது - அவுஸ்திரேலிய பாராளுமன்ற உறுப்பினர்

சிறீலங்கா அரசினால் தமிழ் மக்கள் கொலைசெய்யப்படுவது, சித்திரவதைக்குள்ளாக்கப்படுவது, அவர்களது வாழ்விடங்கள் அழிக்கப்படுவது போன்ற விடயங்களில் அவுஸ்திரேலிய அரசின் மௌனமும், மெத்தனமும் அவுஸ்திரேலிய நாட்டின் ஜனநாயகத்திற்கு ஏற்பட்ட ஒரு துன்பமான விடயமாகும்.

இவ்வாறு அவுஸ்திரேலிய பாராளுமன்ற உறுப்பினரான திரு. போல் சமிற் வணபிதா கலாநிதி எஸ்.ஜே இமானுவேல் அவர்களை சந்தித்தபோது குறிப்பிட்டுள்ளார்.

'சிறீலங்கா அரசின் படுபாதகமான மனிதவுரிமை மீறல் சம்பவங்களும், மனிதாபிமான உதவி நிவாரணங்கள் வட தமிழர்களை சென்றுவிடாமல் தடுக்கும் திட்டமிட்ட வழிவகைகளும் ஏற்கனவே பல பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளன.

இவ்வேளை யாழ்ப்பாணத்தில் புதைக்கப்பட்ட தமிழ் மக்களது புதைகுழிகள் பற்றிய விபரங்கள் வெளியாகியுள்ளன இவ்வாறான நடவடிக்கைகளை சிறீலங்கா அரசு மேற்கொள்வதை தெரிந்துள்ள அவுஸ்திரேலிய அரசு சிறீலங்கா அரசினை கண்டிக்கத் தவறியுள்ளமை உண்மையிலேயே அவுஸ்திரேலியாவிற்கே அபகீர்த்தியாகும்.

இவ்வேளை அவுஸ்திரேலிய அரசிடம் நான் விடுக்கும் வேண்டுகோள் என்னவெனில் பொதுநலவாய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் சிறீலங்கா அரசிற்கு அவுஸ்திரேலியா வழங்கும் நிதி உதவிகளையும்,

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## வவுணதீவு விமான தளத்தினுள் கரும்புலிகள் ?

மட்டக்களப்பு வவுணதீவிலுள்ள சிறீலங்கா விமானப் படைத்தள வளாகத்தினுள் கரும்புலிகள் அணியொன்று ஊடுருவியுள்ளதாக கிடைத்த தகவலைத் தொடர்ந்து விமானப் படைத் தளமும் அதன் சுற்றாடல் பகுதியும் அதி உசார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 30-ம் திகதி புலிகளின் அணியொன்று மட்டு வாவியினூடாக படகொன்றின் மூலமாக வந்து வவுணதீவு கரையில் இறங்கி விமான தள பகுதியில் நடமாடியுள்ளார். இத் தகவல் படையினருக்கு எட்டியதும் அவர்கள் அப்பகுதியில் வான், தரை ஆகிய மார்க்கங்களில் தேடுதல் நடாத்திய போதிலும் ஊடுருவிய புலிகள் குழுவினரை கண்டுபிடிக்க முடியவில்லை. இவர்கள் விமானத் தள வளாகத்தினுள்ளே ஊடுருவி மறைந்துள்ளனரென படைத் தரப்பு ஊகித்திருப்பதால் மேலும் தீவிர தேடுதல்கள் தற்போது மேற்கொண்டு வருகிறது.

ஊடுருவிய அணி கரும்புலிகள் அணியாக இருக்கலாமென படையினர் சந்தேகிப்பதால் விமான ஓடுபாதை பகுதியை 24 மணிநேர தீவிர கண்காணிப்பிற்கு உட்படுத்தியுள்ளனர்.

இதேநேரம் இப் பகுதியிலுள்ள வீடுகளிலும் படையினர் தேடுதல்களை நடாத்தி வருகின்றனர். சந்தேகத்தின் பேரில் ஒரு இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

## படுவான்கரையில் கிபீர் குண்டுவீச்சு

படுவான்கரை பகுதியில் சிறீலங்காப்படையினர் நடாத்திய குண்டு வீச்சு தாக்குதலில் பாற்பண்ணை ஒன்று அழிக்கப்பட்டுள்ளதுடன், ஒரு சிறுவனும் கொல்லப்பட்டுள்ளான்.

கடந்த 2-ம் திகதி காலை எட்டுமணியளவில் சூத்தையன் வத்தை பகுதியில் தோன்றிய கிபீர் 'விமானங்கள்' அப்பகுதியில் அமைக்கப்பட்டிருந்த பாற்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## பிரித்தானிய சட்டங்களுக்கு உட்பட்டே புலிகளின் நிதி சேகரிப்பு இடம்பெறுகிறது - பிரித்தானிய தூதர்

பிரித்தானிய நாட்டின் சட்டவிதிகளை மீறாதவரை எந்த நிறுவனங்களும் பிரித்தானியாவில் நிதி சேகரிக்க முடியும். பிரித்தானியாவின் சட்டங்கள் மீறும்போதுதான் அவற்றை நாம் தடைசெய்யமுடியும்.

இவ்வாறு சிறீலங்காவிற்கான பிரித்தானிய தூதர் டேவிட் தத்தம் கொழும்பு ஆங்கிலப் பத்திரிகைக்கு அளித்த பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்...பிரித்தானியாவில் விடுதலைப் புலிகள் நிதி சேகரிப்பில் ஈடுபடுகிறார்கள் எனத் தெரிந்திருந்தும் 'பிரித்தானிய அரசு ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை எனக் கேட்கப்பட்டபோதே தூதர் மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார்.

விடுதலைப் புலிகளால் வருடாந்தம் பிரித்தானியாவில் சேகரிக்கப்படும் பணத்தொகை பற்றிக் கேட்கப்பட்டபோது அதுபற்றிய விபரங்களை தெரிவிக்க மறுத்த தூதர் விடுதலைப்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## நெல்லியடியில் 14 பேர் கைது

பருத்தித்துறை நெல்லியடியில் சிறீலங்காப் படையினரால் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த 14 பேர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 8 வயதுச் சிறுமி ஒருவரும் அடங்குகிறார்.

விடுதலைப் புலிகளின் பெண் போராளிகள் இருவருக்கு உதவி செய்தமையாலேயே இவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள் எனவும் படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

பருத்தித்துறை முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இவர்களில் குடும்பத் தலைவர்களையும் அவர்களது மனைவியரையும் தவிர ஏனையோர் அனைவரும் 25 வயதிற்கு உட்பட்டவர்களாவார்கள்.

## சித்தாண்டியில் இரு சிப்பாய்கள் பலி

மட்டக்களப்பு சித்தாண்டிப் பகுதியில் விடுதலைப் புலிகள் அணியொன்றினை மடக்குவதற்காகவென வந்த சிறீலங்கா படையினரின் அணி மீது விடுதலைப் புலிகள் தொடுத்த தாக்குதலில் இரு சிப்பாய்கள் பலியாகியுள்ளனர்.அவர்களிடமிருந்த ஆயுதங்களும் கைப்பற்றப்பட்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

லண்டனில் புதுப் பொலிவுடன்
கணபதி தமிழ்க்கடை
உடன் மரக்கறி வகைகள், கடலுணவுகள், மளிகைப் பொருட்கள்
உங்கள் அனைத்து தேவைகளையும் ஒரே இடத்தில் பூர்த்தி செய்வதற்கு

Ganapathy Food & Wine
34, Ealing Road Wembley, Middx, Hao 4TL, U.K
Tel: 0181 -903 3184 / Fax: 0181 -903 3185
நண்டு £3.99
அறக்குளா (King Fish) } £2.99
இறால் £1.49
விளைமீன் கும்பிளா சீலா } £2.99
மரக்கறி (நம்நாட்டு வகை) .99Pence

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org